


# கோபுரம்



தகவல் இதழ் • சர்வதாரி வருடம் கார்த்திகை 2008



மத விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்



# கோபுரம்

## தகவல் இதழ்

**சர்வதாரி வருடம்**
மலர் 17

**கார்த்திகை 2008**
இதழ் 03

## தொகுப்பு

### ஆய்வுப்பிரிவு

### மலர்க்குழு

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**
*பணிப்பாளர்*

**திரு.ம.சண்முகநாதன்**
உதவிப்பணிப்பாளர் (ஆலயம்)

**திருமதி தேவகுமாரி ஹரன்**
*சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர்*

**திருமதி நித்தியவதி நித்தியானந்தன்**
*ஆராய்ச்சி அலுவலர்*

**செல்வி நந்தினி சண்முகலிங்கம்**
*அபிவிருத்தி உதவியாளர் (ஆராய்ச்சி)*

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**இல. 248 1/1, காலி வீதி, கொழும்பு - 04**

**தொலைபேசி இல: 2552643** **தொலைநகல்: 2552825**

# எண்ணம்

மனிதனது எல்லாப் பிரச்சனைகளுக்கும் மூலகாரணம், மனம். மனம் கோணலாக இருக்குமென்றால் எல்லாம் எதிரிடையாகத் தெரிகின்றன. மனமும் வார்த்தையும் ஒன்று போலவே இருக்குமானால் எல்லா ஆன்மீக சாதனைகளிலும் வெற்றி காணலாம் என்பது ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர் வாக்கு. மனதையும் வார்த்தைகளையும் ஒன்றுபடச் செய்வது என்பது மிகவும் உயர்ந்த ஆன்மீக சாதனையாகும். உள்ளும் புறமும் ஒன்றுபடாத போது தான் எல்லாத் தொந்தரவுகளும் அமைதியின்மையும் ஏற்படுகின்றன.

இறைவனை அடைய வேண்டும் என்ற நோக்கம் சிறந்தது. ஆயினும் மனதில் அமைதியின்மை, பொறுமை இழத்தல், மனம் உடைந்து போதல் என்பவை அந்நோக்கத்தினை எய்வதற்குத் தடையாக அமைந்துவிடுகின்றன. மனதில் நிறைவு இருக்குமெனில் வாழ்க்கை சந்தோஷமானதாக அமையும்.

இன்றைய காலத்தில் பல மனிதர்கள் தங்கள் மனங்களில் சுயநலந் தழுவிய எண்ணங்களை நினைத்து வருவதனால் உலகில் யுத்தங்கள் தொடர்ந்து நடந்து அழிவை ஏற்படுத்தி வருகின்றன. சத்தியத்திற்கும் நியாயத்திற்கும் சாவு மணி அடிக்கப்பட்டு அராஜகம் தலை விரித்தாடுகின்றது.

தங்களுடைய மனங்களில் கெட்ட எண்ணங்களை அனுமதிப்பவர்கள் இந்த உலகத்தில் இருக்கும் கெட்ட சக்திகளின் கைகளை ஓங்கச் செய்து நியாயத்தையும், தர்மத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சியில் ஈடுபடுவோருக்கு உதவி செய்து வருகின்றார்கள்.

இதற்கு மாறாகத் தங்கள் மனங்களை வென்று கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவர்கள் மனித இனத்திற்கு நன்மை தரும் எண்ணங்களை நினைத்து அவைகளைச் செய்து முடிக்கப் பாடுபட்டு உழைத்து வருவார்கள். இதனால் நல்ல பண்புகள், கலைகள் செழித்து சிறந்த நாடு உருவாகும். நாம் வாழ்ந்து வரும் உலகம் அமைதிப் பூங்காவாக மாறும். மக்கள் ஒருவரை ஒருவர் விரும்பி அன்புடன் நடந்து கொள்வார்கள். மனித வாழ்க்கை தேனாக இனிக்கும்.

நாம் வாழ்ந்து வரும் உலகத்தை அழிந்து விடாது காப்பாற்ற நாம் அனைவரும் அமைதியைப் போற்றி, அதைப் பாதுகாக்கவும் அன்பின் பெருமையைப் பறைசாற்றவும் நல்ல கலைகளை வளர்க்கவும் மனித இனம் பயன் அடையும் வகையில் எண்ணங்களையும் சிந்தனைகளையும் வளர்க்க வேண்டும்.

இருப்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு மனநிறைவுடன் வாழ்ந்து வருவதைப் பற்றிய எண்ணங்கள் வளர வேண்டும். மனிதன் எப்படித் தன் மனதைப் பயன்படுத்திக் கொள்கிறான் என்பதைப் பொறுத்தே அவனது எதிர்கால வாழ்க்கை அமையும். எதிர்கால இளம் சந்ததியினர் இத்தகைய தன்மையை பொருந்தியவர்களாக உருவாக்க வேண்டிய கடமைப்பாடு பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூகம், ஆன்மீக நிலையங்கள் ஆகியவற்றைச் சார்ந்ததாகும்.

**மலர்க்குழு**

# இந்துக்களின் நீதி நூல்

பிரம்மன் (பிரம்மம்) எனப்படும் கடவுளும், ஆன்மா என்ற பெயரில் மனிதனுக்குள் இருப்பதும் ஒன்றே என்பது வேதம் கூறும் கோட்பாடாகும். அதுவே இந்துக்களின் நீதி நூலுக்கு அஸ்திவாரம். மனோதத்துவரீதியில் மனிதனை இயக்குவது ஆன்மாவே. அதுவே தெய்வீகமானது. 'அயம் ஆத்மா பிரம்ம' என்பதே இந்து நீதி நூல்களின் அடிப்படைப் போதனையாகும்.

மனிதன் உயிருடன் இருப்பதற்கு ஆன்மாவே முக்கியமாகிறது. அது அவனுடைய உடலினின்றும், உயிர்ச்சக்தியினின்றும், புலன்கள் மற்றும் மனத்தினின்றும் மாறுபட்டது. இந்த ஆன்மா எனப்பட்டது மனிதனின் அகம்பாவத்திலிருந்து மாறுபட்டது. இந்த 'நான்' எனப்படும் அகம்பாவமானது ஒரு கருத்து மட்டுமே ஆகும். அது உண்மையில் மனத்தோடு தொடர்புடையது. மனத்தோடு தொடர்புடைய அது ஆன்மாவாக இருக்க முடியாது. மனிதன் 'நான்' என்று குறிப்பிட்டுச் சொல்வதே 'ஆத்மன்' என்று வடமொழியில் சொல்லப்படுகிறது.

பிரம்மமானது எல்லையற்ற சமுத்திரத்திற்கு ஒப்பானது. அப்படியானால் ஆன்மாவானது அதிலுள்ள ஓர் அலையாகும். கடலானது அலைகளினின்றும் மாறுபட்டதன்று. அது போலவே அலைகளும் கடலினின்றும் மாறுபட்டதன்று. அவை இரண்டும் வெவ்வேறான தோற்றத்துடன் கூடிய ஒரே பொருள்.

பலவகைப்பட்டதான இந்தப் பிரபஞ்சமாகத் தோன்றுவது ஆன்மாவே. எனவே நான் எவரையாவது துன்புறுத்தினால் உண்மையில் என்னை நானே துன்புறுத்திக் கொள்வதாகும். ஆகையால் நான் எவரையும் துன்புறுத்தக் கூடாது. இதை உணர்ந்து கொள்வது மட்டுமே இந்துக்களின் நீதி நூல்களின் அடிப்படைக் கருத்தாகும்.

"ஆன்மாவில் எல்லா உயிர்களைப் பார்க்கின்றவனும் ஆன்மாவை எல்லா உயிர்களிலும் காண்பவனும் ஒருவரையும் வெறுக்க மாட்டான்" என்ற இக்கருத்தை ஈசா உபநிடதம் வெகு அழகாகக் கூறுகிறது. இந்த ஒருமைப்பாட்டினைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாத போதுதான் நம்மால் வெறுப்புணர்வைக் காட்ட முடியும். பிருஹதாரண்யக உபநிடதத்தில் யாஞ்யவல்கிய முனிவருக்கும் அவரது சீலம் மிகுந்த மனைவியான மைத்ரேயிக்கும் இடையே ஒரு சம்பாஷணை உள்ளது. அதில் யாக்ஞவல்க்கியர் கூறுகிறார் "எல்லா உயிர்களிடத்தும் இந்த ஆன்மாவைக் காணும் போது அனைவருமே நமக்கு வேண்டியவர்கள் ஆகிறார்கள்." இந்து மதத்தின் ஆன்மீகக் குறிக்கோள் எனப்படுவது அனைவரிலும் இந்த ஆன்மாவை உணருவதேயாகும்.

## தர்மம் அல்லது மதசம்பந்தமான கடமைகள்

'தர்மம்' எனப்படும் சொல்லானது இந்து மத நீதி நூலில் மிகவும் முக்கியம் வாய்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. பொதுவாகக் கூறுமிடத்து தர்மம் என்றால் மதம் என்று பொருள்படும். தவிர அறநெறி மற்றும் நீதி சம்பந்தமான நூல்களின்படி கடமை என்றும் சொல்லப்படுகிறது. மற்றும் ஒரு விதத்தில் "Dharayati dharma ity ahu" என்ற வாக்கியத்தின்படி "எது தாங்குகின்றதோ அதுவே தர்மம்" என்று வரையறுத்துக் கூறப்படுகிறது. நாம் உயிர் வாழ்வதற்கு அஸ்திவாரமாக இருப்பது அந்தக் தெய்வீக ஆன்மா. அதுவே நம்மைத் தாங்குகின்றது. ஆகவே தர்மம் என்ற சொல்லுக்கு உகந்த பொருளாக அமைவது மனிதனுக்குள் இருக்கும் தெய்வீக ஆன்மாதான். அதுவே ஆத்மன் எனப்படுவது.

அன்றாட வாழ்க்கை முறையில் அறநெறிப்படியும் நீதிநூலின்படியும் பார்த்தாலும் கூட இந்து மதத்தில் தர்மம் என்ற சொல் சிறிது மட்டரகமான பொருளுடையதாகவே கையாளபபடுகிறது. லௌகீக வாழ்க்கையில் பல்வேறு வகையான தர்மங்களைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அதாவது வியக்தி தர்மம் (Vyakti-dharma) எனப்படுவது தனி ஒரு மனிதன் அனுசரிக்க வேண்டிய தர்மமாகும். (Parivarika-dharma) பாரிவாரிக தர்மம் என்பது குடும்பத்திற்குரியது. (Samaja dharama) சமாஜ தர்மம் என்பது சமூகத்திற்காக உள்ளது. (Rashtra - dharma) ராஷ்டிர தர்மம் எனப்படுவது தேச சம்பந்தமானது. (Manava-dharma) மானவ தர்மம் என்பது மனித இனத்திற்காக உள்ள கடமையைக் கூறுவதாகும்.

நீதி மற்றும் அறநெறி சம்பந்தமான கொள்கைகளைக் கடைப்பிடிப்பதை யொட்டியே மனிதன் அறியப்படுகிறான். அதாவது அவன் சிறந்த நீதிமானாகவும் அறநெறியுடன் கூடியவனாக இருந்தால் அது அவனைக் காப்பாற்றும். சுகாதாரமானதும் ஆரோக்கியமானதுமான வழிகளைக் கடைப்பிடித்தால் அது அவனது உடலைப் பாதுகாப்பாக வைக்கும். இத்தகைய கொள்கைகளைத் தனி மனிதன் கடைப்பிடிப்பது வயிக்தி தர்மம் எனப்படுகிறது. இதைத் தவிர தனி மனிதன் கடைப்பிடிக்கக் கூடிய தர்மங்கள் கீழே பட்டியலிட்டுக் கூறப்பட்டுள்ளன. அவையும் வியக்தி தர்மத்தில் அடங்கும்:

1) **தம (Dama)** - புற உறுப்புக்களை அடக்கி ஆள்வது.

2) **ஆர்ஜவ(Arjava)**- எப்பொழுதும் ஒளிவுமறைவு இல்லாது திறந்த மனத்துடன் இருத்தல்.

3) **அஹிம்சா (Ahimsa)** - எவ்வுயிருக்கும் தீங்கு இழைக்காமல் இருத்தல்.

4) **அக்ரோதா (Akrodha)** - கோபப்படாதிருத்தல்

5) **சத்ய (Satya)** - எண்ணத்திலும் செயலிலும் வாய்மையைக் கடைப்பிடித்தல்

6) **பிரம்மசர்ய (Brahmacharya)** - உடல் சம்பந்தமான ஆசைகளையும் உணர்ச்சிகளையும் அடக்குதல்.

7) **சந்தோஷ (Santosha)** - மனநிறைவு, திருப்தி.

8) **தியாக (Tyaga)** - தன்னலத்தைத் துறத்தல்.

9) **அபைஷுண (Apaishuna)** - புறங்கூறாமலும் இழித்துப் பேசாமலும் இருத்தல்.

10) **அலோலுப்த்வ (Aloluptva)** - பேராசைப்படாதிருத்தல்.

11) **அபரிக்ரஹ (Aparigraha)** - பிறரிடமிருந்து தேவையற்ற வெகுமதிகளைப் பெறாதிருத்தல்.

12) **ஹரீ (Hri)** - அடக்கத்துடன் இருத்தல்.

13) **மார்தவ (Mardava)** - மென்மையுடன் இருத்தல்.

14) **தயா (Daya)** - கருணையுடனும் இரக்கத்துடனும் இருத்தல்

15) **சாந்தி (Shanti)** - மனதை அடக்கி அதனால் உண்டாகும் மன அமைதி.

16) **க்ஷமா (Kshama)** - மன்னிக்கும் தன்மை

17) **சௌச (Shaucha)** - மனம் மற்றும் உடலில் தூய்மை.

18) **அத்ரோஹ (Adroha)** - தீங்கு செய்யும் எண்ணம் இல்லாமல் இருத்தல்.

தனி நபர்கள் ஒன்று சேர்வது ஒரு குடும்பமாகிறது. அந்தக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் நலமாக வாழ அந்த குடும்பமானது நல்ல முறையில் பாதுகாக்கப் பட வேண்டும். குடும்பம் சீர்குலையாமல் இருப்பதற்காக ஒரு சில விதிமுறைகளைக் குடும்பத்தினர் கடைப்பிடிக்க வேண்டி வரும். அதுவே பாரிவாரிக தர்மம் (Parivarika Dharma)

அல்லது குடும்ப தர்மம் எனப்படுகிறது.

இந்த குடும்ப தர்மத்தின் அடிப்படையே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதும், மரியாதை காப்பதும், தன்னைத் தியாகம் செய்யத் தயாராக இருப்பதும் ஆகும்.

தைத்திரீய உபநிடதத்தில் கூறப்பட்டு உள்ள "உன்னுடைய தாயைக் கடவுளைப் போல் எண்ணி வழிபடு" "உன்னுடைய தந்தையைக் கடவுளைப் போல் எண்ணி வழிபடு" என்ற கோட்பாடுகளையும் குடும்ப தர்மத்தில் கடைப்பிடிக்க வேண்டும் என்று கருதி அவற்றையும் சேர்த்துள்ளனர். குடும்பம் நல்ல முறையில் இயங்கா விடில் அதில் ஓர் அங்கத்தினரான தனிநபரும் சுகமாக வாழ முடியாது.

பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு சமூகம். சமூகம் சிதறிப் போனால் குடும்பங்கள் நல்ல முறையில் வாழ முடியாது. தனி மனிதர்கள் இத்தகைய கோட்பாடுகளைக் கடைப்பிடித்தால் தான் நல்ல முறையில் இணைந்த சமூகம் சீரிய முறையில் செயல்படும் இதுவே சமூக தர்மம் (சமாஜ தர்மம்) எனப்படுகிறது. பல்வேறு வகைப்பட்ட தியாகங்களைச் செய்வது என்பது சமுதாய தர்மத்தின் அடிக்கல்லாக அமைகிறது. கொல்லாமையைக் கடைப்பிடிப்பது, திருடாமல் இருப்பது, வாய்மையைக் கடைப்பிடித்தல், பிறருக்குத் துன்பத்தைத் தரவல்ல உண்மையைத் தவிர்த்தல், கோபத்தை அடக்குவது, கீழ்த்தரமான உணர்ச்சிகளை அடக்குவது, அனைவரிடமும் அன்புகாட்டுவது, ஈகையைக் கடைப்பிடித்தல், புறங் கூறாதிருத்தல், விருந்தோம்பல் போன்றவை சமாஜ தர்மத்தில் அடங்கும்.


நாடு சிதறுண்டால் சமூகம் நிலைக்காது. தனது நாடு நல்ல நிலையில் இருக்க வேண்டுமானால் தனி நபர்களும் ஒரு சில தியாகங்களைச் செய்ய முன்வர வேண்டும். இதுவே ராஷ்டிர தர்மம் அல்லது தேசிய தர்மம் எனப்படுகிறது.

மனித இனம் இன்றேல் நாடும் இல்லை. ஆகவே மனித இனம் நிலைபெற வேண்டுமென்றால் தனி நபரின் ஒத்துழைப்பு அவசியம் தேவை. இதற்காக அவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை மானவதர்மத்தின் கீழ் வருகிறது. இதற்கும் தன்னைத் தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மேலே கூறப்பட்டவை அனைத்தும் நடுவில் ஒரு மனிதனை வைத்து அவனைச் சுற்றி வரையப்பட்ட வட்டங்களைப் போன்றது. அந்த மனிதன்தான் தர்மங்களைக் கடைப்பிடிப்பவன்.

ஒரு முன் மாதிரியான இந்துவானவன் எல்லா வகையான தர்மங்களையும் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவன். உண்மையில் இது மிகவும் கடினமான காரியமே. ஆனாலும் உயர்ந்த குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்யும் வாழ்க்கைதான் பெருந்தன்மை யுடையதும் அர்த்தமுடையதுமாகவும் அமையும். இந்த எல்லா வகையான தர்மங்களின் அடிப்படையே பொதுவாகத் தன்னைத் தியாகம் செய்தல் என்பதாகிறது. தன்னைத் தியாகம் செய்யாமல் தனி மனிதன் வாழ முடியாது. இவ்வாறு தன்னைத் தியாகம் செய்வது என்பது உண்மையில் தன்னை வலுவூட்டிக் கொள்வதாகவும், பத்திரமாகத் தன்னைப் பாதுகாப்பதுமாக அமையுமே அன்றி தன்னைப் பறி கொடுப்பதாக ஆகாது.

**இந்து மதத்தின் மையக்கருத்து**




**தர்மத்தின் நிலை**

### பஞ்ச ரிண அல்லது ஐவகைக் கடன்கள்

இந்து மதத்தில் மனிதனுக்கு ஐந்து வகையான கடன்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. (1) **தேவரிண**, அதாவது கடவுளுக்காக நாம் படும் கடன், (2) **ரிஷி ரிண**, முனிவர்களுக்கு நாம் பட்ட கடன், (3) **பித்ருரிண**, முன்னோர்களுக்குப் பட்ட கடன், (4) **ந்ரு ரிண**, மனித சமூகத்திற்கு நாம் பட்ட கடன், (5) **பூதரிண**, மனிதனல்லாத உயிர்களுக்குப் பட்ட கடன். இக்கடன்களைத் தீர்க்க ஓர் இந்துவானவன் நீதி நூல்களில் கூறப்பட்ட சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இந்து மத நீதி நூல்களின்படி எல்லா உயிரினங்களுமே இந்தப் பூமியின் சுற்றுச் சூழலின் ஓர் அங்கமாக இருக்கின்றன. எனவே மனிதன் பூமியில் வாழும் மற்ற உயிரினங்களுக்கும் தான் கடமைப்பட்டுள்ளோம் என்பதைப் புரிந்து கொள்ளாமல் வாழ முடியாது. ஒருவரை ஒருவர் சார்ந்த படிதான் அனைவருடைய வாழ்க்கையும் அமைந்திருக்கிறது. மனிதர்களையோ அல்லது மற்ற உயிரினங்களையோ காரணமின்றி கொல்வதை இந்து மதம் அனுமதிப்பதில்லை.

தாயினுடைய கருவில் ஜனித்த போதிலிருந்து சுடுகாட்டிற்குப் போகும்வரை இந்துவானவன் நீதி நூல்களில் கூறியுள்ளபடி நடந்து கொள்ள வேண்டும் என்று இந்து மத நூல்களில் ஒன்று கூறுகிறது. "Nishekadi Shmashanantah" - Agniveshya Grihyasutra 3/10/4

### நீதி நெறியைத் தாங்கி நிறுத்துபவர் கடவுளே

நிரந்தமான இந்த நீதி முறைகளைத் தோற்றுவித்து அதைக் காப்பவரும் கடவுள்தான் என்று வேதங்கள் கூறுகின்றன. அகில உலகமே இந்த நீதி நெறிகளால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த உலகை ஒழுங்காக இயங்க வைப்பதும், அதைவிடக் குறைந்த நிலையிலுள்ள உலகத்தை இயங்க வைப்பதும், நிலை நிறுத்துவதும் இந்த சட்டதிட்டங்களே. இவ்வுலகிலுள்ள எவராலும் இந்த நீதிகளிலிருந்து தப்ப முடியாது. எனவே தான் இந்து மதமானது நீதி நூல்களுக்கும், அறநெறிகளுக்கும் கடவுள்தான் அஸ்திவாரமாக இருப்பவர் என்று கருதுகிறது.

................

## சும்மா இருக்கும் சுகம்

வீண்பொழுது போக்கி வெற்று மனிதராய்த் திரிபவர்களைப் பார்த்து என்ன செய்கிறீர்கள் என்று கேட்டால் சும்மாதான் இருக்கிறேன் என்பார்கள். இது சும்மா இருப்பதல்ல - சோம்பி இருப்பது. சும்மா இருப்பது என்பது சுலபமான செயல் அல்ல. அது ஒரு பெரிய தவம். அது எல்லாராலும் முடியக்கூடியதல்ல என்கிறார் தாயுமானவர். நீரில் நடக்கலாம். நெருப்பில் மிதக்கலாம். கரடி, புலி, சிங்கத்தை அடக்கலாம். விஷப்பாம்பை எடுத்து ஆட்டலாம். காயகல்பம் ரஸவாத வித்தை செய்யலாம். ஆனால் சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பது அவ்வளவு சுலபமல்ல. மனதை அடக்கிச் சும்மா இருந்துவிட்டால் இதைப்போலச் சுகமும் வேறில்லை.

# திணைக்களச் செய்திகள்

## (ஆய்வுப் பிரிவு)

### நூலகங்களுக்கான நூல்கள் அன்பளிப்பு

மக்களிடையே வாசிக்கும் திறனை விருத்தி செய்யும் முகமாக பாடசாலைகள், பொதுசன நூலகங்கள், அறநெறிப்பாடசாலைகள், பல்கலைக்கழக நூலகங்கள் ஆகியவற்றிற்கு நூல்களை அன்பளிப்புச் செய்யும் செயற்திட்டத்தினை வருடாந்தம் இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தனது செயற்றிட்டங்களுள் ஒன்றாக செயற்படுத்தி வருகின்றது. இது தொடர்பான வைபவம் 21.10.2008ஆம் திகதி திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக மதவிவகார அமைச்சின் செயலாளர் திரு. எச். எம். ஹேரத் அவர்கள் கலந்து சிறப்பித்தார். காலை 10.30 மணியளவில் ஆரம்பித்த இவ்வைபவத்தில் உதவிப்பணிப்பாளர் திரு. ம. சண்முகநாதன் வரவேற்புரையையும், பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் தலைமையுரையையும், கணக்காளர் திரு. மா.கோ. காண்டீபன் நன்றியுரையையும் வழங்கினர்.

நூல்களைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பங்களை அனுப்பிய நூலகங்களுக்கும், தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை நூலகங்களுக்குமாக மொத்தம் 200 நூலகங்களுக்கு நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இவ்வைபவத்தில் திணைக்களத்தின் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

## திணைக்கள வெளியீடுகள்

### பக்திநெறியும் பண்பாட்டுக் கோலங்களும்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆய்வுப்பிரிவின் நடவடிக்கைகளில் ஒன்றாக இந்துசமய, தமிழிலக்கிய ஆய்வரங்கு வருடாந்தம் நடாத்தப்படுகின்றது இவ் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் நூலுருவாக்கம் பெறுகின்றன. அவ்வகையில் 2007ஆம் ஆண்டு நடைபெற்ற ''பக்திநெறியும் பண்பாட்டுக் கோலங்களும்" எனும் ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் நூலுருவாக்கம் பெற்று, ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஆய்வரங்கில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந்நூலின் பதிப்பாசிரியர் திரு. க. இரகுபரன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆவார். இந்நூலினைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும். இதன் விலை 500/- ரூபாவாகும்.

### கிடைத்தற்கரிய நூல்கள்

கிடைத்தற்கரிய நூல்கள் பதிப்பித்தல் வரிசையில் "மேன்மக்கள்" எனும் நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. 18,19ஆம் நூற்றாண்டுகளிற் இலங்கையில் வாழ்ந்த தமிழ் மேன்மக்களின் சரிதம் பற்றியதாகும். இந்நூல் விவரிக்கின்றது. இதன் பதிப்பாசிரியர் திரு. க. சண்முகலிங்கம் அவர்கள் ஆவார். இதன் விலை ரூ. 200/- ஆகும்

### பகவத் கீதை

மூன்று மொழிகளிலுமான பகவத் கீதை நூல் அச்சிடப்பட்டு வெளியீடு செய்யப்பட்டுள்ளது. கவர்ச்சிகரமான வர்ண அட்டையுடன் கூடியதான இந்நூல் பல நூலகங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

### இந்துக்கலைக்களஞ்சியம் - 10ஆம் தொகுதி

இந்துக்கலைக்களஞ்சியம் 10ஆம் தொகுதி

அச்சிடப்பட்டு வருகின்றது. "ப - பௌ" வரிசையில் அமையும் தலைப்புக்களின் கீழாகப் பல கட்டுரைகள் இத்தொகுதியில் அடங்கும். இக்கலைக்களஞ்சியத்தின் வேலைகள் இவ்வருட இறுதிக்குள் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உள்ளூர் எழுத்தாளர்களிடமிருந்து நூல்கள் கொள்வனவு

இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் உள்ளூர் எழுத்தாளர்களிடமிருந்து நூல்களைக் கொள்வனவு செய்து வருகின்றது. அவ்வகையில் 2008ஆம் ஆண்டிற்காக இதுவரையில் 81 எழுத்தாளர்களிடமிருந்து 2,749 எண்ணிக்கையான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## மாண்புமிகு ஜனாதிபதியினுடனான சந்திப்பு

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இதுவரை வெளியிடப்பட்ட இந்துக்கலைக்களஞ்சியத் தொகுதிகள், கிடைத்தற்கரிய நூல்கள், ஆய்வரங்கு நூல்கள், பருவ இதழ்கள், ஆய்வரங்கு சிறப்பு மலர்கள் அனைத்தும் ஜனாதிபதியினுடனான சந்திப்பின் போது ஜனாதிபதிக்குக் கையளிக்கப்பட்டது. இச்சந்திப்பு 23.10.2008ஆம் திகதி ஜனாதிபதியின் அலரிமாளிகையில் நடைபெற்றது. இச்சந்திப்பில் அமைச்சின் செயலாளர் திரு. எச். எம். ஹேரத், மேலதிக செயலாளர் றோஸ் பெர்னான்டோ, பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர்களான திரு. ம. சண்முகநாதன், திரு. வை. அநிருத்தனன், திருமதி. ஹேமலோஜினி குமரன், இந்துக் கலைக்களஞ்சிய ஆலோசனைக் குழுவின் பிரதம ஆலோசகர் பேராசிரியர் சி. பத்மநாதன், உதவிப் பதிப்பாசிரியர் திரு. க. இரகுபரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின் போது திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கு பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் மிகச் சிறப்பான முறையில் விளக்கினார்.

## இந்துசமய, தமிழிலக்கிய ஆய்வரங்கு 2008
## சோழப்பேரரசும் சமயப்பெருநெறிகளும்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடம் தோறும் இந்துசமய தமிழிலக்கிய ஆய்வரங்கினை நடத்தி வருகின்றது. 1986 தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதினான்கிற்கும் மேற்பட்ட ஆய்வரங்குகளை திணைக்களம் நடத்தியுள்ளது. இவ்வகையில் இவ்வருடம் ஆவணி மாதம் 22, 23, 24ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் 'சோழப்பேரரசும் சமயப் பெருநெறிகளும்' என்னும் தலைப்பில் ஆய்வரங்கு நடைபெற்றது. ஆய்வரங்கின் தொடக்க வைபவம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. சிறப்பு விருந்தினர்களாக மதவிவகார அமைச்சின் செயலாளர் திரு எச். எம் ஹேரத், பேராசிரியர் ஏ. சுப்பராயலு (இணைப்பாளர், தொல்பொருள் வரலாற்று மையம், பாண்டிச்சேரி), பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் கலந்து கொண்டனர். இராமகிருஷ்ணமிஷன் கொழும்புக் கிளைத் தலைவர் சுவாமி சர்வரூபானந்தா அவர்களின் ஆசியுரையுடன் இவ்வைபவம் ஆரம்பமானது.

வைபவத்தின் வரவேற்புரையை உதவிப்பணிப்பாளர் திரு எஸ். தெய்வநாயகம் அவர்களும், தொடக்கவுரையை பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களும், தலைமையுரையை பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களும் நிகழ்த்தினர். இத்தொடக்க வைபவத்தில் 2007ஆம் ஆண்டு நடைபெற்ற ஆய்வரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பான "பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும்" என்னும் நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந்நாலிற்கான விமர்சன

உரையை திரு ம. ரூபவதனன் (விரிவுரையாளர், ஊவா பல்கலைக்கழகம்) அவர்கள் நிகழ்த்தினார்.

மூன்று நாட்கள் இடம்பெற்ற ஆய்வரங்கில் **சோழர்கால அரசியலும் வரலாறும், சோழர்காலச் சமயமும் தத்துவமும், சோழர்கால இலக்கியங்கள், கோயில்களும் கலைகளும்** என்னும் தலைப்புக்களின் கீழ் அமர்வுகள் நடைபெற்றன. **சோழர்கால அரசியலும் வரலாறும்** என்னும் தலைப்பில் இடம்பெற்ற அமர்வில் பேராசிரியர் சி. பத்மநாதன் - சோழர்கால வணிக நகரங்கள், பேராசிரியர் ப. புஷ்பரட்ணம் - இலங்கையில் சோழர் ஆதிபத்தியம், பேராசிரியர் ஏ. சுப்பராயலு- சோழநாட்டின் வரலாற்றுப் புவியியல், கலாநிதி செ. யோகராஜா- சோழர்காலப் பெண்மணிகள், முனைவர் கீ. இரா சங்கரன் - சோழநாட்டின் நீருரிமை, பேராசிரியர் சி. பத்மநாதன் - சோழர்கால மெய்க்கீர்த்திகள், பேராசிரியர் விஜயா இராமசாமி- சோழர்கால அறிஞர்களும், கலைஞர்களும் என்னும் தலைப்புக்களில் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்திருந்தனர். இவ்வாய்வுக் கட்டுரைகள் ஆய்வுபூர்வமானதாக அமைந்திருந்தன.

**சோழர்காலச் சமயமும், தத்துவமும்** என்னும் தலைப்பில் இடம்பெற்ற அமர்வுகள் பேராசிரியர் கலைவாணி இராமநாதன்- சமஸ்கிருத மொழியில் சைவசித்தாந்தம், திரு ச. முகுந்தன் - விசிட்டாத்துவைதி கம்பன், திரு க. இரகுபரன் - அடியார் வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், திரு ஸ்ரீ பிரசாந்தன் - சேக்கிழார் காட்டும் சைவசித்தாந்தம், பேராசிரியர் அ. சண்முகதாஸ் - வைணவபாசுரத் தொகுப்பு, வித்துவான் வசந்தா வைத்தியநாதன் - சோழர்காலப் பக்திப் பாடல்கள், திரு எஸ். துஷ்யந்த் - சோழர்காலத் திருமடங்கள், பேராசிரியர் சி. மௌனகுரு- கலிங்கத்துப்பரணி காளிவழிபாடு ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்திருந்தனர்

**சோழர்கால இலக்கியங்கள்** பற்றிய அமர்வுகளில் பேராசிரியர் எம், முத்துமோகன் சைவசித்தாந்த இலக்கியம், திரு சேது முருகபூபதி - திருத்தொண்டர் புராணம்,கலாநிதி வ. மகேஸ்வரன் - சோழர்காலச் சிற்றிலக்கி-யங்களும் சோழர்குல மரபும், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் - சோழர்காலத் தமிழ் இலக்கண நூல்கள், கலாநிதி கிருஷ்ணவேணி நோபேர்ட் - சோழர்கால இலக்கண நூல்கள் காட்டும் அழகியற் கொள்கைகள், கலாநிதி துரை மனோகரன் - கம்பஇராமாயணம், கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் - சோழர்காலத் தமிழ் இலக்கண உருவாக்கம், கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ் - சோழர்காலத் தமிழ் வழக்கு, கலாநிதி சுபதினி ரமேஸ் - மொழியியல் நோக்கில் கம்பஇராமாயணம் ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்திருந்தனர்

**கோயில்களும் கலைகளும்** என்ற அமர்வுகளில் கலாநிதி இ. இராஜவேலு - சோழர்கால ஓவியக் கலை, சோழர்காலக் கோயில்கள் பேராசிரியர் கு.சேதுராமன் - பாண்டியநாட்டில் சோழர் கோயில்கள், திருமதி விக்னேஸ்வரி பவநேசன் - சோழர்கால அம்மன் விக்கிரகங்கள், திரு ப. அகிலன் - நாயன்மார்களை விக்கிரகப்ப- டுத்துகை, கலாநிதி வி. வேதாச்சலம் - முற்காலச் சோழர் சிற்பக்கலை ஆகிய தலைப்புக்களில் கீழ் ஆய்வுகட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வாய்வரங்கில் இந்தியாவில் இருந்து அறிஞர்கள் எட்டுப் பேர் கலந்து கொண்டனர். ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் யாவும் தரமானதாகவும் சிறந்ததாகவும் அமைந்திருந்தன. இவ்வாய்வரங்கில் பல்கலைக்கழக மாணவர்கள், அறிவுத்தேடல் மிக்க ஆர்வலர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர் கலந்து பயன்பெற்றனர். இவ்வாய்வரங்கு தொடர்பாகச் சிறப்புமலர் ஒன்றும் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

## பண்பாடு

2008 ஆம் ஆண்டிற்கான பண்பாடு மலர் -17 இதழ் 03 வெளிவந்துள்ளது. இப்பண்பாடு பருவஇதழ் மலரில் பல்வேறு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

1. பக்தி இலக்கியம்
2. குறியியல் வாசிப்பில் பெரிய புராணப் பாடல்
3. இலங்கையில் சைவ சித்தாந்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
4. இருண்டகாலச் சைவம்
5. தமிழர் சமுதாய சமய வளர்ச்சி வரலாற்றில் தேவார மூவர் விளைத்த திருப்புமுனைகள்
6. இந்திய அழகியலில் ரஸிகர்களின் தகுதிப்பாடு

இவ்விதழைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் சுய முகவரியிட்ட கடித உறையுடன் தொடர்பு கொள்ளலாம்.

## ஆய்வுப்பிரிவினரால் 2008ஆம் ஆண்டு வெளியீடு செய்யப்பட்ட நூல்களின் விபரம் :

| | |
|---|---|
| 1. இந்துக்கலைக்களஞ்சியம் 09ஆம் தொகுதி | ரூபா. 600/- |
| 2. இரகுவம்மிசம் | ரூபா. 500/- |
| 3. பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும் | ரூபா. 500/- |
| 4. மேன்மக்கள் | அச்சில் உள்ளது |
| 5. கோபுரம் | இலவசம் |
| 6. பண்பாடு | இலவசம் |
| 7. ஔவைக்குறள் | இலவசம் |
| 8. ஆய்வரங்கு2008 சிறப்புமலர் | இலவசம் |
| 9. பகவத் கீதை | இலவசம் |

# (இந்து விவகாரப் பிரிவு)

## நவராத்திரி விழா 2008

சமய விவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு, இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து வருடந்தோறும் நவராத்திரி விழாவினை சிறப்பாக கொண்டாடி வருகின்றன.

## சபாநாயகர் இல்லத்தில் நவராத்திரி விழா

இலங்கை சனநாயகக் குடியரசின் கௌரவ சபாநாயகர் W.J.M. லொக்குபண்டார அவர்களின் இல்லத்தில் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி லக்ஷ்மி பூஜை கொண்டாடப்பட்டது. இப் பூஜைக்கான ஒழுங்குகளை ஸ்ரீ மயூரபதி அம்மன் ஆலய அறங்காவலர் திரு பொன் வல்லிபுரம் அவர்கள் மேற்கொண்டிருந்தார். மாலை 6 மணிக்கு பூஜையுடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் நாதஸ்வர கானவிநோதன் பாலமுருகன் குழுவினரின் மங்கள இசை, உள்ளூர் கலைஞர்களின் நடன நிகழ்ச்சிகள், இந்தியாவில் (ஐதரபாத்) இருந்து வருகை தந்திருந்த நாட்டியமணி திருமதி தீபிகா ரெட்டி அவர்களின் குச்சுப்பிடி நடனம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## திணைக்கள நவராத்திரி விழா

மதவிவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சினாலும், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தாலும் ஒழுங்கு செய்யப்பட்ட நவராத்திரி விழா ஒக்டோபர் மாதம் 4, 5ஆம் திகதிகளில் புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனின் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் முதலாம் நாள் நிகழ்வில் சமய விவகார, ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் திரு. எச். எம். ஹேரத், மேலதிக செயலாளர் திருமதி. றோஸ் பெர்ணான்டோ ஆகியோர் சிறப்பு

விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இவ்விழாவில் ஆசியுரையை இராமகிருஷ்ணமிஷனின் கொழும்புக் கிளைத் தலைவர் ஸ்ரீமத்சுவாமி சர்வரூபானந்தா அவர்கள் நிகழ்த்தினார். நாதஸ்வர கானவிநோதன் பாலமுருகன் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் கலைஞானகேசரி திரு. ம. ஸ்ரீரங்கநாதனின் பக்திப்பாமாலை, செல்வி அதிஷ்டப்பிரதா தர்மலிங்கத்தின் ஜதிநய நிருத்தனாலயா மாணவிகளின் கோலாட்டம், திருமதி. சிவானந்தி ஹரிதர்சனின் நிருத்தனா நடனப்பள்ளி மாணவிகளின் 'நவரசநாயகி' என்னும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சிறப்பு நிகழ்ச்சியாக இந்தியக் கலைஞர் கலாரத்னா திருமதி தீபிகா ரெட்டி அவர்களின் குச்சப்பிடி நடனமும் இடம்பெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வாழ்க்கைத் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சின் பிரதி அமைச்சர் கௌரவ பெ. இராதாகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடக கலாசார ஆலோசகரும், இந்திய கலாசார நிலையத்தின் பணிப்பாளருமான திரு. டின்ஹார் அவ்தானா அவர்களும், சமய விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி W. A. D. R. சுவினித்தா, பிரதம கணக்காளர் திரு. வர்ணதுங்க ஆகியோரும் கலந்து கொண்டு இவ்விழாவினைச் சிறப்பித்தனர். நாதஸ்வர கானவிநோதன் பாலமுருகன் குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமானது. இவ் விழாவில் கொழும்பு இராமகிருஷ்ணசாரதா மடத்தைச் சார்ந்த பரவ்ராஜித ஆத்மதேவ பிரணவ் மாதாஜி ஆசியுரை வழங்கினார். திருமதி. சாந்தி கணேசராஜாவின் மாணவிகளின் ஜகத்ஜனனி என்னும் நடன நிகழ்ச்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி எஸ். தர்சனன் அவர்களின் இசைநிகழ்ச்சியும், செல்வி கே. பிரசாந்தினி, திருமதி சமந்தி கங்கா ஆகியோரின் கலாசமர்ப்பண நிருத்தியக் ஷேத்ரா மாணவர்களின் பராசக்தி என்னும் நாட்டிய நாடகமும், திருமதி தீபிகா ரெட்டி அவர்களின் குச்சிப்பிடி நடனமும் இரண்டாம் நாள் விழாவில் இடம்பெற்றன.

## பாராளுமன்றத்தில் நவராத்திரி விழா

மதஅலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன ஏற்பாடு செய்து நடாத்திய நவராத்திரி விழா பாராளுமன்ற வளாகத்தில் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழா கௌரவ சபாநாயகர் W.J.M. லொக்குபண்டாரா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவிற்கு கௌரவ பிரதமர், மதவிவகார அமைச்சர் கௌரவ பண்டு பண்டாரநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். கொழும்பு கப்பித்தாவத்தை பாலவிநாயகர் ஆலயப் பிரதம குருக்கள் திரு. இராதாகிருஷ்ண குருக்கள் அவர்கள் பூசை வழிபாடுகளை நிகழ்த்தினார். நாதஸ்வரகானவிநோதன் பாலமுருகன் குழுவினரின் மங்கள இசை, கலாசமர்ப்பண நிருத்தியஷேத்ரா மாணவிகளின் நாட்டிய நாடகம், நாட்டியமணி திருமதி. தீபிகா ரெட்டி அவர்களின் குச்சுப்பிடி நடன நிகழ்ச்சி என்பன இவ் விழாவில் இடம்பெற்று எல்லோரையும் கவர்ந்தன.

## திணைக்களத்தில் நவராத்திரி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நவராத்திரி விரத ஆரம்ப தினமாகிய 30-09-2008 ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியாக 10 நாட்களும் பூசை வழிபாடுகளுடன் பக்திபூர்வமாகக் கொண்டாட -ப்பட்டது.

## மாவட்டங்கள் தோறும் நவராத்திரி விழா

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவற்குடா இந்து கலாசார நிலையத்தில் நவராத்திரி விழா 30-09-2008 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து

10 நாட்களும் நடைபெற்றது. தினமும் விசேட பூசைகள், அறநெறிப்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களின் கூட்டுப்பிரார்த்தனை என்பன இடம்பெற்றன. 10ஆம் நாளான விஜயதசமியன்று சிறப்புச் சொற்பொழிவுகள், அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நடனங்கள், நாடகம், கோலாட்டம், பாம்பு நடனம் போன்ற கலைநிகழ்ச்சிகளும், இந்து இளைஞர் மன்றத்தினரின் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விழாவின் இறுதியில் கலந்துகொண்டோருக்குப் பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாவலர் மணிமண்டபத்தில் 10ஆம் நாளான விஜயதசமியன்று நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் திரு ந. நவராஜ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு, மாணவர்களுக்கான ஏடுதொடக்கல் வைபவம் என்பன இடம்பெற்றன.

## சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை

### அம்பாறை

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், திருக்கோவில் பிரதேச ஆலையடிவேம்பு சிவத்தொண்டர் நற்பணிச்சபை ஆகியன இணைந்து பனங்காடு ஸ்ரீபாசுபதேஸ்வரர் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை 08-08-2008 ஆம் திகதி கொண்டாடினர். இக் குருபூசை நிகழ்ச்சி மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. இக்குரு பூசை விழாவில் சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரங்கள் பண்ணோடு ஓதப்பட்டன. திரு. கனகரட்ணம், திரு கைலாயபிள்ளை, திரு. குமாரதாஸ் ஆகியோரின் ஆன்மீக உரைகளும், சமயச் சொற்பொழிவு, சிறப்புச் சொற்பொழிவு என்பனவும் இடம்பெற்றன. சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தொடர்பாகப் பாடசாலை மட்டத்தில் பேச்சுப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டு, அப்பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பெற்றன.

### கொழும்பு

கொழும்பில் இரத்மலானை இந்துக் கல்லூரி மண்டபத்தில் 08-08-2008ஆம் திகதி காலை 8.30மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை வைபவம் நடைபெற்றது. இக்குருபூசை உதவிப் பணிப்பாளர் திரு. வை. அநிருத்தனன் தலைமையில் நடைபெற்றது. சுந்தரர் தேவாரத்துடன் ஆரம்பமாகிய இக்குருபூசையில் விசேட பூசையும், சுந்தரர் காட்டிய பக்தி - (கலாபூஷணம் திரு எஸ். செல்லத்துரை), சுந்தரரின் வாழ்க்கை வரலாறு - (திரு எஸ்.- நவநீதகுமார்) ஆகிய சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெற்றன.

### மட்டக்களப்பு

கல்முனை நால்வர் கோட்டத்தில் 09-08-2008ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை கொண்டாடப்பட்டது. திரு. பரதன் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்குருபூசை நிகழ்வில் பிரதம அதிதியாக சிவஸ்ரீ முருகு நல்லதம்பி சிவாச்சாரியார் அவர்களும், சிறப்பு அதிதிகளாக டாக்டர். குமுதினி துரைரட்ணம், திரு. கந்தையா கனகரத்தினம், திரு. பாக்கியராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். விநாயகர் பூசை, திருமுறை ஓதல் ஆகியவற்றுடன் ஆரம்பமாகிய குருபூசை நிகழ்ச்சியில் வரவேற்புரை, தலைமையுரை, சிறப்புப்பேச்சு, கூட்டுப்பிரார்த்தனை, பிராணாயாமப்பயிற்சி ஆகியன இடம்பெற்றன.

பாண்டிருப்பு நாவலர் அறநெறிப் பாடசாலையினர் நடத்திய சுந்தரர் குருபூசை பாண்டிருப்பு நாவலர் வித்தியாலயத்தில் திரு வ. ஞானமாணிக்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரமத அதிதியாக திரு ந. கமலநாதன் அவர்களும், சிறப்பு அதிதியாக திரு. பரதன் கந்தசாமி, திரு க. பரமநாதபிள்ளை, திரு ஆ. குகராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர். மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இக்குருபூசையில் ஆசியுரை, வரவேற்புரை, தலைமையுரை, கலைநிகழ்ச்சிகள், பரிசளிப்பு என்பனவும் இடம்பெற்றன.

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் தீவகப் பிரதேசத்தில் தம்பாட்டி ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் 08-08-2008ஆம் திகதி சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக திரு. கே. ஸ்ரீமோகன் (உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை), திரு கே. சகாதேவன் (கிராம சேவையாளர்) ஆகியோர் கலந்து கொண்டனர். "சுந்தரர் யோகநெறி" என்னும் தலைப்பில் திரு எஸ். சஜீவன் சிறப்புச் சொற்பொழிவும், அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

யாழ்ப்பாணம் நல்லூர் மணிமண்டபத்தில் 08-08-2008 ஆம் திகதியன்று சுந்தரர் குருபூசை கொண்டாடப்பட்டது. ஆரம்ப நிகழ்வாக சுந்தரமூர்த்திநாயனார் திருவுருவப்படத்திற்கு விசேடபூசை நடைபெற்று ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது, "சுந்தரர் காட்டிய பக்திநெறி" என்னும் தலைப்பில் திரு. நித்திய சசீதரன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் நடைபெற்றது. நிறைவாக மாணவர்களிடையே வினாவிடைப் போட்டி வைக்கப்பட்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. அத்துடன் இக்குரு பூசை விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### கண்டி

கண்டி மாவட்டத்தில் ஸ்ரீகதிரேசன் ஆலயக் கல்யாண மண்டபத்தில் 17-08-2008 ஆம் திகதி சுந்தரர் குருபூசை கொண்டாடபட்டது. பிரதம அதிதியாக ஸ்ரீகதிரேசன் ஆலயத் தலைவர் திரு. ஜி. மோகன்ராஜ் கலந்து கொண்டார். மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த இக்குருபூசையில் ஆசியுரை, தலைமையுரை, கலைநிகழ்வுகள், பரிசளிப்பு வைபவம் என்பன இடம்பெற்றன.

### மன்னார்

மன்னார் மாவட்டத்தில் கீரிமுருகன் ஆலயத்தில் சுந்தரர் குருபூசை 08-08-2008ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுந்தரமூர்த்தி நாயனார் திருவுருவப் படத்திற்குப் பூசையுடன் குருபூசை நிகழ்வு ஆரம்பமானது. கலை நிகழ்வுகள், சொற்பொழிவுகள் என்பன இடம்பெற்றதுடன் மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

### குலச்சிறை நாயனார் குருபூசை

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீசிவசுப்பிரமணிய ஆலயமும், இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய குலச்சிறை நாயனார் குருபூசை 06-09-2008ஆம் திகதி முற்பகல் 9.00 மணியளவில் உதவிப் பணிப்பாளர் திரு. வை. அநிருத்தனன் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். தேவாரத்துடன் ஆரம்பித்த இக்குருபூசை வைபவத்தில் குலச்சிறை நாயனார் காட்டிய பக்தி - கலா பூஷணம் எஸ். செல்லத்துரை, சைவமும் நாமும் - திரு எஸ். நவநீதகுமார் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும், ஸ்ரீசிவசுப்பிரமணிய ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பேச்சு, பஜனை, இசை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன.

### குங்கிலியக்கலய நாயனார் குருபூசை

குங்கிலியக்கலய நாயனார் குருபூசை குருமண்வெளி ஸ்ரீமகாவிஷ்ணு ஆலயத்தில் 22-09-2008ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இக்குருபூசை நிகழ்வில் மாணவர்களின் பஜனை, குங்கிலியக்கலய நாயனார் பற்றிய சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம்பெற்றன.

### இராமகிருஷ்ண ஜெயந்தி விழா

ஸ்ரீஇராமகிருஷ்ண ஜெயந்தி விழா கண்டி மாவட்டத்தில் ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் 21-06-2008 ஆம் திகதி நடைபெற்றது. விசேட பூசையுடன் ஆரம்பமாகிய இவ் ஜெயந்தி விழாவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், சமய சொற்பொழிவுகள் இடம்பெற்றதுடன்

இந்துசமயப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## புண்ணியகிராமத் திட்டம்

கிராமங்கள் ரீதியாக மக்களிடையே ஆன்மீக ஒழுக்க மேம்பாட்டை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மேதகு ஜனாதிபதியினால் புண்ணியகிராமத்திட்டம் என்னும் செயற்றிட்டம் உருவாக்கப்பட்டது. இச்செயற்றிட்டம் மாவட்டங்கள் தோறும் திணைக்களத்தால் நடாத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வவுனியா

வவுனியா மாவட்டத்தில் வீரபுரம் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் புண்ணியகிராமச் செயற்றிட்டம் 22.09.2008ஆம் திகதி செயற்படுத்தப்பட்டது. இச்செயலமர்வு வவுனியா மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் செல்வி. கலையமுதாவின் தலைமையின் கீழ் நடைபெற்றது. பூசை வழிபாடு, கடவுள் வணக்கம் ஆகியவற்றுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்-செயலமர்வில் வரவேற்புரையை வீரபுரம் சித்திவிநாயகர் ஆலயத்தலைவர் அவர்களும், ஆசியுரையை சிவஸ்ரீ யோகசிகாமணி அவர்களும் நிகழ்த்தினர். வெங்கலச்செட்டிக்குளப் பிரதேச செயலாளர் திரு. ஆர். சிவபாலசுந்தரம், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திரு. திருலிங்கநாதன், வீரபுரம் மாணிக்க வித்தியாலய அதிபர் திரு. தர்மகுலசிங்கம், கிராம சேவையாளர் திரு. ஆர். பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். சமயச் சொற்பொழிவு, யோகாசனப் பயிற்சி, சிறப்பு சொற்பொழிவு ஆகியன இடம்பெற்றன. இச்செயலமர்வில் 200ற்கும் மேற்பட்டோர் கலந்து பயன்பெற்றனர்.

## மன்னார்

மன்னார் மாவட்டம் தம்பனைக்குளக் கிராமத்தில் 20.07.2008ஆம் திகதி இச்செயலமர்வு நடைபெற்றது. ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகிய இச்செயலமர்வில் பெரியோரைக் கனம் பண்ணுதல், சிறப்புச் சொற்பொழிவுகள், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன. இச்செயலமர்வில் மக்கள் பலர் கலந்து பயன்பெற்றனர்.

## கொழும்பு

அவிசாவளை குடாகம கலாசார மண்டபத்தில் 21.09.2008 ஆம் திகதி இச்செயலமர்வு நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு ஆலயத்தில் விசேட பூசையுடன் தொடங்கிய இச்செயலமர்வில் 250ற்கும் மேற்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், இந்து சமய ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். இச் செயலமர்வில் பிரதம விருந்தினராக திரு. பால. வயிரவநாதன் அவர்கள் கலந்து கொண்டார். இச்செயலமர்வில் சமய பழக்க வழக்கங்கள், நல்லொழுக்கம், தியானம் பற்றிய விரிவுரைகளும், தீப நடனம், கோலாட்டம், தனிநடனங்கள் போன்ற கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அத்துடன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன. இச்செயலமர்விற்கு குடாகம ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய தலைவர் திரு. சி. பத்மசீலன் அவர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கினார்.

## புத்தளம்

புத்தளம் விஷ்வ ஹிந்து பரிசத்தினரின் ஒத்துழைப்புடன் புத்தளம் இந்துக்கல்லூரியில் 20.06.2008ஆம் திகதி இச்செயலமர்வு நடைபெற்றது. இச் செயலமர்வில் சமய தீட்சை வழங்குதல், சமய சொற்பொழிவுகள் எனும் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் சமய ஆர்வலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து பயன்பெற்றனர்.

## அம்பாறை

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும், ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றமும், பொத்துவில் ஆலயங்கள் ஒன்றியமும் இணைந்து நடத்திய புண்ணிய கிராம வேலைத்திட்டம் பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலயத்தில் 13.09.2008ஆம் திகதி நடைபெற்றது. கலாசார அபிவிருத்தி உதவியாளர் திரு. குணநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உதவிப் பணிப்பாளர் திரு. ய . அநிருத்தனனும் சிறப்பு விருந்தினர்களாக திரு. பால. வயிரவநாதன், திரு. ரமேஷ் பாபுஜி அவர்களும் கலந்து சிறப்பித்தனர். காலை மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகிய இச்-செயலமர்வில் தியானப் பயிற்சி, நடன நிகழ்ச்சிகள், சமய சொற்பொழிவுகள் என்பன இடம்பெற்றன.

## மாத்தறை

தெனியாய அனிகந்த ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்தில் 16.09.2008 பாரதி அறநெறிப்-பாடசாலை அதிபர் தலைமையில் இச் செயலமர்வு நடைபெற்றது. இச்செயலமர்வில் பிரதம விருந்தினராக திணைக்களப் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக, உதவிப் பணிப்பாளர் திரு. வை. அநிருத்தனன், கணக்காளர் திரு. மா. கோ. காண்டீபன், திரு. யோகநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். இச்செயலமர்வில் கோமாதா வழிபாடு, குருபூசை முறைகள், பெரியோரைக் கனம் பண்ணுதல், ஆலய வழிபாட்டின் முக்கியத்துவம், விரதங்களும் பண்டிகைகளும் பற்றிய விளக்கங்கள் போன்ற சமய சொற்பொழிவுகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## மட்டக்களப்பு

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களமும், பெரிய ஊரணி இந்து இளைஞர் மன்றமும் இணைந்து 24.08.2008ஆம் திகதி பத்திரகாளியம்மன் ஆலயத்தில் இச்செயலமர்வினை நடாத்தினர். நந்திக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகிய இச் செயலமர்வில் கலைநிகழ்வுகள், சிறப்பு சொற்பொழிவுகள் என்பன இடம்பெற்றன. இவ்வைபவத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சமய ஆர்வலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பதுளை மாவட்டம்

இச்செயலமர்வு பதுளை மாவட்டத்தில் சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் 22.07.2008ஆம் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகியது. இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக பதுளை மாவட்ட செயலாளர் கலந்து கொண்டார். புண்ணிய கிராம செயலமர்வு தொடர்பான விளக்கவுரை, தியானம், கூட்டுப் பிரார்த்தனை, பெற்றோர் - பிள்ளைகள் புரிந்துணர்வு, சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் இந்துசமய போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## சபரிமலை ஐயப்பன் யாத்திரை செல்லும் குருசுவாமிகளுக்கான அடையாள அட்டை வழங்கல்

இலங்கையில் இருந்து பல வருடங்களாகப் பல்லாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் சபரிமலைக்கு யாத்திரை செல்வது வழக்கம். யாத்திரிகர்களின் நலன் கருதியும், அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அடையாள அட்டைகள் ஒவ்வொரு வருடமும் வழங்கப்படு-கின்றன. அவ்வகையில் இவ்வருடம் நவம்பர் மாதத்தில் இருந்து ஐயப்ப பக்தர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## (ஆலயப்பிரிவு)

### ஆலயங்களுக்கான நிதியுதவி

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆலயங்களுக்கான நிதியுதவி, நந்திக்கொடி வழங்குதல், ஆலயங்களைப் பதிவு செய்தல், இந்துமத குருமார்களுக்கான அடையாள அட்டை வழங்கல், இந்துசமய அலுவல்கள் தொடர்பாக வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கான உள்வருகைக்கான விசா, தங்குமிட விசா என்பனவற்றிற்கான சிபாரிசுக் கடிதம், ஆலயத்திற்கான சிலைகள், பூசைப் பொருட்கள் என்பவற்றின் மீதான வரிச்சலுகை பெற்றுக் கொள்வதற்கான சிபார்சுக் கடிதம் வழங்கல் போன்ற பல்வேறு பணிகளை இந்து ஆலயப் பிரிவின் மூலம் ஆற்றி வருகின்றது. அவ்வகையில் 2008ஆம் ஆண்டு நிதியாண்டில் இந்து ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட நிதிவிவரம் வருமாறு:-

### வடக்கு கிழக்கு

| இல | மாவட்டங்கள் | ஆலயங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | அம்பாறை | 17 | 2,325,000.00 |
| 02 | மட்டக்களப்பு | 258 | 24,350,000.00 |
| 03 | யாழ்ப்பாணம் | 25 | 4,600,000.00 |
| 04 | கிளிநொச்சி | 01 | 500,000.00 |
| 05 | முல்லைத்தீவு | - | - |
| 06 | மன்னார் | 09 | 1,400,000.00 |
| 07 | திருகோணமலை | 21 | 3,700,000.00 |
| 08 | வவுனியா | 17 | 2,800,000.00 |
| | மொத்தம் | 348 | 39,675,000.00 |

### வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள்

| இல | மாவட்டங்கள் | ஆலயங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | ---- | - |
| 02 | பதுளை | 22 | 3,000.000.00 |
| 03 | கொழும்பு | 07 | 1,400,000.00 |
| 04 | காலி | ---- | - |
| 05 | கம்பஹா | ---- | - |
| 06 | அம்பாந்தோட்டை | 01 | 500,000.00 |
| 07 | களுத்துறை | 12 | 1,175,000.00 |
| 08 | கண்டி | 02 | 300,000.00 |
| 09 | கேகாலை | 05 | 800,000.00 |
| 10 | குருநாகல் | 01 | 248,413.50 |
| 11 | மாத்தளை | 04 | 500,000.00 |
| 12 | மாத்தறை | 01 | 150,000.00 |
| 13 | மொனராகலை | 02 | 250,000.00 |
| 14 | நுவரெலியா | 18 | 2,475,000.00 |
| 15 | பொலநறுவை | ---- | - |
| 16 | புத்தளம் | 06 | 1,100,000.00 |
| 17 | இரத்தினபுரி | 09 | 1,250,000.00 |
| | மொத்தம் | 90 | 13,148,413.50 |

## இந்து நிறுவனங்கள், ஆதரவற்றோர் சிறுவர் இல்லங்களுக்கான நிதியுதவி

2008 - ஜனவரி - ஒக்டோபர் மாதம் வரை

| இல | மாவட்டங்கள் | ஆலயங்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 01 | மட்டக்களப்பு | 11 | 575,000.00 |
| 02 | கொழும்பு | 02 | 510,000.00 |
| 03 | கம்பஹா | 01 | 500,000.00 |
| 04 | கண்டி | 03 | 400,000.00 |
| 05 | வவுனியா | 01 | 200,000.00 |
| 06 | யாழ்ப்பாணம் | 03 | 165,000.00 |
| 07 | முல்லைத்தீவு | 02 | 150,000.00 |
| 08 | கிளிநொச்சி | 01 | 100,000.00 |
| 09 | அம்பாறை | 01 | 50,000.00 |
| 10 | திருகோணமலை | 01 | 50,000.00 |
| 11 | நுவரேலியா | 01 | 50,000.00 |
| 12 | மன்னார் | 01 | 30,000.00 |
| | மொத்தம் | 28 | 2,780,000.00 |

### இந்துகுருமார்களுக்கான வதிவிடப்பயிற்சி 2008

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆலய இந்துப்பூசகர்களுக்கான இரண்டு வாரகால வதிவிடப்பயிற்சி ஒன்றை வருடம் தோறும் நடத்தி வருகின்றது. அவ்வகையில் இவ்வாண்டுக்கான வதிவிடப் பயிற்சிப்பட்டறை நவம்பர் மாதம் 03 ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் விரிவுரை மண்டபத்தில் பதினைந்து நாட்கள் நடைபெற்றது.

இப்பயிற்சிநெறியின் போது இந்து ஆலய வழிபாட்டுமுறைகள், அடிப்படையான ஆகமவிதிகள், பிரார்த்தனை முறைகள், அர்ச்சனை, அபிஷேக முறைகள், அலங்காரங்கள், திருவிளக்குப் பூஜை, தேவாரப்பண்ணிசைப் பாடல்கள், எளிய முறையிலான யோகாசன, பிராணாயாமப் பயிற்சிகள் போன்ற விடயங்கள் கற்பிக்கப்பட்டன. இப்பயிற்சி நெறியினை தமிழ்நாடு கிராமக் கோவில் பூஜாரிகள் பேரவையின் அறங்காவலர் திரு. ஆர்.பி.வி.எஸ். மணியன், பேரவை அமைப்பாளர் திரு. ஏ.கே. சௌந்தரராஜன், தேவார இசைப்பாடகர் திரு. ஏ.ஜீவநாதன் ஆகியோர் நடத்தினர். செயன்முறையுடன் கூடிய இவ்வதிடப்பயிற்சி பட்டறையின் மூலம் 47ற்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்.

### நந்திக்கொடி வழங்கல்

சைவ மக்களின் சின்னமான நந்தியை இலங்கையில் இந்துமக்களின் சின்னமாக இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிமுகப்படுத்தியதோடு அழகாக அச்சிட்டு இந்துசமய நிறுவனங்கள், இந்து ஆலயங்கள் என்பவற்றிற்கு நந்திக்கொடிகளை வழங்கி வருகின்றது. அவ்வகையில் இவ்வாண்டு சிறிய கொடிகள் 3,118உம் பெரிய கொடிகள் 864உம் வழங்கப்பட்டுள்ளன.

## இந்துக்குருமார்களுக்கான அடையாள அட்டை வழங்கல்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இன்றைய நாட்டின் சூழ்நிலையை முன்னிட்டு இந்துக்குருமார்களை இனங் காண்பதற்கு இலகுவாக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. இவ்வகையில் 894 இந்துக்குருமார்களுக்கு அடையாள அட்டைகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

## இந்துப் பண்பாட்டு நிதியம்

## இந்துக்கோயில்களுக்கான சிலைகள் வழங்கல்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இந்துபண்பாட்டு நிதியம் இந்துக் கோயில்களுக்கான சிலைகள் சிலவற்றை வழங்கி வருகின்றது. ஏற்கனவே மூலஸ்தானத்திற் கற்சிலைகள் இல்லாத கோயில்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுச் சிலைகள் வழங்கப்படுகின்றன. விண்ணப்பங்களை அனுப்பிப் பெற்றுக்கொள்ள விரும்பும் இந்துக் கோயில்கள் இந்து பண்பாட்டு நிதியம், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் 248 1/1 காலி வீதி, கொழும்பு 4 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களில் இருந்து ஆலயங்கள் தெரிவு செய்யப்பட்டுச் சிலைகள் வழங்கப்படும்.

## இந்துப்பண்பாட்டு நிதியத்தின் அங்கத்தவர் நியமனம்

இந்துப்பண்பாட்டு நிதியத்தின் புதிய ஆளுநர் சபை அங்கத்தவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம் பொதுநம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் 05-11-2008 ஆம் திகதி நடைபெற்றது. மத விவகார அமைச்சர் கௌரவ பண்டு பண்டாரநாயக்க அவர்கள் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அமைச்சின் செயலாளர் மேலதிக செயலாளர்கள், திணைக்களப்பணிப்பாளர், திணைக்கள உத்தியோகத்தர்கள் இவ் வைபவத்திற் கலந்து கொண்டனர். இவ் வைபவத்தில் புதிய ஆளுநர் சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை மாண்புமிகு அமைச்சர் வழங்கினார். நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட ஆளுனர் சபையின் விவரம் வருமாறு :-

**இந்துப்பண்பாட்டு நிதியத் தலைவர் -**

- திரு எச் எம். ஹேரத், செயலாளர் மத அலுவல்கள் ஒழுக்க மேம்பாட்டு அமைச்சு

**பிரதம நிர்வாக உத்தியோகத்தர் -**

- திருமதி சாந்தி நாவுக்கரசன், பணிப்பாளர்

**உறுப்பினர்கள் -**

- திரு ம. சண்முகநாதன், உதவிப் பணிப்பாளர்
- திரு சி. தனபாலா
- திரு என். மன்மதராஜன்
- திரு முத்தையா செட்டியார் சிவப்பிரகாசம்
- திரு இ. சிவகுமார்
- திரு மு. கதிர்காமநாதன்

**இணைப்பாளர்** ▶ திரு த. யோகநாதன்

இவ் வைபவத்தில் வைத்து மாண்புமிகு அமைச்சரினால் ஆலயங்களுக்கான நிதியுதவிக் காசோலை, இந்து அறநெறிப்பாடசாலைகளின் தளபாடங்கள் கொள்வனவுக்கான நிதியுதவிக் காசோலைகள், வசதியற்ற ஆலயங்களுக்குப் பூசைப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான காசோலைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

## அறநெறிப்பிரிவு

### இந்துசமயப் பொது அறிவுப்போட்டி

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவினை மேம்படுத்தும் முகமாக அகில இலங்கை ரீதியாக 28.06.2008ஆம் திகதி இந்துசமயப் பொது அறிவுப் போட்டி பரீட்சையொன்று. நடாத்தப்பட்டது இப்போட்டியில்

| | | |
|---|---|---|
| பாலர் பிரிவில் | 6,315 | மாணவர்களும் |
| கீழ்ப்பிரிவில் | 6,492 | மாணவர்களும் |
| மத்திய பிரிவில் | 6,291 | மாணவர்களும் |
| மேற்பிரிவில் | 5,263 | மாணவர்களும் |
| | | தோற்றினர். |

தேசிய, மாவட்ட மட்டங்களிலே வெற்றியீட்டிய கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, மாத்தறை மாவட்ட மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் 25.09.2008 ஆம் திகதி கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்திலும், கண்டி, மாத்தளை மாவட்டங்களுக்கான பரிசளிப்பு வைபவம் 28.09.2008 ஆம் திகதி மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயத்திலும் நடைபெற்றது. ஏனைய மாவட்டங்களுக்குகான பரிசளிப்பு வைபவங்கள் அவ்வவ் மாவட்டங்களிலேயே நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூபா. 5,000/-, 4,000/-, 3,000/- பெறுமதியான காசோலைகளும், புத்தகப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு முறையே ரூபா. 3,000/-, 2,000/-, 1,000/-மும், புத்தகப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இப்பரீட்சையில் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்து சமய பொது அறிவுப் போட்டி - 2008

### தேசிய மட்ட முடிவுகள்

**பாலர் பிரிவு**

| இல | மாணவர் பெயர் | சுட்டிலக்கம் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | பதிவிலக்கம் | நிலை |
|---|---|---|---|---|---|
| 01) | மோ.செந்தூரன் | HA/COB/P/317 | இராமகிருஷ்ண அ.நெ. பாடசாலை, கொழும்பு | HA/7/56/1/04 | 1 |
| 02) | பா.அபிரதன் | HA/VOV/P/091 | ஸ்ரீ கருமாரியம்மன் அ.நெ.பாடசாலை, வவுனியா | HA/7/56/8/28 | 2 |
| 03) | இ.கோகிலவதனி | HA/TRI/P/439 | கண்ணகி அம்மன் அ.நெ.பாடசாலை, திருகோணமலை | HA/7/56/11/80 | 2 |

**கீழ் பிரிவு**

| இல | மாணவர் பெயர் | சுட்டிலக்கம் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | பதிவிலக்கம் | நிலை |
|---|---|---|---|---|---|
| 01) | த.குஞ்சரன் | HA/COB/L/320 | இராமகிருஷ்ண அ.நெ. பாடசாலை, கொழும்பு | HA/7/56/1/04 | 1 |
| 02) | ச.ராதிகா | HA/MUL/L/174 | குன்றின்மேற்குமரன் அ.நெ.பாடசாலை, முல்லைத்தீவு | HA/7/56/16/16 | 2 |
| 03) | டி.டினுஜாந் | HA/MAN/L/257 | சித்தி விநாயகர் அ.நெ.பாடசாலை, மன்னார் | HA/7/56/22/60 | 3 |

**மத்திய பிரிவு**

| இல | மாணவர் பெயர் | சுட்டிலக்கம் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | பதிவிலக்கம் | நிலை |
|---|---|---|---|---|---|
| 01) | பே.டினேஷன் | HA/JAF/M/D033 | சித்திரமேழி ஞான வைரவர் அ.நெ. பாடசாலை, யாழ்ப்பாணம் | HA/7/56/14/09 | 1 |
| 02) | ஜெ.காருண்யா | HA/TRI/357 | அன்பு அ.நெ.பாடசாலை, திருகோணமலை | HA/7/56/11/56 | 2 |
| 03) | என்.மதுசென்சத்ரு | HA/PUT/M/0092 | ஸ்ரீ பொம்மக்கா அ.நெ.பாடசாலை, புத்தளம் | HA/7/56/22/60 | 3 |

**மேற் பிரிவு**

| இல | மாணவர் பெயர் | சுட்டிலக்கம் | அறநெறிப்பாடசாலையின் பெயர் | பதிவிலக்கம் | நிலை |
|---|---|---|---|---|---|
| 01) | ச.யதுஷன் | HA/JAF/U/C330 | இளம் தொண்டர் அ.நெ. பாடசாலை, யாழ்ப்பாணம் | HA/7/56/14/96 | 1 |
| 02) | அ.தனுஷா | HA/TRI/U/245 | காந்தி சேவா அ.நெ.பாடசாலை, திருகோணமலை | HA/7/56/11/43 | 2 |
| 03) | ஜெ.ஜெயமாருதி | HA/KIL/U/0251 | மாவடி மாரியம்மன் அ.நெ.பாடசாலை, கிளிநொச்சி | HA/7/56/15/16 | 3 |

## திணைக்களத்தில் புதிதாக பதிவுசெய்யப்பட்ட இந்து அறநெறிப் பாடசாலைகள் விபரம்

### 01-01-2008 முதல் 07-11-2008 வரை

| இல | மாவட்டம் | அறநெறிப் பாடசாலைகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | கொழும்பு | 3 |
| 02 | மட்டக்களப்பு | 5 |
| 03 | கண்டி | 2 |
| 04 | நுவரெலியா | 9 |
| 05 | கேகாலை | 4 |
| 06 | பதுளை | 1 |
| 07 | வவுனியா | 3 |
| 08 | புத்தளம் | 1 |
| 09 | திருகோணமலை | 1 |
| 10 | இரத்தினபுரி | 4 |
| 11 | மாத்தளை | 4 |
| 12 | யாழ்ப்பாணம் | 6 |
| 13 | கிளிநொச்சி | 6 |
| 14 | முல்லைத்தீவு | 3 |
| 15 | களுத்துறை | 2 |
| 16 | மாத்தறை | 4 |
| | மொத்தம் | 58 |

# இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மாணவர் சீருடை மற்றும் இசைக்கருவி விநியோகம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சமயக்கல்வி பிரிவினரால் இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கு இசைக்கருவி, மாணவர் சீருடை, பாடப் புத்தகங்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அறநெறிப்பாடசாலைகளுக்கான தொகுதிகள் அப்பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர ஏனைய மாவட்டங்களுக்கான தொகுதிகள் திணைக்களத்தில் வைத்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

## 01.01.2008 முதல் 07.11.2008 வரை

| இல | மாவட்டம் | மாணவர் சீருடை (பாடசாலை எண்ணிக்கை) | இசைக்கருவி (பாடசாலை எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 6 | 1 |
| 02 | அம்பாறை | 20 | 4 |
| 03 | மட்டக்களப்பு | 25 | 5 |
| 04 | கண்டி | 7 | 4 |
| 05 | நுவரெலியா | 3 | 4 |
| 06 | கேகாலை | 8 | 2 |
| 07 | பதுளை | 8 | 5 |
| 08 | வவுனியா | 2 | 26 |
| 09 | புத்தளம் | 5 | 3 |
| 10 | கம்பஹா | 2 | - |
| 11 | திருகோணமலை | 1 | 4 |
| 12 | இரத்தினபுரி | 7 | 6 |
| 13 | மாத்தளை | 3 | - |
| 14 | யாழ்ப்பாணம் | 101 | 4 |
| 15 | கிளிநொச்சி | - | 1 |
| 16 | முல்லைத்தீவு | - | 5 |
| 17 | களுத்துறை | 14 | 6 |
| 18 | குருநாகல் | 4 | 4 |
| 19 | அநுராதபுரம் | - | - |
| 20 | மொனராகலை | 1 | 1 |
| 21 | காலி | 1 | - |
| 22 | மன்னார் | 16 | 20 |
| 24 | மாத்தறை | 1 | - |
| | மொத்தம் | 235 | 106 |

## இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட கொடுப்பனவு

### 01-01-2008 - 07.11.2008

| இல | மாவட்டம் | ஆசிரியர்கள் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 158 | 316,000.00 |
| 02 | அம்பாறை | 396 | 792,000.00 |
| 03 | மட்டக்களப்பு | 657 | 1,314,000.00 |
| 04 | கண்டி | 129 | 258,000.00 |
| 05 | நுவரெலியா | 90 | 180,000.00 |
| 06 | கேகாலை | 51 | 102,000.00 |
| 07 | பதுளை | 31 | 62,000.00 |
| 08 | வவுனியா | 78 | 156,000.50 |
| 09 | புத்தளம் | 63 | 126,000.00 |
| 10 | கம்பஹா | 18 | 36,000.00 |
| 11 | திருகோணமலை | 97 | 194,000.00 |
| 12 | இரத்தினபுரி | 102 | 204,000.00 |
| 13 | மாத்தளை | 80 | 160,000.00 |
| 14 | யாழ்ப்பாணம் | 333 | 666,000.00 |
| 15 | கிளிநொச்சி | 49 | 98,000.00 |
| 16 | முல்லைத்தீவு | 34 | 68,000.00 |
| 17 | களுத்துறை | 54 | 108,000.00 |
| 18 | குருநாகல் | 7 | 14,000.00 |
| 22 | மன்னார் | 35 | 70,000.00 |
| 23 | பொலன்னறுவை | 11 | 22,000.00 |
| 24 | மாத்தறை | 42 | 84,000.00 |
| | மொத்தம் | 2515 | 5,030,000.00 |

## அறநெறிப் பாடசாலைகளுக்கான தளபாட விநியோகம்

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட அறநெறிப் பாடசாலை தொகை | தொகை |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 02 | 60,000 |
| 02 | அம்பாறை | 12 | 36,0000 |
| 03 | மட்டக்களப்பு | 16 | 48,0000 |
| 04 | கண்டி | 08 | 240,000 |
| 05 | நுவரெலியா | 04 | 120,000 |
| 06 | கேகாலை | 03 | 90,000 |
| 07 | பதுளை | 07 | 210,000 |
| 08 | வவுனியா | 02 | 60,000 |
| 09 | புத்தளம் | 02 | 60,000 |
| 10 | கம்பஹா | 01 | 30,000 |
| 11 | திருகோணமலை | 02 | 60,000 |
| 12 | இரத்தினபுரி | 03 | 90,000 |
| 13 | மாத்தளை | 03 | 90,000 |
| 14 | யாழ்ப்பாணம் | 06 | 180,000 |
| 15 | களுத்துறை | 03 | 90,000 |
| 16 | மொனராகலை | 01 | 30,000 |
| 17 | மன்னார் | 01 | 30,000 |
| 18 | மாத்தளை | 01 | 30,000 |
| | மொத்தம் | 77 | 2,31,0000 |

# ஆய்வரங்கு



சோழப் பேரரசும் சமயப்பெரு நெறிகளும் எனும் ஆய்வரங்கினை வைபவரீதியாக அமைச்சின் செயலாளர் திரு.எச்.எம். ஹேரத் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்



இராமகிருஷ்ணமிஷன் கொழும்புக்கிளைத் தலைவர் சுவாமி சர்வரூபானந்தாஜீ அவர்களினால் அமைச்சின் செயலாளர் கௌரவிக்கப்படுகின்றார்



ஆய்வரங்கு வைபவத்தில் பேராசிரியர் சி.பத்மநாதன், அமைச்சின் செயலாளர், அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர், சுவாமிஜீ, பேராசிரியர் வை. சுப்பராயலு, பேராசிரியர் கு. சேதுராமன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கும் காட்சி




பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் அமைச்சின் செயலாளர் அவர்களினால் கௌரவிக்கப்படுகின்றார்



ஆய்வரங்கில் கலந்து கொண்ட பார்வையாளர்களில் ஒருபகுதியினர்.




"பக்தி நெறிப் பண்பாட்டுக் கோலங்களும்" எனும் ஆய்வுநூல் அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் திரு. யு.கே. குணவர்த்தனவிற்கு சுவாமிஜீ அவர்கள் வழங்குகின்றார்

## இந்துக் கலைக்களஞ்சிய தொகுதிகள், திணைக்கள வெளியீடுகள் என்பன மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்ட வைபவம்









## நூலகங்களுக்கான நூல்கள் வழங்கல்



பிரதம விருந்தினர் திரு. எச்.எம். ஹேரத்
உரையாற்றுகின்றார்



பிரதம விருந்தினர் திரு. எச்.எம். ஹேரத்
ஆலயங்களுக்கான சிலைகளை வழங்குகின்றார்

# திணைக்கள நவராத்திரி விழா



விழாவில் வாழ்க்கைத் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் பிரதியமைச்சர் கௌரவ. பெ. இராதாகிருஷ்ணன் அவர்கள் பிரதம விருந்தினர் உரையையும், அமைச்சின் செயலாளர் திரு. எச்.எம். ஹேரத், இந்தியக் கலாசார நிலையத்தின் ஊடகப் பணிப்பாளர் திரு. டின்ஹார் அவ்தானா ஆகியோர் சிறப்புரையையும், திணைக்களப் பணிப்பாளர் தலைமையுரையையும் நிகழ்த்தினர்



நவராத்திரி விழா பூசை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்படுகின்றது.




நாதஸ்வர கானவிநோதன் பாலமுருகன் குழுவினரின் மங்கல இசை



நாட்டியக்கலாமணி தீபிகா ரெட்டி அவர்களின் குச்சுப்பிடி நடன நிகழ்ச்சி



திருமதி சிவானந்தி ஹரிதர்ஷனின் "நிருத்தனா" நடனப்பள்ளி மாணவிகளின் நடன நிகழ்ச்சி

# நவராத்திரி விழா

*பாராளுமன்ற வளாகத்தில்...*






*சபாநாயகர் இல்லத்தில்...*





*மாவட்டங்கள் தோறும்...*





# புண்ணியகிராம செயற்திட்டம்



நந்திக் கொடி ஏற்றும் போது



சொற்பொழிவு



மன்னார் மாவட்டத்தில் சிறப்பு சொற்பொழிவு



பெரிய ஊறணி கிராமத்தில் சமயப் பணிபுரிந்து கொண்டிருக்கும் திருமதி காளிமுத்து பொன்னையா, பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் சரியைத் தொண்டு புரியும் திருமதி நேசம்மா வீரக்குட்டி, நாட்டு வைத்தியர் திருமதி நாகமுத்து வேலுப்பிள்ளை ஆகியோருக்கும் கௌரவமளிக்கபட்ட புகைப்படம்.




வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற புண்ணிய கிராம செயலமர்வில் அறநெறி பாடசாலை மாணவர்கள் யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் தோற்றம்.





புண்ணிய கிராம திட்ட நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களும் மாணவர்களும்

## புண்ணியகிராம செயற்திட்ட நிகழ்வுகள்






## பாணந்துறை அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற பூசை வழிபாடுகள்




## ஸ்ரீ இராமகிருஷ்ணர் குரு பூசை



ஸ்ரீ இராமகிருஷ்ணர் குரு பூஜை
விசேட பூஜை நிகழ்வுடன் ஆரம்பம்



அறநெறி பாடசாலை மாணவர்களின்
கலை நிகழ்ச்சி



தலைமை ஆசிரியரிடமிருந்து மாணவர்கள்
சான்றிதழ்களை பெறுகின்றனர்.



திணைக்களத்தின் கண்டி மாவட்ட அபிவிருத்தி
உதவியாளர் திருமதி. அனந்தலட்சுமி சான்றிதழ்
வழங்குகின்றார்.

## மாணிக்கவாசகர் குருபூசை - தென்மராட்சி பிரதேசம்






## ஆலயப்பிரிவு

### இந்துமத குருமார்களுக்கான வதிவிடப் பயிற்சி...



இந்துமத குருமார்களுக்கான பயிற்சிப் பட்டறையின் தொடக்க வைபவம்



இந்துமத குருமார்கள் பயிற்சியில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படம்



இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த விரிவுரையாளர்கள் அமைச்சரை சந்தித்தவேளையில் எடுக்கப்பட்ட புகைப்படம்



இந்துகுருமார் பயிற்சிப்பட்டறையில் விரிவுரையாளர், தேவாரம் இசைப்பாடகர் திரு. ஏ. ஜீவநாதன் உரையாற்றுகின்றார்.



இந்து குருமார் பயிற்சிப் பட்டறையில் விரிவுரையாளரான தமிழக கிராமக் கோயில் பூசாரிகள் பேரவையின் அறங்காவலர் திரு. R.P.V.S. மணியன் உரையாற்றுகின்றார்



திருவிளக்குப் பூசையின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்

# இந்துப் பண்பாட்டு நிதியத்துக்கான புதிய அங்கத்தவர் நியமனம்



உதவிப் பணிப்பாளர் திரு. ம. சண்முகநாதன் வரவேற்புரை நிகழ்த்துகின்றார்



கௌரவ அமைச்சர் பண்டு பண்டாரநாயக்கா, செயலாளர் திரு. எச்.எம். ஹேரத் மற்றும் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் அங்கத்தவர்கள்





கௌரவ அமைச்சர் பண்டு பண்டாரநாயக்கா அவர்கள் ஆலயங்களின் பிரதிநிதிகளுக்கு காசோலைகளை வழங்குகின்றார்



அமைச்சின் செயலாளர் திரு. எச்.எம். ஹேரத் உரையாற்றுகின்றார்



இந்நிகழ்வில் கலந்துகொண்டோர்

## அறநெறிப்பிரிவு



தர்மாசிரியர் கருத்தரங்கு கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதவிநாயகர் ஆலய ஐங்கரன் மண்டபத்தில் நடைபெற்றது



புத்தளம் மாவட்ட அறநெறி ஆசிரியர் கருத்தரங்கு



இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்தில் புதிதாக "கலைமகள்" அறநெறிப்பாடசாலை ஆரம்ப நிகழ்வு



இந்துசமய பொதுஅறிவு போட்டியில் தேசிய மாவட்ட ரீதியில் பரிசு பெற்ற மாணவர்களின் தொகுதி



இந்துசமய பொதுஅறிவு போட்டியில் வெற்றி பெற்ற மாணவி பரிசினைப் பெறுகிறார்.



நுவரெலியா மாவட்ட சீருடை வழங்கும் நிகழ்வு ஹட்டன் மாணிக்கப்பிள்ளையார் ஆலயமண்டபத்தில் இடம்பெற்றது.

# பக்தி இயக்கமும் சைவ சமயமும்

பல்லவர் காலம் முதல் சோழர் காலம் வரையில் உள்ள காலப்பகுதியைப் பக்தி இயக்கக் காலம் (அல்லது) சமய எழுச்சிக் காலம் எனலாம். தமிழ் வரலாற்றை ஆராய்ந்த மு.சி. பூரணலிங்கம் பிள்ளை கி.பி. 700 - 900 வரையில் உள்ள காலத்தைச் சமயக் கிளர்ச்சிக் காலம் என்று குறிப்பிடுகிறார். (Tamil Literature P.154)

சங்கம் மருவிய காலத்தில் இருந்த சமயப் பொறை பக்தி இயக்க காலத்தில் சமயப்போராக மாறியுள்ளது. சங்கம் மருவிய காலத்திற்கும் பல்லவர் காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியின் நிலையை டாக்டர் கே.கே. பிள்ளை "தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்" என்னும் நூலில் அந்த இருண்ட காலப் பகுதியில் தமிழகத்தில் மாபெரும் அரசியல் சமய மொழி மாறுதல்கள் தோன்றித் தமிழரின் வாழ்வையும் நாகரிகத்தையும் பல புதிய திருப்பங்களுக்கு உட்படுத்தின என்கிறார்.

சங்க இலக்கியமே இக்காலத்தில் பக்தி இலக்கியமாக மாறியது எனலாம். பெயர் குறிப்பிடப்படாத கற்பனை மாந்தரின் காதல், தெய்வக் காதலாக வளர்ந்தது. அரசர்களின் வீரம், கடவுளின் அற்புதச் செயலாக மாற்றம் பெற்றது. வள்ளல்களின் கொடைத்திறன், கடவுளின் அருட்செயலாக மாற்றம் பெற்றது. கற்பனைக் காதலுக்குப் பின்னணியாக அந்தந்த ஊர்களின் இயற்கைச் சூழல் வருணிக்கப்பட்டிருந்தது மாறி, கடவுளிடம் செலுத்தும் பக்திக்குப் பின்னணியாக அந்தந்தக் கோயில் தலங்களைச் சூழ்ந்த இயற்கையழகைப் பற்றிய வருணனைகள் அமைந்தன. மன்னவன் வாழ்ந்த இடத்தைக் குறித்த கோயில் என்னும் பெயர், இறைவன் வாழ்ந்த இடத்தைக் குறித்தது. மன்னவனின் காவல் மரம், கோயிலின் தல விருட்சமாக மாறியது. அரச சின்னங்கள் இறைவனுக்கும் உரியதாக்கப்பட்டன. கற்றவர்களுக்கு உரியனவாகப் பாடப்பட்ட சங்க இலக்கியம், ஆழ்வார், நாயன்மார்களின் பக்திப் பாடலாக அனைவரும் பாடுவதற்கு ஏற்றதாக எளிய, இனிய, இசைத் தமிழில் அமைந்தது.

சங்க காலத்தில் தமிழகத்திற்குள் புகுந்த சமண, பௌத்த சமயங்கள் அக்காலத்தில் அரசியல் ஆதரவு காரணமாகக் காலூன்றித் தழைத்தன. களப்பிரரும் பல்லவரும் சமண, பௌத்த சமயங்களைப் போற்றினர். இச்சமயங்களின் தாக்கத்தால் சமுதாய வாழ்வு, நிலையாமையில் நம்பிக்கை கொண்டு வீடுபேறு நோக்கி விரைந்தது. சங்ககாலத்தில் சமவுரிமை பெற்றிருந்த பெண்மை, அக்காலத்தில் வெறுக்கப்பட்டது. எள்ளி நகையாடப்பட்டது. அக்காலத்தில் ஆரியர் அதிகமாகக் கலந்தமையால் நால்வகை வருணப் பாகுபாடும் வேள்வி முறைகளும் நுழைந்தன. வடநூற் கருத்துகளும் கதைகளும் புகலாயின.

சமணத்தின் ஆதிக்கத்தால், பௌத்தம் மங்கியிருந்தது. பல்லவன் மகேந்திரவர்மனும், பாண்டியன் நின்றசீர் நெடுமாறனும் சமணம் தழுவினர். மன்னவன் வழியே மக்களும் ஒழுகினர். நாளடைவில் சமணத் துறவிகளின் இல்லற மறுப்பு, கலை மறுப்பு, ஒழுக்கக் கேடு, வாழ்வில் இன்புறச் செய்யாது தடுத்தமை, சமணப் பள்ளிகளின் ஊழல் மிகுதி, இந்து சமயம் சமண, பௌத்த மதங்களின் நற்கருத்துகளைத் தமதாக்கிக் கொள்ளல், சைவ, வைணவச் சமயங்கள் மக்களின் உணர்வுக்கு விருந்து படைத்தமை போன்றவற்றால் சமணம், மக்கள் ஆதரவினை இழக்கத் தொடங்கியது. இதற்கேற்பச் சைவ, வைணவச் சமயங்கள் இணைந்து நின்று சமணத்தைச் சாடின.

சமயப் பெரியோர்கள் - சிறப்பாக சைவ சமயக் குரவர்கள் - அடியார்கள் புடைசூழ, ஊர் ஊராகச் சென்று பண்சுமந்த பாடல்கள்

பாடினர். கோயில்கள் தோறும் சென்று இறைவனை வாழ்த்தினர். புறச் சமயங்களைப் புறங்காணவும் இந்து சமயத்தைச் சீர்திருத்தித் தழைத்திடச் செய்யவும் எண்ணங்கொண்டு முன்வந்து, முன்னோடிகளாய் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இணைந்து இயங்கி, இன்தமிழ் மக்களை இயக்கிய இயக்கமே பக்தி இயக்கம் எனப்படுகிறது. இவ்வியக்கம் சோழர்காலம் வரை நீடித்தது. இவ்வியக்கம் அன்பு நெறியை மையமாகக் கொண்டு விளங்கியது.

பக்தி இயக்கத்தினர் சமயப் பரப்பலுக்குச் சில உத்திகளையும் மேற்கொண்டனர்.

## சமண அரசர்களைச் சைவத்திற்கு மாற்றுதல்

சமணர்கள் அரசர்களைத் தம் வயமாக்கியிருந்தனர். பல்லவ நாட்டில் முதலாம் மகேந்திரவர்மனும் பாண்டிய நாட்டில் கூன் பாண்டியனும் சமண சமயத்தைத் தழுவியிருந்தனர். அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்னும் மொழிக்கேற்ப, நாட்டு மக்களில் பெரும்பாலோர் சமணராயிருந்தனர்.

பல்லவ அரசில், தருமசேனர் என்ற பெயரில் சமண முனிவர்களின் தலைவராக நாவுக்கரசர் இருந்தார். தமக்கையார் மீண்டும் இவரைச் சைவத்திற்குக் கொணர, இறைவனருளை வேண்டச் சூலை நோய் உண்டாகியது. அவரது ஐந்தெழுத்து போதனையால் நோய் நீங்கிச் சைவம் சார்ந்தார். இது கண்டு பொறாத சமணர்கள் அரசனைத் தூண்டி யானையை ஏவியும், நீற்றறையில் இட்டும், நஞ்சு ஊட்டியும், கல்லில் கட்டிக் கடலில் எறிந்தும் துன்புறுத்தினர். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்', 'நற்றுணையாவது நமச்சிவாயவே' என்று அவர் பாடி உய்ந்தார். நாவுக்கரசராக மாறி உலகை உய்வித்தார்.

பாண்டிய நாட்டில் கூன்பாண்டியன் சமண சமயம் தழுவினான். அவனுடைய துணைவியாரான வளவர்கோன் பாவை மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் சைவர்கள். ஞான சம்பந்தரைப் பாண்டிய நாட்டிற்கு அழைத்தனர். இதனையறிந்த மதுரைச் சமணர்கள், சம்பந்தர் தங்கியிருந்த இடத்திற்குத் தீ இட்டனர். சம்பந்தரின் பதிகத்தால், அத்தீ பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயாக மாறியது. மீண்டும் மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகியோரின் அன்பிற்கிணங்க நீறுபூசி அந்நோய் தணியவும், கூன் நிமிரவும் செய்தார். பாண்டியன் சைவனானான். நாடும் சைவமாகியது. இவ்வாறு நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் மன்னரைச் சைவராக்கியதன் மூலம் நாட்டு மக்களையும் சைவராக்கினர். சம்பந்தர் எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேற்றினார் என்ற செய்தி, சமணம் தாழ்ந்ததையும் சைவம் ஓங்கியதையும் உணர்த்துகிறது. சைவத்தை நிலைநிறுத்த நாவுக்கரசருக்கும் ஞானசம்பந்தருக்கும் முறையே திலகவதியாரும் மங்கையர்க்கரசியாரும் துணை நின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமணம் சைவத்திற்குக் கொடுமையைச் செய்தாலும் சைவம் சமணத்தை அழிக்க விரும்பவில்லை என்கிறது பெரிய புராணம். அது

*சம்பந்தர் தோற்றத்தை விளக்குங்கால்*
*சைவம் முதல் வைதீக நெறிகள் தழைக்க,*
*அவத்தொழில்கள் பெருக்கும் புன்மைச் சமணம்*
*முதலிய பரசமயத் தருக்கொழிய (1920)*

என்கிறது. நாவுக்கரசரைப் பரசமயப் பற்றறுத்த பான்மையினர் என்கிறது. அவர் பிறந்த ஊரைச் சைவ சமயத்தை ஏழுலகங்கட்கும் கொடுக்கும் ஊர் திருவாமூர் என்கிறது. பக்தி இயக்கத்தின் முன்னோடிகளாகச் சைவ சமய மறுமலர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியவர்களாக இவர்கள் உள்ளனர்.

## திருக்கோயில்கள்

"கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்ற மொழி உருவாவதற்குப் பக்தி இயக்கம் வழி வகுத்தது. பக்தி இயக்கம், கோயில்களைச் சமுதாய மையங்களாகக் கொண்டு அவற்றின் சூழலில் ஒரு சமய

வாழ்வியலை - சைவ வாழ்வியலை உருவாக்கியது. தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் உள்ள கோயில்களுக்கு அவர்கள் தொண்டர் கூட்டத்துடன் பயணம் மேற்கொண்டனர். தலயாத்திரைகள், சைவத்தை மக்கள் வாழ்க்கைக்கு மிக நெருக்கமாக அழைத்துச் சென்றன. வழிப்பயணத்தில் பாடிய பண்ணமைந்த தேவாரப் பாடல்களும், ஊர்க் கோயில்களில் வலம் வந்தன. அந்தந்த ஊர்மக்களை இணைத்தன.

*"திருக்கோயி லில்லாத திருவிலூரும்*
*திருவெண்ணீ றணியாத திருவி லூரும்*
*பருக்கோடி பத்திமையாற் பாடா வூரும்*
*பாங்கினொடு பலதளிகள் இல்லா வூரும்*
*விருப்பொடும் வெண்சங்கம் ஊதா வூரும்*
*விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்*
*அருப்பொடு மலர்பறித்திட்டுண்ணா வூரும்*
*அவையெல்லா மூரல்ல அடவி காடே"*

என நாவுக்கரசர் கோயிலின் சிறப்பைப் பாடினார். (6:95:5) கோயில்கள் இல்லாத ஊர்கள் காடுகளே என்றும் அறிவித்தார்.

நாவுக்கரசர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் மேற்கொண்ட பயணங்கள் ஊர்கள் தோறும் இருந்த கோயில்களை மக்களுக்கு இனம் காட்டின. அக்கோயில்களில் வழிபாட்டு முறைகள் நிகழ வழி வகுத்தன. கவனிப்பாரற்று பாழடைந்து விட்ட கோயில்கள். புதுப்பிக்கப்பட்டன. திருமறைக்காட்டிலே நாவுக்கரசரும் சம்பந்தரும் வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த கோயிலைத் திறக்கவும் மூடவும் பாடிய பாடல்கள் இக்கருத்தினவே. கோயில்கள் சமூக மையங்களாக மாறுவதற்கும் பக்தி இயக்கம் வழி வகுத்தது. நாவுக்கரசர்.

*"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில்புக்கு*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்*
*சங்கராசெய போற்றி போற்றி என்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி என்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே"*

என்னும் பாடலில், கோயில் வழிபாட்டை அறிவுறுத்தினார். (திருமுறை 6:31:3) இப்பாடல், சமூகத்தினரைக் கோயிலை நோக்கி அழைக்கிறது. கோயிலில் செய்ய வேண்டிய தொண்டு முறைகளை அறிவுறுத்துகிறது.

சமய அறநிலையங்களாகக் கோயில்கள் இருந்ததோடு சமய வளர்ச்சியின் சின்னங்களாகவும் இருந்தன. சமய வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் கோயில்கள் பல கட்டப்பட்டன. காஞ்சி, கரூர், திருவாலங்காடு, திருப்பாதிரிப்புலியூர், திருக்காளத்தி ஆகிய இடங்களில் கோயில்கள் சிறப்பாக அமைந்திருந்தன. ஆற்றங்கரைகளிலும் கட்டப்பட்டிருந்தன. தமிழகத்திற்கப்பால் தெலுங்கு, கன்னடப் பகுதிகளிலும் வாரணாசி, கயிலை, திருக்கேதாரம் முதலிய ஊர்களிலும் கோயில்கள் சிறப்புற்றிருந்தன. திருநாவுக்கரசர் தொண்டை நாடு, தெலுங்கு நாடு, கன்னட நாடு ஆகிய பகுதிகளிலிருந்த சைவக் கோயில்களில் இறைவனைத் தொழுதார். வடக்கே வாரணாசி முதல் தெற்கே இராமேசுவரம், திருநெல்வேலி வரையில் உள்ள சிவாலயங்களில் இறைவனை வழிபட்டார். (பெ.பு.1398-1572) திருஞானசம்பந்தர் 230 ஆலயங்கட்கும் சுந்தரர் 110 ஆலயங்கட்கும் சென்றனர் என்று மா. இராசமாணிக்கனார் கணக்கிட்டுள்ளார். (பெரியபுராண ஆராய்ச்சி ப.335) இதிலிருந்து பக்தி இயக்கக் காலத்தில் கோயில்கள் பல எழுந்தன. மக்களின் சமயவுணர்வை வளர்க்கப் பயன்பட்டன என்பதை அறிய முடிகிறது.

## அற்புதச் செயல்கள்

சைவ சமயக்குரவர்களும் நாயன்மார்களும் அற்புதங்கள் செய்ததன் மூலம் மக்களைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறச் செய்தனர். அவர்கள் தங்கள் தேவாரத் திருப்பதிகங்களைப் பாடியே அற்புதங்களைச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் மக்கள் அப்பதிகங்களைப் பாடினர்.

சம்பந்தர் திருமறைக்கோயில் திருக்கதவங்கள் மூடவும், காவிரியில் ஓடம் தானே இயங்கவும், மயிலையில் அரவம் தீண்டி எரிக்கப்பட்டுச் சாம்பராக இருந்த பூம்பாவை குடத்தினின்றும் உயிர்பெற்றெழவும், திருப்பாச்சிலாச்சிரமத்தில் மழவன் மகளுடைய முயல்கன் நோய் நீங்கவும், திருமருகலில் பாம்பு தீண்டிய வணிகனது விடம் நீங்கவும், வாதுக்கழைத்த புத்தநந்தியின் தலை துண்டாகவும், திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண் பனையாக்கவும், சமணரோடு புரிந்த வாதில் நெருப்பிலிட்ட ஏடு எரியாமலும், புனலில் போட்ட ஏடு எரிந்து நிற்கவும் பல அற்புதங்கள் நிகழ்த்தினார்.

நாவுக்கரசர் பாம்பு கடித்து மாண்ட அப்பூதியடிகளின் மைந்தனைப் பதிகம் பாடி எழுப்பினார். மறைக்காட்டுக் கதவம் திறந்தார். கைலாயக் காட்சியினை ஐயாற்றில் காணும் பேறுபெற்றார்.

சுந்தரர் பன்னீராயிரம் பொன்னை மணிமுத்தாற்றில் போட்டுக் கமலாலயத்தில் எடுத்தல், திருப்புகலூரில் தலைக்கு வைத்த செங்கல் பொன்னாதல், இறைவனைப் பரவை நாச்சியாரிடம் தூது விடுத்தல், காவிரியாறு இரு கூறாதல், விநாசியில் முதலை உண்ட பாலகனை எழுப்புதல் ஆகிய அற்புதச் செயல்களைச் செய்தார்.

சைவ சமயக் குரவர்கள் தங்கள் தமிழ்ப் பாடல்களால் அற்புதங்கள் நிகழ்த்தியமை பொதுமக்களைக் கவர்ந்து சமயப் பரப்புதலுக்குக் காரணமாயிற்று. பண்ணோடு இயைந்த தமிழால் இறைவனைப் போற்றி மகிழ வாய்ப்புத் தந்தது. சிவனின் ஆற்றலையும், தமிழ்ப் பதிகங்களுக்கு உள்ள ஆற்றலையும் மக்கள் உணர வாய்ப்பேற்பட்டது.

பக்தி இயக்கத்தில் மக்கள் பெருக்கம் தேவைப்பட்டது. அதனால் சைவ சமயத்தில் பொருளாதார, சாதி ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டன. கைம்மாறு கருதாத தொண்டு வாழ்வு போற்றப்பட்டது. அன்பு நெறியே சமய நெறியாகக் கருதப்பட்டது. சமுதாய ஒழுக்கத்தையும் சமூகத் தொண்டையுமே சமயம் எனக் கொண்டனர். இதன் விளைவாக, சைவ சமய எழுச்சியும், சமண, பௌத்த மத வீழ்ச்சியும் உண்டாயிற்று.

## பொறையுடைமை

*"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்*
*பொறுத்தார்க்குப் பொன்றும் துணையும் புகழ்"*
*(குறள்:156)*

என்றார் வள்ளுவர். இதற்கு எடுத்துக்காட்டாக நாவுக்கரசரும் சம்பந்தரும் விளங்கினர். நாவுக்கரசர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதால், சமணர்கள் அரசரிடம் கூறிப் பல வழிகளில் அவரைத் துன்புறுத்தினர். அரசன் ஏவலரை அனுப்பி இவரை அழைத்து வரச்சொன்னபோது சிவபெருமானுக்கு ஆளான தான் அரசனுக்கு அடி பணியமாட்டேன் என்று பெருமிதத்துடன் பாடினார்.

*"நாமார்க்கும் குடிஅல்லோம் நமனையஞ்சோம்*
*நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்ப மில்லை*
*தாமார்க்கும் குடிஅல்லாத் தன்மை யான*
*சங்கரநற் சங்கவெண் குழையோர் காதில்*
*கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்*
*கொய்ம்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே"*

என்னும் பாடல் ஒவ்வொருவரும் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டிய பாடல் (6:98:1) இதனால் வெகுண்ட அரசன் திருநீற்றறையில் இட்ட போது.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள் வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே" (5:90:1)

என்று பாடியதால், சுண்ணாம்புக் காளவாயும் குளிர்ச்சாதன அறையாயிற்று. சமணர்கள் நஞ்சு கொடுத்தனர். அது அமுதமாயிற்று. யானையைக் கொண்டு இவர்

தலையை இடறச்சொல்லினர். அப்போது இவர்,

*சுண்ண வெண் சந்தனச் சாந்தும் (4:2:1)*

என்ற பதிகத்தைப் பாடினார். கொல்ல வந்த யானை நாவுக்கரசரை வணங்கி, ஏவிய பாகர்களைக் கொன்றது. அவரைக் கல்லிற்கட்டி கடலிற் பாய்ச்சியபோதும் *"சொற்றுணை வேதியன்"* என்று தொடங்கி "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று பாடினார். (4:11:1) கட்டிய கல்லும் தெப்பமாக மாறிக் கரைசேர்த்தது. அப்பரின் பொறுமையையும், ஊறு நேராமை-யையும் கண்ட மன்னன் தெளிந்தான். சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறினான்.

திருஞானசம்பந்தரும் பொறுமை உடையவர். இவர் மடத்தில் தங்கியிருந்தபோது சமணர்கள் தீயிட்டனர். சமணர் இட்ட தீ ஞானத்தீயைச் சுடவில்லை, சம்பந்தர் அந்தத் தீயைச் சமணரை நோக்கியும் ஏவவில்லை. பாண்டியனைச் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்ற விரும்பிய அவருடைய அருள் உள்ளம், பையவே சென்று பாண்டியன் வயிற்றில் அந்தத் தீ புகுந்து வெப்பு நோயாக மாறப் பாடியது.

சமயத்தைப் பரப்ப விழைந்த அருளாளர்கள் பொறையுடையவர்களாகத் திகழ்ந்தனர். பகைவர்கள் செய்யும் தீமைகளைப் பொறுத்தனர். தீங்கிடமிருந்து அருட்கடலாம் இறைவன் தம்மைக் காப்பான் என்று பெருநம்பிக்கை கொண்டனர். இறைவனின் அருட்செயலைக் கண்ட மக்கள் தாங்களும் மதம் மாறி, இறையருளை நம்பினர். சமயம் பரப்பலுக்குப் பொறையுடைமை முதன்மைப் பண்பாகப் போற்றப்பட்டது.

## துறவு மறுப்பு

சமணர்கள் இல்லற வெறுப்பாளர்கள்: துறவு விருப்பாளர்கள்: மக்களைத் துறவிகளா-க்கியவர்கள்: பெண்களை வெறுத்தவர்கள்: பெண்களை "மாயப்பிசாசு" எனப் பழித்தவர்கள்: பக்தி இயக்கம், இல்லறத்தின் மூலமாக இறைவனை அடையலாம் என அறிவுறுத்தியது: பெண்களை மதித்தது. பல்லவனையும் பாண்டியனையும் சமயம் மாற்றிய பெருமை திலகவதியாரையும், மங்கையர்க்கரசியாரையுமே சாரும். இருவரும் பெண்மையைப் போற்றினர்.

*"மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்*
*எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை*
*கண்ணினல் ல:துறும் கழுமல வளநகர்ப்*
*பெண்ணினல் லாளொடும் பெருந்தகை*
*இருந்ததே" (3:24:1)*

என்று சம்பந்தர் பாடினார். சம்பந்தரின் முதற்பாடலே "தோடுடைய செவியன்" எனத் தொடங்குகிறது. இறைவனை அம்மையப்பனாகக் கண்டது. இல்வாழ்வின் சிறப்பை உணர வழிவகுத்தது. சம்பந்தர் திருமண வாழ்வை மேற்கொள்ளும்போது துணைவியாருடன் இறைவன் அடி சேர்ந்தார். சுந்தரர், இறைவன் துணையால் பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்தார். சுந்தரரின் காதல் வாழ்விற்கு இறைவனே தூது சென்றார். பக்தி இயக்கம் இல்லறத்தின் வழி இறைவனை அடையும் வழியினைக் கூறி அனைத்துக் குடும்பத்தினரையும் சைவராக்க முனைந்தது.

## சிவபெருமானை உறவினராக்குதல்

இறை அன்பர்களாக விளங்கிய தேவார மூவரும் இறைவனை நெருக்கமான உறவினனாகக் கருதினர். "அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ" என்றும் "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்றும் நினைத்தனர். இறைவனுக்கும் நாவுக்கரசருக்கும் உள்ள உறவை ஆண்டான் - அடிமை நெறி (தாசமார்க்கம்) என்றும், இறைவனுக்கும் சம்பந்தருக்கும் உள்ள உறவை தந்தை - மகன் நெறி (சத்புத்ர மார்க்கம்) என்றும், இறைவனுக்கும் சுந்தரருக்கும் உள்ள உறவைத் தோழமை நெறி (சகமார்க்கம்) என்றும் கூறுவர். இன்னும் நெருக்கமான நிலையில், இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் (மதுரமார்க்கம்) நினைத்தனர். சங்கத் தமிழரின் மானுடக் காதல் மரபு, பக்தி இயக்கக் காலத்தில்

தெய்வீகக் காதலாக மலர்ந்தது. காதல் நெறியால், இலக்கியம் வளம் பெற்றது. நாவுக்கரசரின் அகப்பாடல் ஒன்று மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

*"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்*
*மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்*
*பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்*
*தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே"*
*(6:25:7)*

என்று கவிதை நயத்துடன் பாடியுள்ளார்.

*"சிறையாரும் மடக்கிளியே! இங்கேவா தேனொடுபால்*
*முறையாலே யுணத்தருவன் மொய்பவளத்*
*தொடுதரளந்*
*துறையாருங் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்*
*பிறையாளன் திருநாமம் எனக்கொருகால்*
*பேசாயே"*

என்று காதல் கொண்ட தலைவி கிளியிடம் கூறுவதாகச் சம்பந்தரும் பாடியுள்ளார். (1:60:10)

இவ்வாறு உறவுமுறைகளின் வழி பாடல்கள் புனையப் பெற்றதால் மக்களுக்குச் சிவபெருமான் எட்டாக்கனியாக இல்லாமல் கனிச்சாறாகக் காட்டப்பெற்றான். மக்கள் இறைவனோடு ஒன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்துவதாக அமைந்தது.

## தமிழிசையைப் பரப்புதல்

சமணர்கள் கலை மறுப்பாளர்கள். கலை, உணர்வுக்கு வழிகோலுவதாக - துறவுக்கு இடையூறாக இருப்பதாக நினைத்ததால் அவர்கள் கலைகளைப் போற்றவில்லை. முத்தமிழ் என்று போற்றப்பட்ட தமிழில் இயற்றமிழ் அளவிற்கு இசைத்தமிழ், நாடகத்தமிழ் நூல்கள் இல்லாமைக்குச் சமணர்களும் காரணமாவர்.

சமணர்கள் தூற்றிய இசையைப் பக்தி இயக்கத்தினர் ஏற்றுக்கொண்டனர். இவர்கள், "ஏழிசையாய், இசைப்பயனாய்" இறைவன் விளங்குவதாக நினைத்தனர். பழந்தமிழ்ப் பண்களில் தம் கருத்தைக் கூறினர். பண்கலந்த பாடல்களை விரும்பிக் கேட்கும் அருளுடையவனாக இறைவனை எண்ணினர். *"பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை" (5:18:4) "பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பாபோற்றி" (6:5:2)* என்று நாவுக்கரசர் பாடியுள்ளார். ஞானசம்பந்தரும் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் எனப் போற்றப் பெற்றார்.

இவர்கள் கொல்லி, கொல்லிக் கௌவாணம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, காந்தார பஞ்சமம், பழம் பஞ்சுரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி, புறநீர்மை, பஞ்சமம், கௌசிகம், நட்டராகம், செவ்வழி, செந்துருத்தி, தக்கராகம், தக்கேசி, நட்டபாடை ஆகிய பண்களால் இறைவனைப் போற்றிப் புகழ்ந்தனர்.

இயல், இசை, நாடகம் ஆகிய முப்பண்புகளையும் தமிழ் பண்டிருந்தே பெற்றிருந்தாலும் மிகுதியாகத் தமிழில் இசை வெள்ளம் பாயத்தொடங்கியது சமய காலத்திலேயே ஆகும். இசைப்பண்பு சமய காலத்தில் மிகுதிப்பட்டு விட்டதாலேயே சமயாச்சாரியார்களும் தமிழுக்கு இசைத் தன்மையை மிகுதிப்படுத்தும் அடைமொழிகளைத் தந்தனர். இன்தமிழ் (சம்.தே.234;11;சுந்.தே.9-11), இன்புறுந்தமிழ் (சம்.தே.214:11), இசைமலிதமிழ் (சம்.தே.22:11), இன்னிசைச் செந்தமிழ் (சுந்.தே.17:11) எனப் பல அடைமொழிகள் இட்டுத் தமிழைச் சிறப்பித்தனர். இவ்வாறு இசை, இனிமை தொடர்பான சொற்களைக் கொண்டு தமிழைச் சிறப்பிப்பது சங்க இலக்கியங்களில் காணமுடியாத ஒன்றாகும்.

நாட்டுப்புறப் பாடல் வடிவங்களும் நாயன்மார் பாடல்களில் இடம் பெற்றன. இதனால் மொழியில் நெகிழ்வு ஏற்பட்டதோடு இசைப்பண்பும் மிகுதிப்பட்டது. புதுப்புதுச் சந்தங்கள் உருவாயின. அதனால் சமய குரவர்கள் சந்தப் பெருக்கினை மிகுதியாகப் பெற்றது தமிழ் என்று குறிப்பிட்டனர். சந்தநிறை தண்டமிழ் (சம்.தே.

335:11), "சந்தமார் தமிழ்" (சம்.தே.114:11) எனச் சந்தம் என்ற அடைச் சொல்லையே தமிழுக்கு இட்டனர். இவ்வடைமொழியைக் குறிப்பிடுவது சமய காலத்தில் புதிதாக ஏற்பட்ட ஒன்றாகும்.

## சைவ சமயப் பிரிவுகளை இணைத்தல்

பக்தி இயக்கக் காலத்தில், தமிழகத்தில் பல்வேறு சைவப் பிரிவுகள் இருந்தன. பாசுபதம், காபாலிகம், காளாமுகம், பைரவம் முதலிய பிரிவுகள் குறிக்கத்தக்கன. இச்சமயங்கள் சாதாரண மக்களுடன் இணையாத, ஒன்றாகாத நிலையில் இருந்தன. காபாலிகம், காளாமுகம் முதலியன சார்ந்தோர் எலும்பு மாலை அணிதல், புலித்தோற் கௌபீனம் உடுத்துதல், மண்டையோட்டிற் பிச்சை ஏற்றல், உடல் முழுவதும் நீறுபூசுதல் முதலியவற்றை மேற்கொண்டனர். பக்தி இயக்கம், "சைவம் பண்பாட்டு வளமுள்ள சமய நெறி" என நிறுவ முயன்றது. இப்பக்தி இயக்கம், காபாலிகம் முதலியவற்றுக்கு எதிரான மௌனப் புரட்சியை விளைத்த இயக்கம் என்றும் கூறலாம். இதனால் சைவ சமயத்தின் பல்வேறு கிளைகள் ஒன்றாக இணைய வாய்ப்பேற்பட்டது.

## சமண, பௌத்த மதத்தவரை இழித்துரைத்தல்

திருநாவுக்கரசர் - சம்பந்தர் காலத்தில் சைவத்திற்கும், சமண, பௌத்த மதங்களுக்கும் இடையே பெரும் போராட்டம் இருந்துள்ளது. சமயக் காழ்ப்புணர்வை நாவுக்கரசர் - சம்பந்தர் பாடல்களில் காணமுடிகிறது. அவர்கள் தூய்மையற்றவராக, நீராடாதவர்களாக, பல்துலக்காதவர்களாக, நாற்ற மேனியராக வருணிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலமாக மக்கள் காலையில் எழுந்து, நீராடி, திருநீறு பூசி, கோயிலுக்குச் சென்று பஞ்சாட்சரத்தை ஓதி இறைவனை வழிபட வழிவகுத்தனர்.

நாவுக்கரசருக்குப் பல்வேறு துன்பங்களை இழைத்தமையால் அவர்கள் குண்டர்கள், முண்டர்கள் என்றும் தூற்றப்படுகின்றனர். இவர்களின் பாடல்களில் சமண, பௌத்த மதத்தினர் சிவ வழிபாட்டுக்குத் தீமை விளைவிப்பவராகவும், சிவனடியார்களைக் கண்டு எள்ளி நகையாடுபவர்களாகவும், பிற மதத்தினரைக் கொல்ல விரும்பும் வெறியாளர்களாகவும் மக்களோடு ஒன்றாதவர்களாகவும் படம்பிடிக்கப்பட்டுள்ளனர். சம்பந்தருடைய தேவாரப் பதிகங்களின் 10ஆம் பாடல்கள் சமணரையும் பௌத்தரையும் கண்டித்தல், இழித்துரைத்தல், பழித்தல், நகையாடுதல் முதலிய நிலைகளில் அமைந்துள்ளன. இப்பதிகங்களின் மூலம் மக்கள் சமண, பௌத்த சமயத்தின் குறைகளை உணர்ந்து சைவ சமயத்திற்கு மாற வழி வகுக்கப்படுகிறது.

தேவாரத் திருப்பதிகங்களுள் சம்பந்தர், அப்பர் திருப்பதிகங்கள் பெரும்பாலும் ஒரே காலத்தில் தோன்றியவை. சுந்தரர் திருப்பதிகங்கள், ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் தோன்றியவை. முன்னைய இருவரது காலமும் தமிழ்நாட்டில் புறச்சமயங்கள் அரசர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேலோங்கியிருக்க, சைவ சமயம் அருகியிருந்த காலம். அதனால், அவர்கள் புறச்சமயக் களைகளைக் களைந்து சைவ சமயத்திற்குப் புத்துயிர் கொடுத்து வளர்க்க வேண்டிய நிலையில் இருந்தனர். சுந்தரரது காலம் அவ்வாறின்றி, ஞானசம்பந்தர் - நாவுக்கரசரது நல்லருட் செயல்களால் புறச்சமயங்கள் மறைய, சைவ சமயம் மேலோங்கியிருந்த காலமாகும். அதனால் அப்போது இருவரது பாடலைப் பெற்ற தலங்கள் சிறப்புற்று விளங்கின. மக்களும் சைவ சமயத்தில் ஆர்வமும் ஊக்கமும் கொண்டிருந்தனர். மேலும் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் சைவ சமயத்தினராய் விளங்கினர். ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் காடு போக்கி, நிலந்திருத்தி விதைத்துச் சென்ற வித்து விளைவைத் தர, அதன் பயனை மக்கள் மகிழ்ந்துண்ணும் காலமே நம்பியாரூரர் வாழ்ந்திருந்த காலம் எனலாம். இந்நிலைக்கேற்பவே இவர்களுடைய திருப்பதிகங்களும் திகழ்ந்தன. சம்பந்தன் தன்னைப் பாடினான்; நாவரசன் என்னைப் பாடினான்; சுந்தரன் பொன்னைப் பாடினான்: என்று சிவபெருமான் சொன்னதாக ஒரு பழமொழி உண்டு. இது மூவர் பாடல்களைப் பற்றிய மதிப்பீடாக அமைகிறது.

பெரியபுராணத்தில் சமண, பௌத்தர்களின் ஆதிக்கம், தேவார மூவர்களால் ஓரளவு தடைப்படுத்தப்பட்டது. ஆயினும் 12 ஆம் நூற்றாண்டில் அநபாய சோழன் காலத்தில் மீண்டும் புத்துயிர் பெறத் தொடங்கியது. கல்வி வல்லவர்களாகிய அவர்கள் கல்வி வல்ல மன்னர் மகிழும்படியாகப் பல இலக்கிய, இலக்கண நூல்களை எழுதினர். புதிய புதிய உத்திகளைக் கையாண்டு அவர்கள் இலக்கியம் படைத்தனர். இலக்கிய வடிவு, பொருள், ஆகியவற்றை மாற்றி நயம் மிக்க காவியங்களை எழுதினர். பிற மொழியில் இருந்த பெருங்கதை போன்ற காவியங்களை மொழி பெயர்த்தனர்.

அநபாய சோழனின் காலத்தில் (2-ஆம் குலோத்துங்கன்) திருத்தக்க தேவர் சீவகனின் கதையை எழுதினார். முதன் முதலாக விருத்தப்பாவினால், தன்னேரில்லாத அரசனைத் தலைவனாகக் கொண்டதாக, பெண்களை உயர்த்துவதாக, கலைகளைப் போற்றுவதாக, இல்லற இன்பங்களைத் துய்த்து இறுதியில் முக்தி பெறுவதாக, கலப்புத் திருமணத்தை வரவேற்பதாக, தொண்டு உள்ளம் கொண்ட நிலையினதாகச் சிறந்த காப்பியத்தை உருவாக்கினார். ஓர் அரசனின் சிறந்த வாழ்வாக அமைந்த சீவக சிந்தாமணி மற்றொரு அரசனாகிய அநபாயனைப் பெரிதும் கவர்ந்தது.

இந்த நிலையை மாற்ற விரும்பியே சேக்கிழார் கற்பனையற்ற உண்மை நிகழ்ச்சிகளைக் கொண்ட: தன்னலமற்ற தொண்டு வாழ்வினை மேற்கொண்ட: கலைகளைப் போற்றிய: இல்லற வாழ்வினை மேற்கொண்ட: பல அரசர்களின் வாழ்வினை அடக்கியதாகப் பெரிய புராணத்தை எழுதினார். தன் அமைச்சர் எழுதிய பெரிய புராணத்தால் ஈர்க்கப்பட்ட சோழன், அவருக்குத் "தொண்டர்சீர் பரவுவார்" என்ற பட்டத்தையும் கொடுத்துத் தன் பட்டத்து யானைமீது ஏற்றி, நகர்வலம் வரச் செய்தான். சடையப்ப வள்ளலைத் தன் இராமாயணக் காப்பியத்தில் பல இடங்களில் வைத்துப் போற்றிய கம்பரைப் போலச் சேக்கிழாரும் பல இடங்களில் அநபாயனைப் பாராட்டிப் பாடியுள்ளார். எனவே பக்தி இயக்க வரலாறு, சேக்கிழார் காலம் வரை நீண்டிருப்பதை உணர முடிகிறது.

இப்பக்தி இயக்கத்தால் பல பயன்கள் விளைந்தன. பக்தி வெள்ளம் பார் முழுவதும் பரவிப் பண்பையும் அன்பையும் வளர்த்தது. இருண்ட காலத்தில் மன்னர்க்கும் மக்களுக்கும் இடையே ஏற்பட்ட இடைவெளி, நீங்கி நெருக்கம் உண்டானது, இயற்றமிழ் இசைமணம் பெற்றது. தமிழிசை தவழ்ந்தது. மூலையில் முடங்கிக் கிடக்காமல் அனைவரிடமும் அருந்தமிழ் விளையாடியது. பண்டிதர் மொழியாக இருந்த பைந்தமிழ் பாமரர் மொழியாக மாறியது. வடசொல் கலந்தமையால் இறுகியிருந்த தமிழ் இளகியது. சொல்வளமும் சிறந்தது. பைந்தமிழ் பக்தி மொழியாக உருவெடுத்தது. பக்தி இலக்கியங்களான தேவார, திவ்வியப் பிரபந்தங்கள் தோன்றின. சைவ, வைணவ சமயங்கள் மலர்ச்சியுற்று நிலைபெற்றன. பிள்ளைத் தமிழ், உலா, கோவை, கலம்பகம் போன்ற பிற்காலப் பிரபந்தங்கட்கு ஊற்று நிலையாகப் பக்திப் பாடல்கள் ஒளிர்ந்தன. மன்னரையும் மக்களையும் பாடும் முறை மாறி இறைவனைப் பாடும் இலக்கிய மரபு ஏற்பட்டது. இசை, நாடகத் தமிழைத் துய்க்கப் பக்தி, கருவியாகியது. நாட்டுப்புறப் பாடல் வளர்ந்தது. (திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளி - யெழுச்சி) தமிழகம் எங்கணும் கோயில்கள் பெருகின. ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வு உண்டானது. மக்களிடையே ஒற்றுமையை உண்டாக்கியது. சிற்றின்பக் காதல் பேரின்பக் காதலாக மாறியது. பாடல் பெற்ற தலங்கள் உருவாயின. கோயிலில் தமிழில் வழிபாடு தொடங்கியது. புதிய உரை நடையான மணிப்பிரவாள நடை தோன்றியது. விருத்தப்பா தலைசிறந்து திகழ்ந்தது. தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்கள் தோன்றின. பக்தி இயக்கத்தால் சமய உலகிலும், இலக்கிய உலகிலும் பல்வேறு புதுமைகளும் மாற்றங்களும் தோன்றின என்று உறுதியாகக் கூறலாம். இவ்வியக்கத்திற்குத் தேவார மூவரில் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் ஆற்றிய தொண்டு மிகப் பெரியதாகும்.

# பன்னிரு ஆனந்தம்

பேராசிரியர். ப. இராமன்

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆறுமுகனைப் பற்றியே 6666 திருப்பாடல்கள் அருளியுள்ளார்கள். இவை அனைத்தும் ஆறுமுகனைப் பற்றிய சாத்திரமும் தோத்திரமும் என இருவகைப்படும். சாத்திரங்களுள் ஒன்று பரிபூரணானந்தம் எனும் அரிய நூலாகும். இச்சாத்திரம் வைதிக சைவசித்தாந்தத்தை விளக்க அருளப்பட்டதாகும் ஸ்ரீமத் சுவாமிகள் அத்வைதம் அல்லது ஏகான்மவாதம், துவைதம், விசிட்டாத்வைதம் ஆகியவற்றின் குறைகளை விளக்கி ஆன்மாவும் இறைவனும் இரண்டறக் கலந்திருக்கும் நிறைநிலையை வேத ஆகம சம்மதமாக விளக்கியுள்ளார்கள். இந்த இறை, உயிர் கலப்பைச் சுத்தாத்துவாதம் எனத் தெளிவுறுத்தியுள்ளார்கள். இத்தத்துவத்தை விளக்க அருளப்பட்ட சாத்திரமே பரிபூரணானந்த போதம் எனும் ஒப்பற்ற நூலாகும்.

'பரி' என்ற வடசொல்லுக்கு 'எல்லாம்' என்று பொருள். பூரணம் என்பதற்கு 'முழுமை' என்பது பொருள். 'ஆனந்தம்' என்பதற்கு 'இன்பம்' என்பது பொருள். ஆதலால் எல்லாம் சேர்ந்த முழுமையான இன்பம் எதுவோ அது பரிபூரணானந்தம் என்பதாகும். பன்னிரு ஆனந்தங்களைப் பார்ப்போம்.

## 1. பெத்தநிலை ஆனந்தம்

உயிர்களில் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலம் உடையவர் சகலர் ஆவர். இச்சகலரையே பெத்தர் என்பர் இவர்கள் உலகின்பங்களையே உண்மையென்று நம்பித் துய்ப்பவர்கள், இந்தச் சிறிய இன்பங்களுக்கும் மேலான இன்பங்கள் உண்டு என்பதை அறியாதவர்கள் ஆணவமலாந்தகாரத்தில் மூழ்கியவர்கள் அறிவொளியைக் காண மாட்டாதவர்கள். இவர்கள் நிலை ஆந்தை போன்றதாகும். எத்தனை சூரிய ஒளி இருந்தாலும் அதனை ஆந்தை அனுபவிக்காது. அது சூரியன் இல்லாத இரவுக் காலத்தில் தான் சஞ்சரிக்கும்.

## 2. ஜீவன் முத்தர் ஆனந்தம்

இன்னொரு வகையினர் ஜீவன் முத்தர் எனப்படுவர். இவர்கள் மூன்று மலங்களையும் ஒழித்து விட்டாலும் தேகத்தோடு கூடி உலகில் வாழ்பவர்கள். இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் உப்புநீர் உறைமீன் உப்பு ஏறாதது போல உலகில் வாழ்ந்தாலும் உலக பாசங்கள் இவரைப் பற்றமாட்டா. சஞ்சிதகன்மம், ஆகாமிய கன்மம், பிராரத்தகன்மம் என்ற மூன்று கன்மங்களையும் ஒழித்துச் சும்மா இருப்பவர்கள், இவர்கள் எப்போதும் இறைவனோடு இலயமான நிலையிலிருந்து கொண்டிருப்பார்கள். இவர்களைப் பூனைக்கு ஒப்பிடலாம். பூனை தனது இரையைத் தேடுவதற்கு இரவிலும் சஞ்சரிக்கும் பகலிலும் சஞ்சரிக்கும் அல்லவா? இப்பூனை போன்றே இரு உலகிலும் வாழ்பவர்கள் ஜீவன்முக்தர் (இம்மண்ணுலகத்திலும் கடவுள் உலகத்திலும் வாழ்பவர் "ஜீவன் முக்தர்" எனப்படுவர்)

## 3. பரமுத்தர் ஆனந்தம்

இவர் ஜீவன் முத்தராய் வாழ்ந்தபின் தேகத்தை உகுத்து விட்டு பரமான்மாவுடன் ஐக்கியமாகி விடுபவர்கள். தேகத்தை விடுத்து முத்தியடைவதற்கு விதேக முத்தி என்று பெயர். இம்முத்தி நிலையே மும்மலங்களில் கன்மம், மாயை மலங்கள் முற்றும் ஒழிக்கப்பட்டு, ஆணவமலமும் வலிகுன்றி ஆன்ம ஒளி பிரகாசிக்கும் நிலையாகும். தலைவன் அறிய முடியாது தடை செய்து கொண்டிருந்த ஆணவம் வலியற்றுப் போக, இதுகாறும் பெறாத

இன்பத்தைப் பரமான்மாவில் கலந்து பெறுவதாகும். இதனையே சுத்த அத்வைதம் அல்லது இரண்டற்ற நிலை என பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் விளக்கியுள்ளார்கள்.

## 4. மனுடானந்தம்

மனுடன் மெய். வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்பொறிகள் மூலம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் புலனுகர்ச்சிகளை அனுபவிக்கின்றான். இவை அனைத்தும் நொடிப் பொழுதில் அழியும் சிறிய இன்பங்களே பெரியதென மனித உயிர்கள் தேடி அலைக்கின்றன. இவ்வின்பங்கள் கானல் நீராகி விடுவதைக் கண் மூடும் வரை உணராத பேதைகளாகவே வாழ்கின்றனர்.ஒன்று மற்ற எளியவன் ஐம்பொறிகளால் நுகரும் இன்பத்தை இன்பமாகக் கொள்வதில்லை. மனுட வாழ்க்கையில் ஒருவன், இளமை, செல்வம், புகழ், அதிகாரம், உடல் வலிமை, போன்ற நிலைகள் அமைவதற்கேற்ப இன்ப அனுபவம் அமைகின்றன. இவ்வாறுள்ள நிலைகளில் ஒருவன் இளமையும் அழகும், அறிவும், ஆற்றலும் உடல்வன்மையும், அளவிலாச் செல்வமும், உலக முழுவதும் ஆளும் அதிகாரமும் பெறுவதாக வைத்துக் கொண்டாலும் அவன் பெறும் இன்பம் ஓர் அளவுடைய சிற்றின்பமே. இதையே மனுடானந்தம் என்பர்.

## 5. மனுடகந்தருவானந்தம்

மனுடனாயிருந்து அனுபவிக்கும் இன்பங்கள் எல்லாம் நொடிப் பொழுதில் அழிந்து போவதோடு துன்பமாகவே முடிவதை உணரும் மனிதன், இதற்கு மேலான இன்பத்தை நாடுகிறன். உணவு முதலானவற்றையும் உறக்கத்தையும் விடுத்துத் தவம் செய்கின்றான். இத்தவத்தின் பயனால் மனுடவடிவில் கந்தருவனாகப் பிறக்கின்றான். தேவலோகத்தில் கடவுள்கள் முன் தேவகானத்தை இசைப்பவர்கள் கந்தருவர். இவர்கள் விசுவாவசுவைத் தலைவராகக் கொண்டவர்கள். இந்திரலோகத்தில் வாழ்பவர்கள். இவர்கள் பெறும் இன்பம் மனுடானந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாகும். ஆனால் இந்த மனுடகந்தருவரும் அழியும் இன்பத்தையே பெறுகின்றனர். அதனால் இறந்து பிறக்கின்றனர்.

## 6. தேவகந்தருவானந்தம்

மனுட கந்தருவானந்தத்திலும் நூறு மடங்கு அதிகமுள்ள ஆனந்தத்தை அடைதல் தேவகந்தரு வானந்தமாம். இவ்வானந்தமும் அழிவதே. இந்நிலையிலும் இறப்பும் பிறப்பும் ஏற்படும்.

## 7. பிதிர் தேவானந்தம்

நீண்ட காலம் அழியாத நிலையிலிருக்கும் ஆனந்தம் என்றாலும் நீண்ட காலம் என்னும் ஓர் எல்லையில் இந்த ஆனந்தம் அழிந்துவிடும். தேவகந்தருவானந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமுள்ளது இவ்வானந்தம்.

## 8. தேவானந்தம்

பிதிர் தேவானந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகம் ஆனந்தமாக விளங்கும் நிலை தேவானந்தமாம். வேத வேள்வி முதலிய கன்மங்களைச், செய்வதால் பெறக்கூடிய இவ்வானந்தத்தைக் 'கன்மானந்தம்' என்றும் கூறுவர். வேள்வி செய்வதா இம்மை இன்பங்களையும் மறுமை இன்பங்களையும் பெறலாம். இம்மை இன்பங்களுக்கு அழிகின்றன; மறுமை இன்பம் எனும் சொர்க்க இன்பமும் அழிகின்றது அதனால் இறப்பும் பிறப்பும் தொடரும் என்பது உறுதி.

## 9. சுவபாவ தேவானந்தம்

தேவானந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு பெரிது தேவர் உலகத்தில் பிறப்போர் பெறும் ஆனந்தமே சுவபாவ தேவானந்தமாம். தேவலோகத்தில் பிறந்து அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் தேவதைகள் பெறுகின்ற இன்பமாகும் ஆனால் இவ்வானந்தமும் முடிவுற்றுப் பிறப்பும் இறப்பும் எய்தும்.

### 10. இந்திரானந்தம்

சுவபாவ தேவானந்தத்திலும் நூறு மடங்கு அதிகமுள்ள ஆனந்தமே இந்திரானந்தமாகும் தேவர்களுக்கு அரசனாக விளங்கும் பேறு பெற்றவன் இந்திரன். இவன் பெறும் ஆனந்ததிற்கும் ஓர் அளவும் எல்லையும் உண்டு இவன் பதவியும் நிலைத்தன்று என்பதும் தெளிவு இதனால் இவ்வானந்தத்தின் சிறுமை புலப்படும்.

### 11. பிருகஸ்பதியானந்தம்

இந்திரனுக்கும் தேவர்களுக்கும் குருவாக இருப்பவர் பிருகஸ்பதி, இந்திரன் ஆனந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகமுள்ளது இவர் பெறும் ஆனந்தம். ஆனால் இச்சுர குருவின் ஆனந்தமும் ஒருகால எல்லையில் முடிவுறும்.

### 12. பிரஜாபதியானந்தம் - அல்லது பிரமானந்தம்

பிருகஸ்பதி யானந்தத்தைக் காட்டிலும் நூறு மடங்கு பெரிது இவ்வானந்தம். இதையே பிரமானந்தம் என்பர். கல்பாந்த காலத்தில் பிரம்மாவும் அழிவதால் பிரமானந்தமும் அழியக்கூடியதே. படைப்புக்காலம் தொடங்கி எத்தனையோ பிரமர்கள் தோன்றி அழிந்துவிட்டனர். ஆதலால் பிரமாவும் அழியக்கூடியவர். அந்த ஆனந்தமும், அழியக் கூடியதே. என்றும் அழியாப் பொருள் ஒன்று உண்டு. அதுதான் உண்மைப் பொருள். சத்து என்றும் சித்து என்றும் ஆனந்தம் என்றும் வழங்கப்படும் பொருள் உயிர்களின் மலக்கட்டை அறுத்துப் பிறப்பை அழித்து அழியா இன்பத்தை அளிக்கும் வஸ்து "பந்தம் பறியப் பரிமேற் கொண்டான் தந்த அந்தமிலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்" என மணிவாசகர் திருவாசகம் இயம்பும் அந்த அந்தமிலா ஆனந்தமே பரிபூரண வந்தம் எனத் தாயுமானரும் பகர்ந்துள்ளார். ஸ்ரீமத் குமர குருபர சுவாமிகளும் இவ் ஆனந்தத்தை விளக்கவே 'பரிபூரண ஆனந்தபோதம்' எனும் சாத்திரமாக ஒரு நூலையமைத்துத் தெளிவுறுத்தியுள்ளார்.

• • • • • • • • • • • • • •

# பிரதட்ஷிணம்

பிரதட்ஷிணம் என்பதன் கருத்து பிர - கோபம் முதலிய நீக்கம், த - மோட்சம், ஷி - மலநிவாரணம், ணம் - திருவருட்பேறு என்பதாகும். அடியின்மேல் அடி வைத்துக் கொண்டும் கைகளைக் கூப்பிக் கொ்டும் சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டும் சிவத்தியானம் செய்து கொண்டும் இவ்விதம் மனம் வாக்கு காரியங்களை ஒருவழிப்படுத்திக் கொண்டு மும்முறை பிரதட்ஷிணம் செய்தல் வேண்டும். முதற்காலப் பூசையில் செய்யப்படும் பிரதட்ஷிணத்தால் ஆணவமல நீக்கமும், இரண்டாம்காலப் பூசையில் செய்யப்படும் பிரதட்ஷிணத்தால் திருவருட் செல்வத்தையும், மூன்றாம்காலப் பூசையில் செய்யப்படும் பிரதட்ஷிணத்தால் சகல பாவ நிவாரணத்தையும், நாலாங்கால் பூசையில் செய்யப்படும் பிரதட்ஷிணத்தால் முத்தியும் அடைவார்கள்.

மன அன்போடு சிவபெருமானை பிரதட்ஷிணம் செய்யும் அன்பர்கள் ஆணவ மலத்தின் சேனைகளாகிய கோபம் முதலியவற்றின் நின்றும் நீங்கி, மலநிவாரணமாகி, திருவருட் செல்வத்தைப் பெற்று மோட்சமடைவார்கள்.

# திருவெம்பாவையும் திருப்பாவையும்

திருமதி. நித்தியவதி நித்தியானந்தன்
ஆராய்ச்சி அலுவலர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

திருவெம்பாவை எட்டாம் திருமுறையான திருவாசகத்தின் ஏழாம் பகுதி. இதனை கி.பி. 8ஆம் நுற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் பாடினார். இதில் இருபது பாடல்கள் உள்ளன.

மாணிககவாசகர் திருவாசகத்தைத் திருவாய் மலரா முன்னரே, பாவைப் பாட்டு பண்டைக் காலத்தில் நிலவியதற்குச் சான்றுகள் உண்டு. சங்க நூல்களிலும் பாவை நோன்பிற்கு ஆதாரங்களைக் காணலாம். எடுத்துக்காட்டாக "வையெயிற்றவர் நாப்ப் வகையணிப் பொலிந்து நீ, தையினீராடிய தவந்தலைப் பாடுவாயோ" என்ற கலித் தொகை வரிகளை மேற்கோள் காட்டலாம். பாண்டிய நாட்டுச் சங்கப்புலவர்கள் 'அம்பாவாடல்' என்று மக்கள் கொண்டாடியதை இலக்கிய வழக்காக்கினர். பின் அப்பகுதியில் வாழ்ந்த ஆண்டாளும் மாணிக்கவாசகரும் அதனைத் தம் படைப்புத் திறனால் பாவை இலக்கியமாகப் படைத்தனர் பாண்டிய நாட்டு மகளிர் விளையாட்டும் நோன்பும் நீராடலும் பாவை எனத் தனி இலக்கிய வகை பிறக்க வழி வகுத்தன.

திருவெம்பாவை திருவாசகத்துள் சிறந்த பகுதி. இதில் மருள் நீக்கும் இருபது பாடல்கள் உள்ளன. மார்கழி மாதத்தை வைகறைக் காலமாக கணிப்பது மரபு. தைமுதல் ஆனி வரை பகலாகவும், ஆடிமுதல் மார்கழிவரை இரவாகவும் கொண்டு, ஓர் ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாளாகக் கணிக்கப்படுகிறது. மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரைத் திருநாளுக்கு முன் ஒன்பது நாட்களிலும் கன்னிப்பெண்கள் அதிகாலையில் துயில் எழுந்து ஒருவரை ஒருவர் பாடித் துயில் எழுப்பினர். இக் காட்சியினால் ஈர்ப்புண்டு மாணிக்கவாசகர் திருவெம்பாவை என்னும் இருபது பாடல்களையும் அருளிச் செய்தார் இந்நிகழ்ச்சி திருவாதவூரர் புராணத்தில் இவ்வாறு பாடப்பெற்றுள்ளது.

*"மாதர்கொண் மாதரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்*
*ஆதிரை முன்னீ ரைந்தே ஆகிய திங்கள் தன்னில்*
*மேதகு மனைகள் தோறும் அழைத்திருள் விடிவதான*
*போதிலர் தம்மிற் கூடிப் புனல் தடம் ஆடல் செய்வார்"*

*"அன்னவர் இயல்பு கண்டார் ஆங்கவர் புகன்றாக*
*மன்னிய திருவெம் பாவை வாசகம் பேசி"*

திருவெம்பாவை உலகம் நலம் பெற மழைவளம் வேண்டுவதுடன், மகளிர் நலம் பெற நற்கணவரையும் பெற வேண்டுகிறது. மார்கழி நீராடலை மேற்கொள்ளும் கன்னிப் பெண்களின் பேச்சாகத் திருவெம்பாவை விளங்குகிறது. ஐந்து முதல் பன்னிரண்டு வரையான வயதுக் கன்னிப் பெண்கள் நோன்பு நோற்பதற்குரியவர். பராசக்தி வழிவந்த பல சக்திகள் ஒருங்கு கூடித் தம்முன் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு இறைவன் புகழையும் பராசக்தியின் புகழையும் பாடிக் கொண்டு பொய்கைக்கு நீராடப் போனதாகத் திரு வெம்பாவைக்கு உட்பொருள் கூறுவர். ஆணவமலமாகிய இருளில் வீழ்ந்து உறங்கும் உயிர்களை அத்துயில் விட்டு எழுப்பிப் பிறவிப் பிணி நீங்க இறைவன் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்து இன்புற வருக என்பது மற்றோர் உட்பொருள். இச்செய்திகள் திருப்பெருந்துறைப் புராணம் கூறுவன.

இந்நூலின் முதற் பகுதியில் கன்னிப் பெண்கள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பு கின்றனர். மாதேவன் வாழ்த்தொலி கேட்டும் மாது

எழாதது ஏனோ? என்று விளித்துப் பாடுகிறார். துயில் எழுப்பியும் கேளாது தூங்கும் கன்னி, பிரபஞ்ச வாழ்வில் அமிழ்ந்து அல்லலுறுகையில் உய்யும் வழி உணர்த்தப்பெற்றும் ஆணவப் பிணிப்பால் ஆன்மா உணருவதில்லை என்றே இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். மூன்றாம் பாடலில் முத்துப் போன்ற வெண்பற்களை உடையவளே 'என் அத்தன்' 'ஆனந்தன்' என்று வாய் தித்திக்கப் பேசுவாய், இப்போ எதையும் உணராது துயில்கிறாயே, வந்து உன் கதவைத் திறவாய் என்று ஒரு பெண் பாடுவதாகக் காட்டுகிறார். மாணிக்கவாசகரின் நான்காம் பாடலில் உயர்ந்த உளநூல் தத்துவம் பேசப்படுகிறது.

*வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ*
*எண்ணிக் கொடு உள்ளவாறு சொல்லுகோம்*
*அவ்வளவும்*
*கண்ணைத் துயின்று அவமே காலத்தைப்*
*போக்காதே*

எவரையும் தூக்கத்திலிருந்து எழுப்பினால் உடனே எழுந்திருக்காது தட்டிக்கழிப்பது மக்களில் ஒட்டியுள்ளது. இப் பாட்டில் வண்ணக் கிளி மொழியார் எல்லோரும் வந்தாரோ என்று கேட்பது நொண்டிச் சாக்குக் கண்ட போக்கு. இதில் உளவியலும் இலக்கியச் சுவையும் கலந்துள்ளன. மேலும் கண்ணைத் துயின்று வீணாகக் காலத்தைப் போக்காமல் கண்ணுக்கு இனிமை தருபவனாகிய சிவபிரானைப் பாடி உள்ளம் கசிந்துருகுவாயாக என்று கூறப்பட்டுள்ளது எட்டாம் பாடலில்.

*"கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்*
*ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கு எங்கும்*
*கேழில் பரம் சோதி கேழில் பரம் கருணை*
*கேழில் விழுப் பொருளை பாடினோம்*
*கேட்டிலையோ"*

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இங்கு இயற்கை எழிலும், இறை அருளும் இணைத்துப் பேசப்படுகின்றன. ஒன்பதாம் செய்யுளில் "உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே எம் கணவராவார்" என்று ஆண்டவன் தொண்டரையே கன்னியர் தம் கணவராகப் பெறும் பேறு பேசப்பெறுகின்றது பத்தாம் பாகரத்தில் கோயிற் பணிப் பெண்களைக் கண்டு இறைவனின் இயல்பைக் கன்னியர் வினவுகின்றனர். ஒன்பதாம் பாடல் பெருமானின் அருவத்தையும், பத்தாவது அருவுருவத்தையும், பதினோராவது உருவத்தையும் குறிப்பன.

பன்னிரண்டாவது பாசுரத்தில் "கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும் காத்தும், படைத்தும், கரந்தும் விளையாடி" என்று கூத்தப் பிரானின் முத்தொழில் திறம் பேசப்படுகிறது. பதின்மூன்றாம் பதிகம் அம்மை அப்பனின் செம்மையைச் செப்புகிறது.

"அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழ" வேண்டிப் பாடி நீராடுவதைப் பதினேழாம் பாடலும், அண்ணாமலையான் ஆடிப்பாடி ஆடுவதைப் பதினெட்டாம் பாசுரமும், "எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க" என்று அன்பர் பணிசெய்ய ஆளாக்கி விடும் விண்ணப்பத்தைப் பத்தொன்பதாம் பாட்டும் காட்டுகின்றன இறுதி இருபதாம் திருப்பாவில் ஆதியும் அந்தமுமான தோற்றம், நிலை, இறுதி, மறைப்பு, அருள் ஆகிய ஐந்தொழில்களையும் காட்டி நிற்கிறது இதுவரை இறைவனை வாழ்த்துவதற்கு வழிவகுத்த "மார்கழி நீரை" நன்றியோடு நினைந்து "போற்றியாம் மார்கழி நீராடு" என்று பூங்கழல் போற்றி திருவெம்பாவை அரும் பொருள் இறுதி பெறுகிறது.

மார்கழி நீராடல் எனும் வழமை எல்லைக்குள் மாணிக்க வாசகரும் தன்னைப் பெண்ணாகவே பாவித்து இறைவன் மீது அன்பு செலுத்துகிறார். உயிரைக் கன்னிப் பெண்ணாகப் பாவித்து இறைவன் மீது அன்பு செலுத்துகிறார். உயிரைக் கன்னிப் பெண்ணாகப் பாவித்து இறைவன் மீது கொண்ட அன்பை மேலும்

வலுவடையச் செய்யும் ஆன்மீக வளர்ச்சியாகக் காண்பதற்கும் இடமுண்டு முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளை, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனை, ஆதியும் அந்தமும் இல்லாத அருள் பெரும் சோதியை, ஆக்கம் அளவு இறுதியிலாதகாத்தும், படைத்தும், கரந்தும் விளையாடுபவரையே தலைவனாக ஏற்கிறார்.

## திருப்பாவை

ஆண்டாள் என்ற கோதை நாச்சியார் வைணவ ஆழ்வார்களில் ஒருவர். கண்ணனிடத்தே ஆண்டாள் கொண்ட காதலின் விளைவாகப் பல பாக்களை அருளிச் செய்தார். அவை திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் பிரபந்த இலக்கியங்களாக விளங்குகின்றன கண்ணனது பேரெழிலும், பெருங்கருணைத் திறமும் ஆண்டாளைக் கண்ணனிடத்து உறவு கொள்ள வைத்தன. தீராக் காதல் கொள்ளச் செய்தன ஆண்டாள் கண்ணபிரானிடம் காதல் கொண்டு அவனையே கணவனாக வரிக்கக் கருதினார். இவர் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ வில்லிபுரத்தூரில் வாழ்ந்தவர். தான் வாழ்ந்த ஸ்ரீ வில்லிபுரத்தூரை ஆயர்பாடியாக்கித், தன்னை நப்பின்னையாக்கி வடபத்திர சாயி கோயிலை நந்தகோபன் மாளிகையாக்கிப் பெருமாளைக் கண்ணனாக்கி ஆயர்குலப் பேச்சும் மரபும் கைவரப் பெற்று பாவை நோன்பு மேற்கொண்டு திருப்பாவை பாடுகிறாள். திருப்பாவை உரையாசிரியர் பெரியவாச்சான் பிள்ளை மார்கழி நோன்பிற்கு வேதத்தில் ஆதாரம் இல்லை என்பர். எனவே உலக வழக்கத்தைத் தழுவியே ஆண்டாள் மார்கழி நோன்பை உள்ளடக்கி திருப்பாவை பாடியுள்ளார்.

சங்ககாலத்தில் உலகியற் காதலின் நுட்ப உணர்வுகளை வெவ்வேறு வகையிலே சித்தரித்து வந்த தமிழ்ப் புலவர்கள் கி.பி.6ஆம் நூற்றாண்டு காலப் பகுதி தொடக்கம் தெய்வீகக் காதற் பாடல்களைப் பெருந்தொகையாகப் பாடியதற்கு அக்காலச் சூழ்நிலையும் காரணமாகும். உணர்ச்சியைக் கட்டுப்படுத்து என்ற சமண பௌத்த பிராசரம் தோற்றுப்போய் உணர்ச்சியை இறைமேல் செலுத்துக என்ற சைவ வைணவப் பிரசாரம் அக் காலத்தில் லெழுகிறது. இதனால் இறைவனைத் தமது சொந்தமாக்கிக் கொள்ளும் நிலைப்பாட்டையும், இறைவனிடம் ஒரு உரிமையை ஏற்படுத்திக் கொண்ட ஒரு தன்மையினையும் அக்காலப் பாடல்களில் காணக் கூடியதாக உள்ளது. இதனால் அக்காலப் பாடல்கள் உணர்வாழம் மிக்கனவாகக் காணப்படுகின்றன. பரமாத்மா மட்டுமே ஆண் அவன் முன்னிலையில் மற்ற அனைத்து ஆன்மாக்களும் பெண் நிலையினரே என்பது வைணவ சமயக் கருத்து. ஆழ்வார்கள் முழுமையாகத் தம்மை இறைவனிடம் அர்ப்பணித்துக் கொள்பவர்கள். இவ்வகை யிலேயே ஆண்டாளின் பாசுரங்களிலும் ஏக்கம், தவிப்பு, அமைதி, தலைவனைச் சேர்வதற்கான துடிப்புக் கலந்த மகிழ்ச்சி போன்ற பல உணர்வுகள் வெளிப்பட்டு நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது. தன்னை ஆட்கொண்ட கண்ணபெருமானையே எந்த நிலையிலும் தலைவனாக அடைய விரும்பிய ஆண்டாள் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கிலேன் கண்டா்" என்று தனது பக்தி நிலையின் உச்சத்தில் நின்று பாடுகிறார். கண்ணனுக்குச் சூடுவதற்கெனத் தந்தையார் கொடுத்த மலர் மாலையைத் தானே சூட்டிப் பார்த்துத் திருப்தி கண்டு கண்ணனுக்கு சூடக்கொடுக்கிறாள். அதனால் அவர் சூடிக் கொடுத்த நாச்சியாராகிறார். இவரால் பாடப்பட்ட பாசுரங்களில் திருப்பாவையில் காணப்படும் காதல் அமைதியாகச் செல்வது. நாச்சியார் திருமொழியில் காணப்படும் காதல் கண்ணனடியார் நெஞ்சங்களைக் கசிந்துருக வைப்பது. சங்க காலத்தில் தைந்நீராடல் என்றும் அம்பாவாடல் என்றும் பேசப்படுவனவற்றின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக வருவது பாவை நோன்பும் பாவைப் பாடலுமாம். மார்கழி முழுநிலவு அன்று முடியும் இந்நோன்பு சந்திரனைக் கொண்டு மாதங்களைப் பகுத்த போது தைந்நீராடல் என்றும் சூரியனைக்

கொண்டு மாதங்களை வரையறுத்த போது மார்கழி நீராடல் என்றும் ஆயிற்று.

திருப்பாவையின் முதல் ஐந்து பாசுரங்களில் மார்கழி நீராட மகளிரை அழைத்தல், பாவை நோன்பு முறைகள், பயன் மழையை வேண்டி வாழ்த்தல் ஆகியன இடம் பெறுகின்றன. திருப்பாவை முதலாம் பாடல் கன்னியருள் ஒருத்தி மற்றவர்களை நோன்பிற்கு வாரீர் என்று அழைக்கிறாள். சிறந்த மார்கழி மாதத்திலே சுக்கில் பட்ச திதியிலே மங்கள முகூர்த்தமான வைகைறையில் நீராட வருவீர் என்று அழைக்கிறாள். இரண்டாம் பாடலில் நோன்பிற்காகச் செய்ய வேண்டுவன யாவை, விட வேண்டியவை யாவை என விபரிக்கிறாள்.

*"பையந் துயின்ற பரம னடிபாடி*
*நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
*மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
*செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்*
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
*உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்"*

திருப்பாற் கடலில் பள்ளி கொள்ளும் பரமனைப் பாடுவோம், நெய்,பால் உண்ணோம், மலரிட்டு கூந்தலை முடியோம், நம் முன்னோர் அனுட்டிக்காததைச் செய்ய மாட்டோம், இல்லாதவருக்கு உதவி செய்வோம் என்று கூறுவதாக அமைகிறது. மூன்றாம் பாடலில் இந்த நோன்பிற்கு அனுமதி அளித்த ஆயர்கள் பெறும் பலனைக் கூறுகிறார்கள். மாதம் மும்மாரி பெய்யும், நிலவளம், நீர்வளம் பெருகும், பசுச் செல்வமும், நீங்காத செல்வமும் பெறுவர் என்கிறார்கள். நான்காம் பாடல் மண்டலம் சர்வத்திற்கும் நாயகனே நீ சிறிதும் ஒழிக்காமல் மழை பெய்ய வேண்டும், நாங்கள் மார்கழி நீராடுமாறு சடக்கெனப் பெய்வாய் என்று வேண்டுவதாக அமைகிறது. ஐந்தாம் பாடல் நாம் பரிசுத்தராய் தூய மலர்களைத் தூவி அஞ்சலி செய்து வாய் படைத்த பயனாய் அவனது திருநாமங்களைப் பாடி மனதாலே சிந்திப்போமானால் இதுவரை சேர்ந்த பாவங்களும் இனி நாம் அறியாமல் வரும் பாவங்களும் நெருப்பிலிட்ட பஞ்சுபோல் உருகி மாய்ந்துபோம். அதனால் அவனது நாமங்களைக் கூறுவோம் என்று விளம்புகிறது.

அடுத்த பத்துப் பாசுரங்களில் கோபகன்னிகள் ஒருத்தியை ஒருத்தி எழுப்புவது கூறப்படுகிறது. இதில் ஒவ்வொரு ஆழ்வாரையும் ஆண்டாள் துயிலெழுப்புகிறாள் என்று, உட்பொருள் கூறப்படுகிறது. இப்பாக்கள் பத்திலும் பரந்தாமனின் எழில் உருவமும், பேரருள் திறனும், புராணக் கதைகளும் சிறப்பிக்கப்படுகின்றன. இக்கோப கன்னியர்கள் ஒவ்வொரு வீடாகச் சென்று மற்றைய கன்னியர்களைத் துயில் எழுப்புவது ஏற்கனவே பகவத் விஷயத்தில் தன்னை முற்றும் ஈடுபடுத்திய பெண் புதியவளான ஒருத்தியை இப்பகவத் கைங்கரியத்தில் ஈடுபட அழைப்பது போன்றுள்ளது.

*"எங்களை முன்ன மெழுப்புவான் வாய் பேசும்*
*நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்!*
*சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன்*
*பங்கயக் கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய்"*

நீயே வந்து எங்களை முன்னம் எழுப்புவதாகக் கூறினாய் சொன்னத்தைச் செய்யாததால் நாணமும் இல்லையோ உனக்கு. சங்கும், சக்கரமும் ஏந்தும் திண்ணிய கரங்களை உடையவனும், தாமரை போன்ற கண்களை உடையவனுமான பெருமானைப் பாடுவோம், எழுந்து வருவாய் என்பன போன்ற பல செய்திகள் இப்பத்துப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளன.

பதினாறாவது பாடல் எல்லாப் பெண்களும் கூடி வந்து நந்தகோபரது மாளிகைக்குச் சென்று கோயிற் காப்பானையும், வாயிற் காப்பானையும் எழும்புகிறார்கள். அவர்களை எழுப்பி உள்ளே சென்ற பெண்கள்

முதலில் நந்தகோபாலரையும் பின் யசோதையையும் எழுப்பிக் கண்ணனை எழுப்புகிறார்கள். பின்னர் பாலராமனை எழுப்புகிறார்கள். கண்ணன் எழும்பாமையினால் கண்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையும் சேர்த்து எழுப்புகிறார்கள் இப்பெண் பிள்ளைகள். அப்போ நப்பின்னைப் பிராட்டி (நந்தகோபாலனின் மருமகள்) பெண்காள்! நானும் உங்களில் ஒருத்தியன்றோ நாம் எல்லோரும் சேர்ந்து கண்ணனிடம் உபகரணங்கள் வேண்டிக் கொள்வோம் என்றாள். பின் எல்லோரும் சேர்ந்து அவன் கல்யாண குணங்களைச் சொல்லி எழுப்புகிறார்கள். அவ்வாறு எழுப்பும் போது,

*செங்கண் சிறுச் சிறிதே எம் மேல் விழியாவோ?*
*திங்களு மாதித்தியனு மெழுந்தாற் போல்*
*அங்க ணிரண்டுங்கொண் டெங்கண் மேல்*
*நோக்குதியேல்*
*எங்கள் மேல் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய்*

என்று பாடுகிறார்கள். சிவந்த கண்களை உடையவனே சூரியனும் சந்திரனும் ஒருங்கே உதித்தது போல உன் அழகிய கண்கள் இரண்டாலும் எம்மை நோக்குவாயாகில் எமது வினைகள் தீர்ந்து விடும் என்று செப்புகிறார்கள். இங்கே இறைவனின் அருட்கடாச்சம் ஆன்மாக்கள் மீது படியும் போது அவர்களது வினைகள் அனைத்தும் சூரியனைக் கண்ட பனித்துளிகள் போல் உருகிக் கலைந்து விடும் என்னும் உண்மைப் பொருளை உணர்த்தி நிற்கிறார்கள்.

*"நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை*
*அருத்தித்து வந்தோம் பனைகருதி யாகில்*
*திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி*
*வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பவாய்!"*

துயிலெழுந்த கண்ணன் "பெண்காள்! உங்களுக்கு வேண்டுவது யாது? " என வினவ " உன்னைப் பெறுவதற்கு இடையூறுகள் நேர்ந்தால் நீயே அவற்றைப் போக்கி எங்களது துன்பம் நீங்குமாறு அருள வேண்டும்" என்கிறார்கள். இறைவனை அடைவதற்கு அவனருள் வேண்டும் என்பதும் அவ்வருளை வேண்டி நிற்பவர்கள் சர்வமும் அவனது தியானத்துடனே இருப்பார்கள், இருக்க வேண்டும் என்ற கருத்தும் துல்லியமாய்த் துலங்குகின்றன. திருப்பாவையின் பிற்பகுதி மகளிரை இறைவன் திருப்பணிக்கு தகுதியுடையவராகச் செய்வது பற்றியது என்று கூறலாம்.

திருப்பாவை ஒரு சிறந்த கவிதை. இதன் கருத்து கோபகன்னிகைகள் நோன்பு நோற்றுக் கண்ணனை அடைந்து அவன் திருவடிக் கீழ் குற்றேவல் செய்து உய்ந்தனர் என்பது. இவர்கள் நோன்பிற்காக அதிகாலையிலே கண்விழித்து மற்றவர்களையும் எழுப்பிக் கொண்டு திரண்டு நந்தகோபரது திருமாளிகைக்குச் சென்று கண்ணனையும் நப்பின்னையையும் எழுப்பிக் கொண்டு, கண்ணனை சிங்காதனத்திற்கு எழுந்தருளச் செய்து நோன்பிற்கு வேண்டுவன எவை என்று விண்ணப்பம் செய்கிறார்கள். பின்பு அவனோடு நீராடி ஆபரணங்கள் பூண்டு புது ஆடை தரித்துக் கையில் பால்சோறு கொண்டு அவனை நோக்கிக் கொண்டு இன்புற்றிருக்கின்றனர். அவனை விட்டுப் பிரியாமல் எப்போதும் வாழவேண்டும் என்றும், அவனுக்காகக் கைங்கரியம் செய்து உய்ய வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். இறைவனுக்கே உரிய ஆன்மாவானது நெடுங்காலமாக இறைவனை அணுகாமல் வருந்திய வருத்தம் தீர, இறைவனை நாடி, அவன் திருவடிகளை வணங்கி, திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடி மகிழ்வது. மழை பெய்வதற்காகத் திருவாய்ப்பாடிப் பெண்கள் கண்ணனைத் தலைவனாகக் கொண்டு நோன்பு நோற்பது என்பன இப்பிரபந்தத்தின் வெளிப்படையான கருத்து. ஆத்மா இறைவனோடு கூடி அவனுக்குக் குற்றேவல்கள் செய்து இன்புறுவது என்ற கருத்தும் அவ்வாறு இன்புறுவதற்கு மூலகாரணம் ஆசாரியன் (குரு) என்பதும் இப்பிரபந்தத்தினூடாகப் புலப்படுத்தப்படுகின்றன.

# இலக்கியங்களில் சிவதாண்டவம்

## கலித்தொகை

சங்கநூலைத் தாண்டவ நினைப்போடு எண்ணும்போது கலித் தொகையே முதலிடம் பெறுகிறது. அதில் 'ஆறறி அந்தணர்க்கு' என்னும் கலிப்பா கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது.

இறைவன் கொடுகொட்டி என்னும் திருக்கூத்து ஆடுகின்றார். அம்மை அதற்கு ஏற்பத் தாள அறுதியாகிய சீரைத் தருகின்றாள். இறைவன் பாண்டரங்கம் என்னும் கூத்தை ஆடும்போது இறைவி தாள அறுதிக்கு முன்னிகழ்வதாகிய தூக்கினைத் தருகின்றாள்; இறைவன் காபாலம் என்னும் பெயர் பெற்ற கூத்தை ஆடும்பொழுது, இறைவி தாளத்தின் முதலெடுப்பாகிய பாணியைத் தருகின்றாள் என்று அப்பாடலில் வருகின்றது. இதனால் இறைவன் ஆடிய கூத்துக்கள் கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என மூன்று என்று அறியப்படுகிறது.

இம்மூன்றிலும் தாளம் சிறந்த இடத்தைப் பொருந்துமாயினும் தாளத்தின் மூன்று உறுப்புக்களுள் சீர், தூக்கு, பாணி என்பன ஒவ்வொரு கூத்திற்கும் சிறந்ததாக அறிவிக்கப்படுகிறது. அவற்றுள் முதலாவதாகிய கொடுகொட்டி ஆடல் உமை ஒருபாலாக, ஒருபால் இறைவனக நின்று அச்சம், வியப்பு, விருப்பு, அழகு முதலியன பொருந்த அவுணர்கள் இறந்த போர்க்களம் விளங்க ஆடியதாம். இது காத்தற் பொருளைக் கொண்ட தெய்வத் துதியாகும்.

இரண்டாவதான பாண்டரங்கம் என்பது இறைவன் திரிபுரம் எரித்த காலத்து அவுணர்கள், தத்தம் குடையும் கொடியும் கூறுகூறாக, வேற்று வடிவங்கொண்டு விண்மிசைப் பரவியிருந்தனர். அப்போது இறைவன் வென்ற தேர்முன் நின்று திசைகள் நடுங்கச் சுவையும், குறிப்பும் குறையாமல் உயிர்கள் அங்கங்கு இருந்தாட, மைந்தரும் மகளிரும் தம் நிலை அழிய, ஊழிக்காலக் காற்றைப்போல் சுழன்று ஆடியதாம்.

## சிலப்பதிகாரம்

சிலம்பு பதினொரு வகையான கூத்துக்களையும் அவைகளைப் பற்றிய இலக்கணங்களையும் தெரிவிக்கின்றது. அவற்றுள் சிவபெருமான் ஆடிய கூத்துக்கள் இரண்டு. அவை கொடுகொட்டியும் பாண்டரங்கமும். அவற்றுள் கொடுகொட்டியாவது திரிபுரம் எரியச் செய்த சிவபெருமான், உமாதேவியாரை ஒருபாற்கொண்டு கைகொட்டியாடிய கூத்து. இது ஊர் எரிகின்ற காலத்துக் கைகொட்டி ஆர்த்து ஆடியது ஆதலின் கொடுகொட்டியாயிற்று. கொடுங்கொட்டி எனவும், கொட்டிச் சேதம் எனவும் வழங்கப்பெறும். நடுகற்காதையில் கூத்தச்சாக்கையர் ஆடுவதாக வரும் பகுதி இக்கூத்தின் இயல்பை நன்கு விளக்கும்.

*" ஆங்கவள் தன்னுடன் அணிமணி யரங்கம்*
*வீங்கு நீர் ஞாலம் ஆள்வோ னேறித்*
*திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்*
*பரிதரு செங்கையிற் படுமறை யார்ப்பவும்*
*செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்*
*செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்*
*பாடகம் பதையாது சூடகம் துளங்காது*
*மேகலை யொலியாது மென்முலை யசையாது*
*வார்குழை யாடாது மணிக்குழல் அவிழாது*
*உமையவள் ஒருதிறனாக வோங்கிய*
*இமையவ னடிய கொட்டிச் சேதம்"*

என்பது அது. இதில், இறைவன் ஆடுகிறார்; அவரணிந்த சிலம்பு ஒலிக்கிறது; கையின் கண்ணதாகிய துடி அடிபடுகிறது;

அவருடைய கண்கள் ஆயிரக்கணக்கான கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன; சிவந்த சடைகள் நாற்றிசையிலும் பரவிச் சென்று ஆடுகின்றன; இவ் வண்ணம் இறைவன் சுழன்றாடுகின்றார்; அம்மையோ ஆடாமல் அசையாமல், ஒலியாமல் - விம்மாமல், அச்சமும் வியப்பும் தோன்ற ஒருபால் ஒதுங்கி நிற்கின்றாள் என்று கூறப்பெற்றுள்ளது.

பாண்டரங்கமாவது வானோராகிய தேரின்முன் நின்று திசைமுகன் காணப் பாரதி வடிவாகிய இறைவன் வெண்ணீற்றை அணிந்து ஆடிய கூத்தாகும். இந்த இரண்டும் திரிபுரம் எரித்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஆடப்படுவனவேயாயினும் கொடுகொட்டி ஆண்மகன் ஆடும் தாண்டவமும், பாண்டரங்கம் பெண்மகள் ஆடிய லாஸ்யமுமாக இருப்பதும், அவைகளை இறைவனே ஆடிக்காட்டியமையும் உணர்தற்குரியன.

## திருமூலர்

சங்க இலக்கியங்கள் அரசர்களைப் பற்றிய புகழையே அறிவிப்பன. ஆதலால், அவற்றுள் சிவதாண்டவத்தைப் பற்றிய குறிப்புக்கள் மிகுதியாக இல்லை. கடவுளை வாழ்த்தும்போது கலித்தொகையில் இடம் பெற்றதைக் கண்டோம். சிலப்பதிகாரத்தில், நாடகக் காப்பியமாதலின் ஓரளவு இறைவனாடியதாகவும், கூத்தச்சாக்கையர் இறைவன் வேடம் தாங்கி ஆடியதாகவும் சிவதாண்டவம் பரவிவந்ததைக் கண்டோம்.

திருமுறைகளின் ஆசிரியர்கள் இறைவனை அநுபவித்தவர்கள்; திருக்கூத்துத் தரிசனம் கண்டவர்கள். ஆதலால் திருக்கூத்தைப் பற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் கூறியிருக்கிறார்கள். இதனைக் கொண்டு திருமுறைக் காலத்திலேதான் கூத்திறைவடிவம் போற்றப்பட்டது; அதற்குமுன் இல்லையென்ற அவசரமுடிவு கட்டிவிடக்கூடாது. சொல்லாமை ஒரு காரணமாகாது. அவர்கள் சொல்ல வேண்டிய தேவையும் அதற்கான சூழலும் இருந்தும் சொல்லாது விட்டார்களா என்றும் சிந்திக்க வேண்டும். காதலையும் மோதலையுமே பொருளாகக் கொண்டு எழுந்த சங்கநூல்களில் தாண்டவத்தைப் பற்றிப் பேச வேண்டிய இன்றியமையாமைதான் என்ன என்று சிந்திக்கவேண்டும். ஆதலால் திருமுறைச் செல்வர்கள் கூத்தையும் கூத்திறைவனைப் பற்றியும் கூறியிருப்பனவற்றை முறையே சுவைப்போம்.

கூத்திறையை அகமார்க்கத்திற் கண்டும் புறமார்க்கத்திற் கண்டும் சுவைத்தவர் திருமூலர். அவர் கண்ட திருக்கூத்து அற்புதமானது. அண்ட பிண்ட சராசரங்கள் அனைத்தும் சிவனது திருமேனி; எங்கும் சிவசத்தி; எல்லாம் அவன் ஆடுகின்ற இடமாகிய சிதம்பரம்; எங்கும் அவன் ஆட்டம்; சுருங்கக்கூறின் எங்கும் சிவம் விளங்குவதால், எங்கெங்கும் தோன்றுவன அவனருள் விளையாட்டாகிய நடனமே என்று கண்டவர் அவர். அக்கூத்தினைச் சிவானந்தக்கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக்கூத்து என்று ஐந்து வகைப்படுத்துவர்.

## சிவானந்தக்கூத்து

உலகியல் அறிவும், விஞ்ஞான அறிவும், வேதாகம சாத்திரங்களைப் படிப்பதால் விளைந்த அறிவுமாகிய பாச ஞானத்தையும், இவைகளை அறிதற்கு உதவியாயிருக்கிற பசுஞானத்தையும் கடந்து, ஞானானந்த நடனம் பண்ணுகிற பரசிவத்திற்கு, சதானந்த வடிவாகிய சத்தியே அரங்கம். அவ்வரங்கத்தில் ஆனந்தமே வடிவாக வீற்றிருப்பதே ஆனந்தக்கூத்து. கூத்திற்கு இன்றியமையாத பாடல்கள், வாச்சியங்கள், குழல் கொம்பு முதலிய இசைக்கருவிகள், பார்க்கின்ற உயிர்கள் எல்லாம் ஆனந்தம். அவன் அங்ஙனம் ஆனந்தக் கூத்தாடும்போது, ஒளியும் உண்மையும் களிப்பும் பரிபாகமுற்ற முத்தான்மாக்களின் கருத்தில் ஓர் தெளிவும் உண்டாகின்றன. அவையாவும் பராசத்தியாகிய திருவருட் சிவகாமித்தாயே. அவ்வண்ணம் அவ்விருவரும்

சகள, நிஷ்களத் திருமேனியாக நின்று ஞானானந்த பஞ்சகிருத்ய தாண்டவம் செய்வர். அதனால் வேதங்கள், ஆகமங்கள் கீதங்களாகிய ஒலிவடிவுலகு இயங்குகின்றன. நுண்பூதங்களும், அவற்றாலாகிய பருப்பூதங்களும், அவற்றாலாகிய புவனங்களும், அவற்றின் கூட்டமாகிய அண்டங்களும் ஆடுகின்றன. பூதங்களைந்திலும், பொறிகளிலும், புலன்களிலும், வேதங்களிலும், ஆகமங்களிலும், காலம் கலை முதலியவற்றிலும், ஊழியாகிய சங்காரத்திலும் கலந்து ஒன்றி நின்று ஆடுகிறார் இறைவன். அப்பப்பா! அவன் ஆட, தேவர் அசுரர் நரர்சித்தர், வித்யாதரர், பிரம, விஷ்ணு, ருத்ரர்கள் முதலான முப்பத்துக்கோடி தேவர்கள், தவசிகள், சப்தசாத்திரம் படித்தோர், அவ்வாறு சமயங்களான நால்வகைச் சமயங்கள் எல்லாம் ஆடுகின்றன. இவ்வண்ணம் ஞான உலகையே நடிக்க வைக்கிறது அவனுடைய ஞானானந்த நடனமாகிய சிவானந்தக்கூத்து. இது ஞானத்தால், பலநாள் யோகிருந்து அறியவேண்டிய அநுபவ நடனம். இதனைத் திருமூலர்வாக்கால் உணரலாமேயன்றி, கலையுணர்ச்சி மட்டும் காண்போர் காணஇயலாது. இது கருத்தையுங் கடந்த அநுபவக் காட்சிக்குப் புலனாவது.

## சுந்தரக்கூத்து

அவ்வண்ணம் ஞானமே திருமோனியாக ஞான சத்தியாகிய அரங்கத்தில் ஞானானந்தக் கூத்தாடிய இறைவன், பரமஞானிகளுக்கேயன்றி ஏனையோர்க்கும் தமது திருக்கூத்துத் தரிசனம் தந்தருள வந்தருளிச் சுந்தரக்கூத்தை ஆடுகின்றன. இக்கூத்திற்கும் ஏழு அண்டங்களுக்கும் அப்பால் விளங்குவதாகிய பராசத்தித் தானமாகிய சிவசத்தியே அரங்கம். அவ்வரங்கத்தில் நடிக்கின்ற இறைவன். நெற்றிக்கண்ணும் நீலகண்டமும் தாங்கிச் சகளத்திருமேனியாக உமையோடு அறிவுக்குப் புலனாகி நடிக்கின்றான். அவன் ஆடும் கூத்துக்கள் கொடுகொட்டியும், பாண்டரங்கமும், சங்காரதாண்டவமும் முதலான எட்டுவகையும், பஞ்சகிருத்தியஞ் செய்யும் ஆறுவகையும் ஆன தாண்டவங்கள். அவன் ஆடுகிற இடமோ தேவதாரு மரங்களாகிய தில்லைமரம் செறிந்து, ஆலமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்ட தில்லைவனம். அங்கிருந்து பரமாண்டங்களில் பராசத்தி பாதமும், ஒளியும், நாதமும் பரவ நின்றடுகின்றான். அப்படிப் பரமாண்டத்தில் ஆடுகின்றவன் பிண்டத்திலும் கருத்தில் தியானிக்கப்படும் பொருளாக ஆடுகின்றன. மூலாதார முதலாகச் சுழுமுனைநாடி வரையுள்ள ஆறதாரத் தானங்களில் நடிக்கின்றன். அதற்கு மேலாக ஞானமண்டலத்திலும் அதாவது சிதாகாசத்திலும் நடிக்கின்றான். இவன் இங்ஙனம் எல்லாமாயிருந்து நடிக்கும் எல்லா உலகங்களும் அவன் திருவடியின் கீழ்டங்கி அவனாட்டவழியே ஆடுகின்றன. இதுவே அவன் ஆடுகின்ற சுந்தரக் கூத்து என்கின்றர்.

## பொற்பதிக்கூத்து

சுந்தரக்கூத்திலும் பயனடைவார் சிலராக, அந்நிலையை உணரமுடியாத பலருக்குப் பயன் படவேண்டி அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருமேனியின் ஈசானாகி பஞ்சமுகங்களோடு நின்று தனிப்பெருங் கூத்தாடுகிறன். இதுவே பொற்பதிக் கூத்து எனப்படுவது. துவாத சாந்தப் பெருவெளியில் சுந்தரக்கூத்து ஆடிய இறைவன் சிவலிங்கமாகிய உபாய உபயத்துள் நின்று ஆடுதலால் இது பொற்பதிக் கூத்தாயிற்று. (பதி இடம்)

## பொற்றில்லைக்கூத்து

அருவுருவத் திருமேனியில் ஞானமும், பாவனையுமாகிய திருமேனியினின்று காளி முதலான ஆணவாதி சத்திகளோடு ஆடினாலும் அதனை அறிந்துய்யவல்ல பக்குவான்மாக்கள் சிலராதலால், பரிபாகம் குறைந்தார்களுக்கும் பயனருளத் திருவுளங் கொண்டு, தில்லையாகிய தலத்தில் உருமேனி தாங்கி நின்று தாண்டவமாடுகின்றன். அதனை அனுபவிக்க வேண்டிய முறை வேறு. நீங்கள், தில்லைமண்ணில் ஓர் தலம், அதில் பொன்மன்றம் என்ற ஓரிடம், அதிலுள்ள சிற்சபையில் சிவன் ஆடுகின்றான் என்று எண்ணுவீர்கள் பூமியை ஒரு புருஷ வடிவாக எண்ணுங்கள். இடைநாடி இமயமலை. பிங்கலைநாடி இலங்கை. நடுநின்ற சுழுமுனைநாடி

தில்லைவனமாகிய சிதம்பரம். அங்கிருந்து ஆடுகின்றன; ஆடியகாலும், அதில் சிலம்-போசையும், பாடிய பாட்டும், பலவான நட்டமும், கூடிய கோலம் குருபரன் கொண்டாடத் தேடி உள்ளே கண்டு தீதறுங்கள் என்று உபதேசிக்கிறார் சித்தமூர்த்திகள். மேலும் அங்ஙனம் நீங்கள் ஆனந்த நடனம் காணும்போது 'விம்மும்; வெருவும்; விழும்; எழும்; மெய் சோரும்; தம்மையும் தாம் அறியாத் தன்மைசாரும்; சதுர்கெடும்; தேட்டறும்: சிந்தைத் திகைப்பு அறும்; வாட்டமறும்; பொறிகள் புலன்வழியாக ஓடுகின்ற ஓட்டமறும்; புற உலகிற் சென்று பற்றுகின்ற ஆசையறும்; மனத்தில் ஆனந்தத்தால் விளையும் முறுக்கு உறும்; இவ்வனுபவங்களைக் கண்டு தெளியுங்கள்' என்று அறிந்து தெளிவும் உபாயமும் அறிவிக்கின்றார்.

## அற்புதக்கூத்து

இவ்வண்ணம் கூத்தின் விகற்பங்களையும், அவை ஆடப்படும் இடங்களையும் புறத்தே பார்ப்பதைக் காட்டிலும் அகத்தே பார்ப்பதே மேலானது; பெரும்பயன் தருவது என்பதையும் அகமார்க்க தரிசனமே புறத்தில் ஆக்கப் பெற்றது என்ற உண்மையையும் புலப்படுத்தி, அநுபவத்தில் உண்டான அற்புதத்தை அறிவிப்பதால் இக்கூத்து அற்புதக் கூத்தாயிற்று. சிற்றம்பலம் என்பது நெற்றிக்கு நேரே புருவத்திடைவெளிதான். அங்கே உற்றுப்பார்த்தால் 'சி' என்னும் மந்திரம் ஒளிவிட்டுத் தோன்றும். அதுதான் கூத்தப்பெருமான் இருக்குமிடம். ஆடுகின்ற அவனுரு திருவைந்தெழுத்தின் வடிவே. இவ்வண்ணம் அவன் உருவையும் அவன் ஆட்டத்தையும் உணர்வதே அற்புதக்கூத்துத் தரிசனமாம்.

இவையன்றித் திருமூலர் 'திருக்கூத்துத் தரிசனம்' என்ற தலைப்பில் திருக்கூத்தின் தத்துவத்தையும் திரு உருவ அமைப்பையும் நன்கு விளக்குகிறார். இறைவன் நடனஞ்செய்தான் என்று அறிவிலிகள் சொல்கிறார்கள்; அவன் நடனம் ஆடுவதின் அமைப்பை அறிந்தவர்கள் ஒரு வரும் இலர்; நடனம் ஆடுவது அவனது இணைபிரியாத திருவருட்சத்தியேயாம்; அவன் அங்கி, தமருகம், அக்கமாலை, பாசம், அங்குசம், சூலம், கபாலம், ஞானமுத்திரையோடு கூடிய அபயஹஸ்தம், நீலோற்பம் இவற்றைத் தாங்கிய கைகளை உடையவராக மங்கையோர் பங்கராய் நடனம் ஆடுகின்றான். அவன் ஆடுதற்கு இடம் பராத்பரமாகிய சிற்றம்பலம். அவன் ஆடும் ஆட்டத்துக்குப் பதினாறு உறுப்புக்கள்.

அடைவுக்கேற்ற சிலம்போசை, துடியோசை; இவற்றோடு அவன் ஆடுவதால் அவனுடைய நவந்தரு பேதங்களும் ஆடுகின்றன. அகமார்க்கங்களாகிய சைவம், பாசுபதம் முதலியவைகளும், அவற்றுள் கூறப்படும் மூலாதார முதலான மார்க்கங்களும் ஆடுகின்றன. ஆன்மாக்கள் இன்புறுவதற்காக அருளப்பெற்ற ஏழு உலகங்களும் அவற்றுள் ஒவ்வொன்றிலும் உள்ள ஐம்பத்தாறு தேசங்களும் ஆடுகின்றன. இவை அனைத்திற்கும் அடிப்படையான மாயா தத்துவங்கள் ஆடுகின்றன. சதாசிவம் ஆடுகிறது. சித்தம் ஆடுகிறது. சிவசக்தி ஆடுகிறது. சிவசத்தியால் படைக்கப்பெற்று ஆன்மாக்களுடைய அனுபவத்திற்காக வைக்கப்பட்ட சராசரங்கள் ஆடுகின்றன. ஒலிமயமாகிய வேதங்கள் ஆடுகின்றன. இப்படி ஆனந்தவடிவாக எல்லாம் ஆட, அவன் ஆடுகிறன் என்று இறைவனுடைய அசைவே எல்லா உயிர்களினுடைய அசைவும் என்ற உண்மையை ஒன்பதாம் தந்திரத்துள் குறிப்பிடுகின்றார். திருமூலர்பெருமானே சிதம்பர சக்கரத்தை அமைத்தார் என்பதொரு சித்தர்மரபுச் செய்தியும் உண்டு. ஆகவே திருமந்திரத்துள் சற்றேறக்குறைய எண்ணூறு பாக்கள் திருக்கூத்தையும் தில்லைக்கூத்தனையும், திருவம்பலச் சக்கரத்தையும் குறிப்பிடுவன. திருமூலருக்கு முன்பு தில்லைக்கூத்தன் சிறப்பியல்பைத் தெள்ளத்தெளிய உணர்த்தும் நூல்கள் இல்லை எனவே கூறலாம்.

## காரைக்காலம்மையார்

திருமூலரை அடுத்துக் காலத்தால் முற்பட்டவர் அம்மையார். இவர்கள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் கூத்திறையைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய முடிவான வேண்டுகோளே 'அறவா! நீ ஆடும்போது நின் அடியின்கீழ் இருக்க' என்பதுதான். ஆதலால் அம்மை இறைவனுடைய தாண்டவத்தை மிகச் சுவைத்துத் தரிசித்துக் கொண்டே இருப்பவர்கள். அவர்கள் கூறுவன அநுபவ உரைகள்.

அம்மையார் நூல்களுள் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் கூத்தப்பெருமான் இயல்களையே தெரிவிப்பன. அம்மையார் காலங் கடந்த மகாசங்கார தாண்டவக்காட்சியை அனுபவிக்கிறார்கள். அதனால் இறைவன் ஆடும் இடம் பெண்பேய் தங்கி அலறி உலறு காடாக ஓரி கதிக்க ஆடுமிடமாகக் காட்சியளிக்கிறது. காலமோ மாலைக்காலம். அனல் கையேந்தி அந்தி நிருத்தம் ஆடுகின்றர். என்கிறார். அந்தி நிருத்தம் சந்தியாதாண்டவத்தையும் குறிக்கும் சொல்போற்றேன்று மாயினும், சந்தியாதாண்டவம் கௌரிதேவி கண்டு களிக்கச் சந்தியாகாலத்து மேருமலைச்சிகரத்தில் நந்தவனத்தில் ஆடிய கூத்தாகையால், புறங்காட்டிடை ஆடிய கூத்தாகாது. ஆதலால் சங்காரதாண்டவமும், எல்லாம் ஓடுங்குதற்குரிய சங்கார சந்தியாதலே தெளிவு.

இத்தாண்டவத்திற்குரிய வாச்சிய வகைகளைப் பாருங்கள். சச்சரி, கொக்கரை, தக்கை, தகுணிச்சம், துந்துபி, தாளம், வீணை, மத்தளம், கரடிகை, வன்கை, மென்தோல், தமருகம், குடமுழா, மொந்தை ஆகிய இவைகள். துத்தம் கைக்கிளை விளரி தாரம் உழை இளி இந்த வரிசையில் அமைந்த பண். இத்தகைய இசைக்சூழலில் முற்கூறிய நிலையில் இறைவன் ஆடுகின்றான் என்கின்றார்.

## திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தப்பெருமான் கூத்தப் பெருமானை வணங்கத் தில்லைக்கு எழுந்தருளிய போது பெருமான் எல்லாமாய் இருப்பதைக் கண்டு அனுபவிக்கின்றார். தில்லைவாழந்தணர்கள் அத்தனைபேரும் அவருடைய ஞானப்பார்வைக்கு நடராசப் பருமானாகவே காட்சியளிக்கின்றார்கள். அவ்வண்ணம் அவர் பார்வை அதுவாகவே அமைந்திருந்தது. கூத்தப்பெருமான் அணிந்துள்ள கீற்றுப்பிறை பிள்ளைப் பெருமான் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. பின்தாழ் சடையும், மாந்தளிர்மேனி மங்கைபாகமாக விளங்கும் மாண்பும், கருமான் உரி ஆடையும், கறைக் கண்டமும், கங்கையும் அவருக்கு ஞானவிருந்தாக ஆகின்றன. ஆதலால், தூக்கிய திருவடியில் மிகவும் ஈடுபட்டுப் 'பாதமே பற்ற நின்றரைப் பற்ற பாவமே' என்றும், 'இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே' என்றும், 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே என்றும் சொல்லி அனுபவத்தின் உச்சியிலே நின்று, தம் அனுபவத்தின் உறுதிப்பாட்டை உரைக்கின்றார்கள். என் உள்ளம் பெருமான் கழலல்லால் பேணது' என்று உள்ளத்தின்மேல் வைத்து உலகர்க்கு உண்மையை உணர்த்துகிறார்கள். அம்மட்டோ! நட்டப் பெருமானை நாளும் தொழுவோம் வாருங்கள் என்று உலகவர் அனைவரையும் அழைக்கின்றார்கள். காட்சி அனுபவம் கனிகிறது; பெருமானுடைய அபிஷேகத்தில் ஒரு ஈடுபாடு பிறக்கிறது; நறுநெய்யொடு பால் தயிர் ஆடினாய் என்று சொல்லி இன்புறுகின்றார்கள். பாலுண்ட பிள்ளை அல்லவா? தாயை மறந்து வாழும் தனயனுண்டா! அதனால் தாயைக்கொண்டு தந்தையை உணர்கிறார். 'கொட்டமே கமழும் குழலாளோடு கூடினாய்' 'அம்பு அலைத்த கண்ணாள் முலைமேவிய வார்சடையான்' 'பணைத் தோளியொடு ஆடலை வேண்டினாய்' என்றெல்லாம் தம் ஞானவளர்ச்சியை அறிவித்தருளுகின்றார். அதனோடு பெருமான் திருமேனியில் காணும் திருநீறு, காளகண்டம், நெற்றிக்கண், செஞ்சடை, கொன்றைமாலை எல்லாம் அவருக்கு உண்மை ஞானத்தை

ஊட்டுகின்றன. ஆகையால் அவையெல்லாம் இவர் பாடலில் இடம் பெறுகின்றன. இவர்களால் உணர்த்தப்படுகின்ற நடனமும், இடுகாட்டு எரியாடலாகிய சங்கார நடனமும், பாண்டரங்கமும் ஆம். இவ்வண்ணம் ஞானசம்பந்தப் பெருமானுடைய ஆனந்த தாண்டவ அனுபவம் அமைகிறது.

## திருநாவுக்கரசர்

அப்பர்சுவாமிகள் கூத்தன் திருமுன்பு வந்து நிற்கின்றார்கள். கூத்தப்பெருமானுடைய குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும், பனித்தசடையும், பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணுகின்றார்கள். நமக்கு மனிதப்பிறவி இனியும் வேண்டுமா! பிறவி எடுத்ததன் பயனை நாம் அடைந்துவிட்டோமே என்று அருளனுபவ நிலையை அறிவிக்கின்றார்கள். பெருமானுடைய அபயகரம் அவர்களுக்கு ஆறுதலளிக்கிறது; வரவேற்கிறது; 'என்று வந்தாய்?' என்று வினவுவது போலக் காட்சி வழங்குகிறது. அதனால் தான்பெற்ற இந்த இன்பத்தை உலகவர் அனைவரும் பெறவேண்டும் என்ற விருப்பம்.

*'ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்*
*கூனமில்லைக்*
*கன்றிய காலனைக் காலாற் கடிந்தான்*
*அடியவற்காச்*
*சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்*
*பலத்துநட்டம்*
*என்றுவந் தாய்என்னும் எம்பெரு மான்றன்*
*திருக்குறிப்பே'*

என்று போற்றுகின்றார்கள். அத்தா! அழகா! நடமாடீ! எதற்காக நான் இப்பூமியில் மானிடதேகந் தாங்கி வந்தேன் தெரியுமா? உனது ஆடலைக் காணவேதான். இந்த ஆடலைக்கண்டு அனுபவிக்க மண்ணுண்ட மாலவனால் முடியாது. மலர்மிசை மன்னிய பிரமனாலும் முடியாது. அடியேன் உன்னுடைய தூக்கிய திருவடியைக் கண்டேன்; அடியார்களே! வாருங்கள்; காணுங்கள். இதனைக் கண்டபிறகு பேய்த் தொண்டர்களாகிய நீங்கள் பீளையுடைக் கண்களால் காணவேண்டிய பொருள் யாதிருக்கிறது? என்று அறிவிக்கின்ற அப்பரடிகள் கூத்தப் பெருமானுடைய கச்சினழகு, உடுத்ததுகில், கண்டத்திலங்கும் ஏனத்தெயிறு, சிரித்தமுகம், நெற்றியில் கண்ட கண், தலையிலுள்ள ஊமத்த மலர், விரல்கள் இவற்றையும் ஒவ்வொன்றாகக் கவினுணர்ச்சி - யோடு கலையுணர்வோடு காணுங்கள்; வேறு என்ன பார்க்கக் கிடக்கிறது உலகத்தில் என்கின்றார்கள். இவ்வண்ணம் அறிவித்துவந்த அப்பர் சுவாமிகளுக்கு அநுபவம் விஞ்சுகிறது. ஆராமை மிகுகிறது. ஆன்மாவாகிய தன்னிலையும், அருட்கூத்தப் பெருமானுடைய பெருநிலையும் தோன்றுகிறது. அவ்வளவு பெரியவன்; அரியவன்; பாவியாகிய என் நெஞ்சில் குடிகொண்டானே என்ற வியப்புத் தோன்றுகிறது. அதனால் வந்த ஆனந்த அனுபவ உரை,

*'முடிகொண்ட மத்தமும் முக்கண்ணின்*
*நோக்கும் முறுவலிப்பும்*
*துடிகொண்ட கையும் துதைந்தவெண் ணீறும்*
*சுரிகுழலாள்*
*படிகொண்ட பாகமும் பாய்புலித் தோலும்என்*
*பாவிநெஞ்சில்*
*குடிகொண்ட வாதில்லை யம்பலக் கூத்தன்*
*குரைகழலே'*

என்பது. கூத்தப்பெருமானைப் பற்றிப் பேசாத நாட்கள் யாவும் பிறவாத நாளாகவும் பயனற்ற நாளாகவும் தோன்றுகிறது.

தில்லையிலுள்ள கூத்தப்பெருமானுடைய அளவில்லாத கலைகளுள் ஓர் கலையே சிவதலங்கள் எல்லாவற்றிலும் சென்று விளங்கி அர்த்தசாமத்தில் தில்லை வந்து ஒடுங்குகிறது. ஆகவே உலகிலுள்ள சிவத்தலங்களனைத்திற்கும் அருள்விளக்கத்தை வழங்குவது தில்லைக் கூத்தனுடைய கலைகளுள் ஒன்றே என்ற மரபு ஆகமங்களிலும் பிறநூல்களிலும் கூறப்பட்டுள்ளன. இக்கருத்தையே அமைத்து அப்பர்

சுவாமிகள் புக்க திருத்தாண்டகத்தில் தலங்கள் எல்லாவற்றையும் சொல்லி, 'புலியூர்ச் சிற்றம்பலத்தே புக்கார்தாமே' என்று அறிவிக்கின்றார்கள். இதனால் அப்பர்சுவாமிகள் அர்த்தசாமதரிசனஞ் செய்து நின்றபோது பல தலங்களிலும் உள்ள சிவகலைகள் லயத்தானமாகிய புலியூரில் வந்து ஒடுங்க, அதனையுந் தரிசித்து ஒவ்வொன்றாகச் சொல்லிக்காட்டிய பகுதி புக்கதிருத்தாண்டகம் என்பது உணரப்படுகிறது.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்

திருக்கூத்தனுபவத்தை எமபயம் போக்கும் பயனுடையதாகக் கருதுகிறார்கள். கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும், எரியகலும், கரிய பாம்பும் பிடித்தாடி புலியூர்ச்சிற்றம்பலப் பெருமானைப் பெற்றம் என்கின்றார்கள். அதிலும் கொங்குநாட்டில் காஞ்சி நதிக்கரையில் எழுந்தருளியுள்ள கூத்தப்பெருமான் நினைவும் வர அதனை அமைத்து, பேரூர்ப் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றம் என்று அருளிச்செய்கின்றார்.

## மாணிக்கவாசகர்

'தில்லை பாதி திருவாசகம் பாதி' என்பது பழமொழி. அதனால் திருவாசகம் முழுவதுமே தில்லைக்கூத்தனின் திருவுருவம். மாணிக்கவாசக சுவாமிகள் தில்லைக்கூத்தன் தன்மைகளைக்கூறி உணர்வாய், ஒளியாய், சுவையாய் இருக்கும் அனுபவநிலைகளையே அறிவிக்கின்றார்கள். திருமேனி அமைப்பைக்கடந்த சிவானுபவத்திறமை அவர்களால் அறிவிக்கப்படுகிறது.

***"பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வாய் உமையொடு காளிக்(கு)
அருளிய திருமுகத்(து) அழகுறு சிறு நகை
இறைவன் ஈண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை உயர்கிழ வோனே."***

போற்றித் திருவகவலில் 'தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி' என்று வணங்குகின்ற மணிவாசகப்பெருமான். 'இன்று எனக்கு ஆர் அமுது ஆனாய் போற்றி ' என்றும் அனுபவம் கூறுகின்றார்கள். திருச்சாழலில் இறைவன் நடம் பயில்வது ஏன் என்று கேட்ட தோழிக்குத் தலைவி 'தான்புக்கு நட்டம் பயின்றிலனேன் தரணியெல்லாம், ஊன்புக்க வேல் காளிக்கு ஊட்டு ஆம்' என்று, காளி கர்வம் அடக்கியதும் அதனால் அவள் உலகத்தை உண்ணாது விட்டதுமாகிய அருஞ்செய்திகளை அறிவிக்கின்றார்கள். அச்சோப்பதிகத்தில் இறைவன் அருளிச்செய்த பல்வேறு நிகழ்ச்சிகளை வியக்கின்றவர்கள் 'கூத்தன் தன் கூத்தை எனக்கு அறியும் வண்ணம் அருளியவாறு யார் அருளுவர்' என்று கூறும் பகுதி மிக ஊன்றி அறியத்தக்கது ஒன்று. கூத்தைக் கலையளவில் உணர்வார் ஒருசிலர்; யோகநெறியால் உணர்வார் ஒரு சிலர். வரலாற்று அடிப்படையில் உணர்வார் ஒரு சிலர்; அங்ஙனமாக அடியேனுக்கு அவர் உணர்த்திய நெறி என் அனுபவ வாயிலாக அன்றி. உரையால் உரைக்க ஒண்ணாதது; மகளுக்குத் தாய் தன் மணாளனோடு ஆடிய சுகத்தைச் சொல்ல முடியாதது போல, எனது ஆன்மாவினிடமாக இன்ப உணர்வைத் தேக்கி நிற்கிறது; அந்தநிலை அடியேனாற் சொல்லொணாதது; இத்தகைய பேறு வேறு யாருக்குக் கிட்டககூடுமென்று வியக்கின்றார்கள். இதனால் கூத்தன் தன் கூத்து இத்தனையுமாய் இத்தனையும் கடந்த இறையனுபவமுமாய்- அதனை நுகரும் அறிவுமாய் விளங்குகிறது என்பதை அறிகிறோம். இது மணிவாசகர் அனுபவம்.

## சேரமான்பெருமாள்

திருவஞ்சைக்களத்துச் சேர அரசர் பெருமானாக விளங்கியவர். சிவப்பணிக்கு இடையூறில்லாமல் ஆட்சி நடத்தியவர். தம்முடைய நித்திய பூசை முடிவில் நாடோறும், கூத்தப்பெருமானுடைய திருச்சிலம்பு ஓசையைக்கேட்டு மகிழ்பவர். திருவருள் கூட்டத்

திருக்கூத்தைத் தரிசிக்க ஒருநாள் தில்லைக்கு எழுந்தருளுகிறார். அப்போது அவர் அருளிய தோத்திர நூல் 'பொன்வண்ணத்தந்தாதி' அதில் ஆனந்தக்கூத்தனுடைய அழகுவெள்ளத்திலும், அன்புவெள்ளத்திலும் ஆழ்ந்து காதல்பூண்ட தலைவியின் நிலையைத் தான் அடைந்ததாக அறிவிக்கிறார். காதலனோட காதலி பேசும் நகையுரை எழுகின்றது தில்லைக் கண்ணுதலான் கண்ட கள்ளங்கள் எத்தனை பார்த்தீர்களா என்று சொல்லிக்காட்டுகிறார். எல்லாம் நிலை கலங்கின; தேவர்கள் காரணம் அறியாமல் வியந்து நிற்கின்றார்கள் அந்த நிலையில் எம் தலைவன் யாருக்காக நடனமாடுகிறார் என்று வினவுகின்றர்.

## பட்டினத்தடிகள்

பற்றற முற்றத் துறக்கும் துறவுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினவர் பட்டினத்து அடிகள். அவர்கள் திருக்கூத்தைத் தரிசித்துக் கூறிய உரை 'கோயில் நான்மணிமாலை'. அதில் உண்மை அன்பின் உச்சியாகிய காதல் நிலையைப் பெற்று, காதலனோடு உல்லா - சமாயிருக்கும் பொழுது நகைச்சுவையுடன் உரையாடுவதுபோல, தில்லைக்கோயில் கொண்ட செல்வரே! உமது அருமையை நீர் அறிந்துகொள்ளவில்லை; ஆனாலும் இடப்பக்கத்தேயிருந்த தேவியாவது தடுக்க வேண்டும்; அப்படியிருக்க அவளும் விலக்காவிட்டால் என்போல்வார்க்கு உடன் நிற்க இயல்வதன்று; வானோர் தஞ்சு உண்டா அம் கருநீர் நஞ்சு உண்டீரே என்று கூறுகிறார். அப்பப்பா! பிறவிக்கடலில் ஐம்புலத் திமிங்கிலங்கள் அலைக்க குடும்பப் பாறையில் மோதிக் காயச்சிறைக் கலம் கவிழ்வதற்கு முன்பு திருவருள் கயிற்றைக் கட்டித் திருவடி நெடுங்கரை சேர்த்துக்கொள் என்று வேண்டுகின்ற பகுதி உலகியல் நிலையை வெறுத்து, உண்மை ஞானத்தை விரும்புவார்க்கு உபதேச மொழிகளாம்.

## நம்பியாண்டார்நம்பி

தேவாரத் திருமுறைகளை உலகிற்கு உதவிய உழைப்பு நம்பியாண்டார் நம்பிக்கே உரியது. அவர் நடராசப்பெருமானை அனுபவித்துப் பாடிய பிரபந்தம் 'கோயில் திருப்பண்ணியர் விருத்தம்' என்பது. ஆடல் அழகனை நேசித்த தலைவி காமநோயால் வெதும்பிக் கிடக்கின்றாள். அப்போது குலத்தில் மூத்த பெண்கள் குணலை இடுகிறார்கள்; சாத்தனை அழைக்கிறார்கள்; ஒன்றும் பயனில்லை. வெப்பம் தணியவில்லை. இதைக்கண்ட அவள் உயிர்ப்பாங்கி மூத்தபெண்களை நோக்கி, ஏன் இப்படி வீண் கூக்குரல் இடுகிறீர்கள்; அவள் காதுக்கு அருகிற் சென்று கூத்தன் தில்லைவாணன் வானோர்வணங்குந்தலைவன் என்று மெதுவாகச் சொல்லுங்களேன் என்று வேண்டிக்கொள்கிறாள். இந்த வார்த்தையைக் கேட்ட தலைவிக்குத் தெளிவு பிறக்கிறது. ஏடி தோழி! தில்லைக்கூத்தனைத் தரிசிக்க என் உடல் முழுவதும் கண்ணாகி விடுமா? அவரைத் தொழுதற்குக் கையாகிவிடுமா? அவர் திருநாமங்களைச் சொல்வதற்கு வாயாகிவிடுமா? என்று கேட்கிறாள். இப்படிக் காதல் மிகுந்த கவிதைகள் கொண்டு விளங்குவது அந்நூல்.

## சேக்கிழார்பெருமான்

தில்லைக் கூத்தப்பெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க அம்முதலைக் கொண்டு முடிந்தது பெரிய புராணம். அது முழுவதுமே ஆனந்தக்கூத்தன் அனுபவத்தை அறிவிப்பது. அங்ஙனமாயினும் சில பாடல்கள் சிந்தையை உருக்குவன. அவற்றுள் ஒன்று :

*"ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள*
*அளப்பருங் கரணங்கள் நான்கும்*
*சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்*
*திருந்து சாத்து விகமே யாக*
*இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த*
*எல்லையில் தனிப்பெருங் கூத்தின்*
*வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து*
*மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."*

சுந்தரர் பெருமான் தில்லைக்கூத்தனைத் தரிசிக்கத் திருவைந்தெழுத்துப்படியின் முன் நிற்கின்றார். ஆடல் அழகன் திருவுருவைக் கண்களால் பார்க்கின்றார். காது, மூக்கு, நாக்கு முதலிய பொறிகள் காரியப்படவில்லை. கண்ணே எல்லாவற்றின் ஆற்றலையும் கொண்டு காரியப்படுகிறது. கண்டுகொண்டேயிருக்கிறார். இதனை 'ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள' என்ற பகுதி அறிவிக்கிறது. மின்விளக்கு எங்கும் எரிந்துகொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் ஓர் இயந்திரம் அதிவேகத்தோடு இயங்கத் தொடங்குகிறது. மின்விளக்குகள் தன் ஒளி குறைகின்றன. அதுபோல உயிருணர்வு முழுவதையும் கண்ணிந்திரியம் பெறுகிறது. ஆனால் கண் காணத்தான் செய்யும்; அதனால் காட்சியின்பந்தான் விளையக்கூடும் எனக்கருதுவோம். ஆனால் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறிதலாகிய ஐந்து இன்பங்களையும் கண்வழியாகவே பெற்றார் சுந்தரர்பெருமான். இந்தநிலை பசு போதம் கடந்த பதிஞானநிலை. இதனைத்தான் இப்பகுதி உணர்த்துகிறது. இதுபோல இந்தப் பாடல் முழுவதும் ஆனந்தக்கூத்தனுடைய அருளனுபவ நிலையை அறிவிக்கிறது. இவ்வாறே திருநடனம் காண எழுந்தருளும் அடியார்கள் வாயிலாக ஆடல் அனுபவத்தை அறிவிக்கின்ற சேக்கிழார்பெருமான் நூலின் இறுதியிலும்,

*"என்றும் இன்பம் பெருகும் இயல்பினோடு*
*ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட*
*மன்று ளாரடி யாரவர் வான்புகழ்*
*நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்"*

என்று முடிக்கிறார். இவ்வண்ணம் ஆனந்தக்கூத்தன் அருள் அனுபவமாக முடிகிறது பெரியபுராணம். இவ்வண்ணமே பதினெண்-சித்தர்கள், குமரகுருபரசுவாமிகள், சிவப்பிரகாசசுவாமிகள், பரஞ்சோதி முனிவர், இரட்டையர், சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர், தில்லைவிடங்கன் மாரிமுத்து உபாத்தியாயர், கோபாலகிருஷ்ண பாரதி, முத்துத்தாண்டவராயர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் முதலியோர்களும் ஆனந்தக்கூத்தின் அனுபவத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறு திருமூலர்காலத்துக்கு முன்பிருந்து இன்றுவரை ஏன்? என்றுமே இறைவன் ஆடிக் கொண்டேயிருக்கிறார்; இருப்பார். அவர் ஆட்டமே ஐந்தொழில் அல்லவா!

## மனதுக்கு உபதேசம்

ஆறுண்டு தோப்புண்டு அணிவீதி அம்பலம் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோவணம் உண்டு நித்தம் நித்தம்
மாறுண்டு உலாவி மயங்கும் நெஞ்சே மனைதோறும் சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா இருக்கச் சுகம் உண்டே!

எல்லா வசதிகளும் இருக்கின்றன என்றாலும், மனித மனம் தேவைகளை நோக்கியே ஓடுகிறது. அன்றாடம் புதிய சுகம் தேடுகிறது. புது வரவை நாடுகிறது. போதும் என்று இருக்க அதால் இயலவில்லை. மனித மனத்தின் இயல்பு இது. ஏதாவது ஒன்றை எண்ணி ஏங்குவதும், எதிர்பார்ப்பதும், அது கிடைத்த பின் வேறு ஒன்றை விரும்பித் தவிப்பதும் மனத்தின் இயல்பு. எனவேதான் மனதைக் குரங்கு என்றார்கள். குரங்கு மரத்தில் ஒரு கிளையில் இருக்காது. கிளைக்குக் கிளை தாவும். ஒரே மரம், ஒரே தன்மை என்றாலும் ஒன்றில் பற்றி இருக்கக் குரங்கு விரும்புவதில்லை. தாவிக் கொண்டே இருக்கும். எனவேதான் பெரியோர்கள் மனதைக் குரங்கு என்றார்கள். "மனக்குரங்கு மடப்பயலே" - என்று அறிவுரை கூறுவார், அருட்சோதி இராமலிங்கர். இதைத்தான் கூறுகிறார் மனத்துக்கு இனிய உபதேசமாகப் பட்டினத்தார். ஆறோடு தோப்பும், தோப்போடு நிழலும், நிழலோடு சோறும் கிடைத்தாலும், அமைதி கொள்ளாது மயங்கித் தவிக்கும் மனமே, சும்மா இரு, உனக்குச் சுகம் கிடைக்கும் - அலைந்து திரிந்து அல்லல் படாதே, என்கிறார்.

# மறு பிறப்புக் கொள்கை

இந்து மதம் தோன்றிய காலந்தொட்டே மறுபிறவி என்ற எண்ணமும் தோன்றியிருக்க வேண்டும். மத சம்பந்தமான கல்வியைப் பயிலும் மாணவனைப் பொறுத்தவரை 'மறுபிறவி' என்பது ஒரு தெய்வீகப் கோட்பாடு. பெரும்பாலான இந்துக்கள் இதை மெய்யான கருத்து என்றே கருதுகிறார்கள். (1) ஜாதிஸ்மரஸ் (Jatismaras) அதாவது தனது முற்பிறப்பு அல்லது பிறவிகள் பற்றிய நினைப்பு இருப்பவர்கள். (2) மத நூல்களில் கூறப்பட்டுள்ள சான்றுகள் அல்லது முனிவர்களின் வாழ்க்கை ஆகிய இரு வழிகளில் இந்த மறு பிறவிக் கொள்கைகளுக்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன.

இந்து மத சம்பந்தமான இலக்கியங்களில் மறு பிறவி பற்றிய எண்ணற்ற சான்றுகள் கிடைக்கும். பகவத் கீதை எனப்படுவது பகவான், ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்தபோது தன்னுடைய சீடனான அர்ஜுனனுக்கு அளித்த உபதேசமாகும். அதில் அவர் அர்ஜுனனிடம் "ஓ அர்ஜுனா! கடந்த காலத்தில் நீயும் நானும் பலமுறை பிறந்து இருக்கிறோம். உனக்கு அப்பிறப்புக்களைப் பற்றிய நினைவு இல்லை. ஆனால் நான் அவை அனைத்தையும் நினைவில் வைத்து இருக்கிறேன்" என்கிறார். இந்த ஓர் இடத்தில் கூறப்பட்டதை வைத்து கண்ணபிரானை ஜாதிஸ்மரன் அதாவது கடந்த காலப் பிறவிகளின் நினைவை உடையவன் எனலாம். ஆனால் அர்ஜுனனை அவ்வாறு கூற இயலாது.

கண்ணபிரானைப் போன்ற தெய்வீகப் பிறவிகள் மட்டுமல்லாது தூய எண்ணம் கொண்ட முனிவர்கள் கூட அவர்கள் விரும்பினால் அவர்களது கடந்த காலப் பிறவிகளைப் பற்றிய விஷயங்களை நினைவு கூறலாம். தெய்வப் பிறவிகளாகவோ அல்லது முனிவர்களாகவோ இல்லாத போதிலும் இத்தகைய அபூர்வமான நினைவாற்றலை உடைய சிலர் இருந்தனர். அத்தகையோரின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே இருந்தது. இவ்வாறு பல சான்றுகளை நம்பத்தக்க ஆய்வுகளின் மூலம் உண்மையென்று நிரூபித்திருக்கிறார்கள்.

மறுபிறவி பற்றிய கொள்கையானது பல விஷயங்களை விளக்கிக் கூறினாலும் போதுமான அளவு விளக்கம் இல்லை. மொஜார்ட் (Mozart) போன்ற குழந்தைப் பருவத்திலேயே அதிமேதாவியாக விளங்குபவர்களின் திறமையை அது பரம்பரையானது என்றோ பிறப்பின் தன்மையினால் என்றோ கூறி விளக்க முடியாது. இதை மறுபிறவி பற்றிய கொள்கையினால் மட்டுமே விளக்கமாகக் கூற முடியும். அதிமேதாவியாக விளங்கும் பாடகர் முற்பிறவியில் ஒரு சிறந்த பாடகனாக இருந்திருக்க வேண்டும். அந்தத் திறமைகளை இப்பிறவியிலும் தொடர்ந்து கொண்டு வந்திருக்கலாம்.

'ஏன் ஒருவர் மறுபிறவி எடுக்க வேண்டும்?' என்ற வினாவிற்கு இந்து மதம் கூறும் பதில் இதுதான். 'ஒருவன் நிறைவேறாத ஆசைகளுடன் இறந்திருந்தால் அதுவே அவனது மறுபிறப்பிற்கான முக்கியமான காரணமாக அமைகிறது. இதைப் பற்றிய தெளிவான அறிவைப் பெற விரும்புபவர்கள் 'இறப்பும் அதற்கு அப்பாலும்' என்ற இந்துக்களின் கருத்துக்களைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**மனிதனின் திடமானதும், நுட்பமானதுமான உடல்-மனிதனின் ஸ்தூல, சூட்சும சரீரம்**

இந்து மதத்தின் விளக்கப்படி மனிதனுக்கு ஸ்தூலமானது (நாம் நேரில் காணும் திடமான உடல்) சூட்சுமமானது(கண்ணுக்குப் புலப்படாத உடல்) என இரண்டு வகையான உடல்கள்

உள்ளன. நம்முடைய உடல் ஸ்தூல சரீர் எனப்படுவது. மனம், அறிவு, உணர்ச்சி உறுப்புக்கள், செயல் உறுப்புக்கள், உயிர்ச்சக்தி ஆகியவை சூட்சும சரீரத்தில் அடங்கும். கண்கள், காதுகள், மூக்கு, நாக்கு, தோல் ஆகியவை உண்மையில் உணர்வு உறுப்புக்களாகக் கருதப்படுவதில்லை. அவை பார்த்தல், கேட்டல், நுகர்தல் மற்றும் தொடுதல் போன்றவற்றால் வெளியுலகுடன் தொடர்பு கொள்ளவல்ல இயங்கும் அலுவலகங்களாகவே கருதப்படுகின்றன. உண்மையான உணர்ச்சி உறுப்புக்கள் மிகவும் நுட்பமானவை.

## இறப்பும் பிற உலகங்களும் (உயிரின் பல்வேறு நிலைகளில்)

ஒருவன் இறந்து போனால் அவனது ஸ்தூல உடல் கீழே கிடக்கும். அவனது சூட்சும உடல் பல்வேறு வகையான நிலைகளுக்குச் செல்கின்றன. அத்தகைய இடங்களுக்கு வடமொழியில் லோகம் என்னும் சொல் உள்ளது. (பொதுவாக அனைவருக்கும் தெரிந்தது மூன்று லோகங்கள். அவை சுவர்க்க லோகம், மத்ய லோகம் மற்றும் பாதாளம் என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன. ஆனால் புனித நூல்கள் மேலும் பல லோகங்களைப் பற்றிக் கூறுகின்றன.)

இந்தப் பூவுலகானது பூர்லோகா (Bhurloka) எனப்படுகிறது. இதையன்றி இன்னும் எண்ணிலடங்கா லோகங்களும் உள்ளன. அவை பல்வேறு வகைப்பட்ட அதிர்வுகளைக் கொண்ட உலகங்களாகும். அவை அனைத்துமே ஒரே வெளியில்தான் உள்ளன. இந்த உலகம் என்னும் சமதளத்திற்கு மேலாகவோ அல்லது கீழாகவோ இல்லை. அதே பரப்பைச் சார்ந்த இடத்திலேயே உள்ளன.

இத்தகைய லோகங்கள் எண்ணிக்கைக்கு அதிகமாக இருப்பதால் எவராலும் அவற்றைப் பட்டியலிட்டுச் சொல்ல முடியாது. இந்து மதமானது இந்த பூலோகத்தையும் சேர்த்து (Bhurloka) மொத்தம் பதினான்கு லோகங்களைப் பற்றிக் கூறுகிறது. அவை சத்தியலோகம், தபோலோகம், மகரலோகம் (Makarloka), ஜனலோகம் (Janaloka), ஸ்வர்லோகம் (Svarloka) புவர்லோகம் (Bhuvarloka), பூர்லோகம், அதலலோகம், விதலலோகம், சுதலலோகம், ரசாதலலோகம், தலாதலலோகம் (Talatalaloka), மகாதலலோகம; (Mahatalaloka), பாதாள லோகம் (Patalaloka) என்று சொல்லப்படுகின்றன. இவற்றுள் முதல் ஆறு லோகங்கள் உயர்ந்த லோகங்களாகவும், மீதி ஏழு லோகங்களும் தரம் குறைந்ததாகவும் கூறப்படுகின்றன. கௌஷீதகீ (Kaushitaki) உபநிடதத்தில் பிரம்மலோகம், பிரஜாபதி லோகம், இந்திர லோகம், ஆதித்ய லோகம், வருணலோகம், வாயு லோகம் மற்றும் அக்னி லோகம் ஆகிய ஏழு உலகங்கள் உயர்வான லோகங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பூர் லோகத்தில் காணப்படும் நிபந்தனைகளுக்குத் தக்கபடிதான் மேலான அல்லது தரக்குறைவான என்ற உரிச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

உயர்வானதாகக் கூறப்பட்ட உலகங்களில் பார்த்தோமானால் இப்பூவுலகில் அனுபவிக்கும் இன்பங்கள், ஆன்மீக ஆனந்தம் போன்றவை ஏறுவரிசையில் காணப்படும். அதேபோல் கீழ் லோகங்களில் இறங்கு வரிசையில் கஷ்டங்களும், துன்பங்களும் அதிகமாக இருக்கும். இந்த இன்பங்களையும் துன்பங்களையும் உடலை விட்டுப் பிரிந்த ஆன்மாவானது மனத்தினால் மட்டுமே அனுபவிக்க முடியும். ஒருவனுடைய மனத் தூய்மையின் அளவினைப் பொருத்தே அவன் தன் சூட்சும உடலுடன் அந்தந்த லோகத்தை அடைவான். கடந்த காலத்தில் அவன் செய்த வினைகளுக்கு ஏற்றபடி உடலைப் பிரிந்த உயிர் மேலே கூறப்பட்ட உலகங்களில் சிறிது காலம் தங்கி துன்பத்தையோ அல்லது இன்பதையோ ஒரு குறிப்பிட்ட காலம் வரை அனுபவிக்கும்.

## நிறைவேறாத ஆசையே மறு பிறவிக்குக் காரணம்

ஒரு மனிதன் மிகவும் தீவிரமான ஓர் ஆசை நிறைவேறாத நிலையில் இறந்துபோனால், அந்த ஆசையும் இந்தப் பூவுலகில்தான் நிறைவேற முடியும் என்று இருந்தால், அவனுடைய மனம் வேறு உலகில் இருந்தாலும் நிறைவேறாத ஆசைகள் காரணமாகவே அவன் மறுபடியும் இப்பூவுலகில் பிறக்க நேரிடுகிறது. இதை விளக்க ஓர் எடுத்துக்காட்டைக் கூறலாம்.

ஒருவன் வசிக்கும் ஊரிலுள்ள உணவகத்தில் மிகச் சுவையுடன் கூடியதும், மணமுள்ளதுமான ஒரு வகை உணவு கிடைப்பதாக எடுத்துக்கொள்வோம். அவன் வசிக்கும் இடத்திலிருந்து உணவகம் பத்து மைல் தொலைவில் இருக்கிறது. ஒருநாள் அவனுக்கு அந்த குறிப்பிட்ட வகையான உணவை உண்ணும் ஆசை எழுகிறது. அந்த ஆவலின் தூண்டுதலால் தனது காரை எடுத்துக்கொண்டு அங்கே செல்கிறான். அவ்வாறே இவ்வுலகை நீத்த ஆன்மா தன் நிறைவேறாத ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளத் திரும்பவும் இப்பூமியில் வந்து பிறக்கிறது.

## மறுபிறப்பு - ஆன்மீக சாதனை செய்ய ஒரு வாய்ப்பு

மறுபிறவியானது ஒருவனுக்கு ஆன்மீக சாதனைகளைத் தொடர்ந்து செய்து ஆன்மீக முன்னேற்றம் அடைவதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. இறையனுபூதியின் மூலம் அவன் முடிவில் ஆன்மீகத்தின் உச்சியைத் தொடுகிறான். கடவுளை உணர்ந்து கொள்வதால் அவன் ஆசைகளுக்கு அப்பாற்பட்டவனாகிறான். அவனுக்குத் தேவை என்பதே இல்லாது போகிறது. அவன் பிறப்பு, இறப்பு என்ற தளைகளிலிருந்து விடுபட்டு விடுகிறான். இத்தகையவனை ஜீவன் முக்தன் (முக்தியடைந்த ஆன்மா) என்பார்கள்.

## ஆன்மாவின் மறுபிறப்பு

இந்து மதத்தில் ஆன்மாக்களின் மறுபிறப்பு என்பது உள்ளது. சாதாரணமாக ஒரு மனிதனுடைய ஆன்மா முக்தி நிலை எய்தும் வரை திரும்பத் திரும்ப மறுபிறவி எடுக்கிறது. சில சமயங்களில் அபூர்வமான சில விதி விலக்குகளும் இருக்கலாம். இத்தகைய ஆன்மாக்கள் ஒரு முறையோ அல்லது இரண்டு தடவைகளோ மனிதனல்லாத பிறவியெடுத்து தனது கெட்ட கர்மாக்களின் பலனைத் தீர்த்துக் கொள்ளலாம். அந்தக் கெட்ட கர்மாக்களின் பலன்கள் தீர்ந்தவுடன் மறுபடியும் மானிடனாகப் பிறந்து முறைப்படி ஆன்மீக சாதனைகள் புரிந்து விடுதலை அடைகிறான்.

## இனங்களின் பரிணாம வளர்ச்சியும் மறுபிறப்பும்

மறுபிறப்பு என்பதை ஒப்புக் கொள்ளாதவர்கள் சில சமயங்களில் வாதம் புரிவார்கள். அவர்களின் வாதப்படி உலகம் தோன்றிய காலந்தொட்டு இதுவரை எவ்வளவோ பேர் பல பிறவிகள் எடுத்து முக்தி அடைந்திருந்தால் உலகிலுள்ள மனிதப் பிறவிகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்திருக்க வேண்டும். அதற்கு மறுப்புக் கூறும் வகையில் இந்து மதமானது இதுவரை எவ்வளவோ கீழான பிறவி எடுத்த ஜீவன்கள் மனிதப் பிறவியை அடைந்த காரணத்தினால் தான் மனிதர்களின் எண்ணிக்கை குறையவில்லை என்கிறது. அதனால் மனிதர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு உயிரிலும் தெய்வீகத் தன்மையானது ஒரே அளவில் இருப்பதாக இந்து மதம் உறுதியாகக் கூறுகிறது. அது மனிதனாக இருந்தாலும் சரி அல்லது புழு, பூச்சி, மிருகங்கள் போன்ற எத்தகைய பிறவியாக இருந்தாலும் சரி என்கிறது. இல்லாவிட்டால் கடவுள் தூணிலும் நன்கு விளக்கியுள்ளார். இந்த மாறுதலானது வடமொழியில் 'ஜாத்யந்தர பரிணாமா' (Jatyantara parinama) எனப்படுகிறது. பதஞ்சலியின் கூற்றுப்படி ஒரு இனப் பிரிவிலிருந்து மற்றோர் இனத்திற்கு மாறக்கூடிய சக்தியானத மறைந்து இருக்கிறது. அத்தகைய மாற்றம் ஏற்பட வேண்டிய தக்க சூழ்நிலை ஏற்படும் வரை அவை காத்திருக்கும்.

# பழந்தமிழ் இலக்கியங்களில் முருகவழிபாடு

திருமதி. தேவகுமாரி ஹரன்
ஆராய்ச்சி அலுவலர்
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

முருகன் இயற்கைக் கடவுளாக, ஒளிக்கடவுளாக, மலைவாழ் மக்களால் வழிபடப்பட்டான், தமிழகத்தில் முருக வழிபாடு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இருந்தே நிலவி வந்துள்ளது, இயற்கையினுள் பிரிவின்றி நிரவி நிற்கும் அழகையும், அதன் மாறா இளமையையும் அதிலூரும் அழியா மணத்தையும் எல்லாவற்றையும் கடந்து மாறுதலின்றி ஒளிரும் தன்மையைக் கண்டார்கள். இவ்வழகு, இளமை, மணம், கடவுட்டன்மை ஆகிய இயல்புகளைக் கொண்ட ஒன்றை பண்டைத்தமிழர் முருகு என்ற சொல்லால் அழைத்துப் போற்றினர்.

முருகு என்பது பொருள் பொதிந்த சொல். அம்முருகையுடையவன் முருகன் எனவே இயற்கை வழிபாடே முருக வழிபாடு என்பதாக அமைந்தது. மற்றுமொரு வகையில் முருக வழிபாட்டின் தொன்மையை விளக்கிக் கூறலாம். சங்க காலத்தில் ஆரம்பகால வழிபாடு மரங்களுக்கு கீழ் கற்களை நட்டு வழிபடும் முறையாகக் காணப்பட்டது. இது கந்து என அழைக்கப்பட்டது. இக்கந்து வழிபாடு பற்றிய குறிப்புக்கள், திருமுருகாற்றுப்படை பட்டினப்பாலை முதலிய நூல்களில் காணப்படுகின்றன. கந்து உருவம் மலர் முதலியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டு, விளக்கேற்றப்பட்டு வணங்கப்பட்டமையைப் பட்டினப்பாலை உணர்த்தி நிற்கின்றது. (பட்டி 246 - 249) முருகனும் கந்து வழிபாட்டுக்குரியவனாக காணப்பட்டான். கடம்பமரம் முருகனுக்கு உரியதாக கருதப்பட்டு வழிபடப்பட்டமையைச் சங்க இலக்கியங்கள் ஊடாக அறிந்து கொள்கின்றோம். இதனால் முருகன் கடம்பன் எனச் சிறப்பிக்கப்படுகின்றான்.

***" கடம்பமர் நெடுவேள்"***
***(பெரும் பாணாற்றுப்படை 75)***

*"செல்வக் கடம்பமர்ந்தான்"* (ஐந்திணை-1)
*''காரவலர் கடம்பன் அல்லன் என்பதை-*
*ஆரங்கண்ணியிற் சாற்றினன் வருவோன்"*
(4.49-50)

என மணிமேகலை.

*"கார் நறுங் கடம்பின் கண்ணிசூடி முருகே"*

(நற்றினை) என வரும் பாடலடிகள் மூலம் முருக வழிபாடும் கடம்பமரம் பற்றிய செய்திகளையும் அறிய முடிகின்றது. மரவழிபாடு கிறிஸ்துவுக்கு பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அகழாய்வுகள் நிருபிக்கின்றன. எனவே பண்டைத்தமிழர் மத்தியில் நிலவிய கடம்பமர வழிபாடும் முருக வழிபாட்டின் தொன்மையை புலப்படுத்தி நிற்கின்றது.

மேலும் சமஸ்கிருத மொழியில் எழுந்த பௌதாயனதர்ம சூத்திரத்தில் ஸ்கந்தன், சனத்குமாரன், விசாகன், ஷண்முகன், மஹாசேனன், சுப்பிரமணியன் ஆகிய பெயர்கள் முருகனைக் குறித்து வந்துள்ளன. பௌத்தாயன தர்ம சூத்திரம் கி. மு. நான்காம் நூற்றாண்டுக்கு முந்தியது என்று கருதப்படுகின்றது. சுப்பிரமணியன் என்ற பெயர் தென்னிந்தியாவில் சிறப்புற்றிருந்தமையை இந்நூல் விளக்கி நிற்கின்றது. எனவே கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முன்னரேயே முருக வழிபாடு இந்தியா முழுவதிலும் வழக்கில் இருந்துள்ளமையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

தமிழ் இலக்கியங்கள் பல முருகப் பெருமானது தோற்றம், சிறப்பு, அருட்திறம் முதலியவற்றைப் போற்றிப் பாடுகின்றன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம் , தொல்காப்பியம் ஆகிய நூல்களிலும் முருக வழிபாட்டுடன் தொடர்பான செய்திகள் உள்ளன. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களுள் திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் முக்கியமானவை. தொல்காப்பியத்தில் **"சேயோன் மேயுமைவரை யுலகமும்"** என்னும் குறிப்பு வருகின்றது. சேய் என்னும் சொல்

செம்மைப் பண்பையும், இளமையையும் குறிக்கும் சொல்லாக அமைந்துள்ளது. முருகன் மலையும் மலைசார்ந்த இடமாகிய குறிஞ்சி நிலத்திற்குரிய சிறப்பான தெய்வமாகப் பழந்தமிழர் இடையே போற்றப்பட்டுள்ளான்.

திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் குன்று தோறாடல் என்னும் பகுதியில் முருகன் குன்றுகளிலெல்லாம் ஆடற் கோலம் கொண்டு நிற்பதாகப் பாடுகின்றார். மேலும் முருகனின் எழிலார்ந்த தோற்றத்தை செஞ்ஞாயிறுடன் ஒப்பிட்டு அவனை அவிர் ஒளி எனச் சிறப்பிக்கின்றார்.

*"உலகம் உவப்ப வலன் ஏர்ப்பு திரிதரு*
*பலர் புகழ் ஞாயிறு கடல் கண்டா.*
*அங்கு ஓ அற இமைக்கும் சேனன் விளங்கு*
*அவிர் ஒளி (திருமு - வரி 1-3)*

நக்கீரர் தாம் வழிபடும் முருகப் பெருமானை பரத்துவமுடைய முழுமுதற் பொருளாக கண்டார் என்பதற்கு இத்தொடர் சான்றாக அமைந்துள்ளது.

பரிபாடலில் செவ்வேள் பற்றிய எட்டுப் பாடல்கள் காணப்பெறுகின்றன. தொல்காப்பியம் கூறும் கடவுள் வாழ்த்துப் பற்றிய பாடல்கள் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற முன்றோடு வருவன, என்பதற்கேற்ப செவ்வேள் மாதடிநிந்து வென்ற வெற்றி, பாணர்வெற்றி, கூத்தர்வெற்றி ஆகிய வெற்றிகளுக்கு அறிகுறியாக செவ்வேளின் சேவல்க் கொடி, சுனையின் பாங்கர் உயர்ந்து நின்றது எனக் "கொடிநிலை" கூறி வாழ்த்துகின்றார் குன்றம் பூதனார். செவ்வேளின் மேனி கதிரவனின் ஒளியைப் போன்றது என்பதை "ஞாயிற்றேர் நிறத்தை" எனவும் செவ்வேளின் மேனியின் நிறத்தை தீயின் நிறத்திற்கு ஒப்பிட்டு "உருவும் உருவந்தீயொத்தி" (பாடல் 19) எனவும் குறிப்பிடுகின்றார். அத்துடன் கதிரவனின் ஒளிமண்டலத்தை முருகப் பெருமானது ஆறுதலைகளுக்கும் உவமையாகக் கூறியுள்ளார்.

பழந்தமிழ் இலக்கியங்களில் முருக வழிபாட்டுடன் தொடர்புடையதாக வேலன் வெறியாடலும் குரவைக் கூத்தும் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன. குறிஞ்சி நில ஆடவர்களுக்குரிய பிரதான தொழில் வேட்டையாடலாகும். அவர்கள் வேலை முக்கிய கருவியாகப் பயன்படுத்தினர். தங்கள் உயிர் காக்கும் வேற்படையைத் தாம் வழிபட்ட முருகன் கையிலிருந்தினர். இதனால் வேலேந்திய முருகன் வேலன் எனப்பட்டான். பின்னர் அவனைப் பூசனை புரியும் பூசாரியும் வேலன் எனப்பட்டான். மக்கள் தமக்கு குறைகள் உண்டான பொழுது அக்குறை முருகனால் நேர்ந்தது எனக் கருதிப் பூசாரியாகிய வேலனைக் கொண்டு அருள் வாக்குப் பெற்றனர். அப்போது முருகன் வேலன் மீது எழுந்தருள்வான். அதனால் வேலன் தன்னை மறந்து கூத்தாடுவான் அதனை வேலன் வெறியாட்டயர்தல் என்பர். இது பற்றிய குறிப்புக்களைக் குறுந்தொகை, அகநானூறு நற்றிணை ஆகிய இலக்கியங்களில் காணலாம்.

*"வேலன் புனைந்த வெறியர்களந் தோறும்"*

குறுந்தொகை வெறியாடும்களம் நல்ல முறையிலே அமைக்கப்பெற்று அதிலே வேலியினை நிறுத்தி, அதற்குக்கண்ணி சூட்டி, வளம் பொருந்திய கோயிலிலே ஆரவாரம் உண்டாகுமாறு வேலின் புகழ் பாடி வேலனுக்குப் பலிக்கொடையிட்டு சிவந்த குருதியைக் கலந்து தூவி முருகனை வழிபட்ட செய்தியை அகநானூறு தெரிவிக்கிறது.

வேலன் வெறியாடிய இடந்தோறும் செந் நெல்லின் பொரிகள் சிதறிக்கிடக்கும் என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது. கார் காலத்தில் மலர்கின்ற நறிய கடம்ப மாலையைச் சூடிக் கொண்டு வேலன் முருகனை வேண்டி நிற்க, அவ்வெறியாடு களத்திலே கொடுக்கப்படுகின்ற பலியைப் பெறுவதற்காக முருகன் வருவான் என

நற்றிணை கூறுகின்றது. திருமுருகாற்றுப் படையில் குறமகள் ஒருத்தி. வெறியாட்டயர்ந்த செய்தி கூறப்படுகின்றது. சிலப்பதிகாரத்திலுள்ள குன்றக்குரவை என்னும் பகுதியிலும் வெறியாட்டமரிந்த செய்திகள் காணப்படுகின்றது.

குரவைக் கூத்தும் முருகனுடன் தொடர்புடைய கூத்தாகும். குரவைக் கூத்தினை எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைகோர்த்தாடும் கூத்தாகும். இக் கூத்தினை சிறு பறையை முதுகில் கொண்டு ஆடியமை பற்றிய செய்திகள் மலைப்படுகடாம் கூறுகின்றது. (வரி - 320 - 322) மகளிர் மன்றுகள் தோறும் குரவைக் கூத்தாடுவர் என்பதனை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது.

*"மணிப்பூ முண்டகத்து மணல்மலி கானல் பரதவர் மகளிர் குரவையொடு ஒலிப்ப" (மதுரைக்காஞ்சி)*

சிலப்பதிகாரத்தில் இருபத்து நான்காவது காதையாக விளங்கும் குன்றக் குரவையில் முருக வழிபாடு பரவலாக புகழப்பட்டுள்ளது. வேல் வழிபடப்பட்ட வேற்கோட்டம் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன வஞ்சிக் காண்டத்திலும் முருக வழிபாடு பேசப்படுகின்றது.

*"சீர் கெழுசெந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவர்"*

என்று முருகன் உறையும் இடங்களைக் குறிக்கின்றது.

பழந்தமிழ் இலக்கியங்களில் முருகன் போர்த் தெய்வமாகவும் கருதப்பட்டான். வெற்றித் தெய்வமான கொற்றவையே அவனது தாய் என்று திருமுருகாற்றுப்படை சிறப்பிக்கின்றது. அதே போன்று திருமுருகாற்றுப்படை திருச்சீரலை வாய் என்னும் பகுதியில் முருகன் முதன் முதலாக ஆறுமுகனாக காட்சி தருகின்றான். ஆறுமுகனின் செயற்பாடுகளை நக்கீரர் விவரிக்கின்றார் பழமுதிர்ச்சோலை, திருவேரகம் போன்ற ஆறுபடை வீடுகளைப்பற்றியும் திருமுருகாற்றுப்படை விவரிக்கின்றது.

அதே போன்று சைவத்திருமுறைகள் பன்னிரண்டிலும் நாயன்மார் பாடல்களில் முருகன் பல இடங்களில் சிவனுடன் தொடர்புபடுத்தி நோக்கப்பட்டுள்ளான். சம்பந்தர் "குமரவேள் தாதை" "குமரன் தாதை" "சாமி தாதை", மடமயிலூர்திதாதை "மா முருகன்....தந்தை" என்று முருகனைச் சிவனுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றார். இது போன்றே சுந்தரரும் "கடற்சூரி தடிந்திட்ட சேந்தர்தாதை, கடுவரி மாக்கடலுட் சாய்ந்தவன் தாதை, சேந்தன் அப்பன், மயிலூர்தி முருகவேள் தாதை என்றும் தமது தேவாரங்களில் குறிப்பிடுகின்றார்கள்.

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் முருகனை முன்னிறுத்தி "முருகன் தந்தை சிவபெருமான் என்று குறிப்பிடுவதைக் காணமுடிகின்றது. "நல்வேலன் தாதை" என முருகனுடைய தந்தை என்று குறிப்பிட்டாலும் சிவனைச் சுட்டுவதே நோக்கம் என்பது புலப்படுகின்றது.

சேந்தனார் இயற்றியுள்ள திருவிடைக்கழி திருவிசைப்பா தலப்பதிகங்களில் எழுந்த முதல் நூலாகக் கருதப்படுகின்றது. முருகனைப் பாட்டுடைத் தலைவனாக கொண்டு பாடப்பட்டுள்ளது இந்நூல். இந்நூல் பன்னிரு திருமுறையில் ஒன்பதாவது திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது சிவபெருமானை மட்டுமே பாடியுள்ள நூல்களின் தொகுப்பில் முருகனைத் தலைவனாக கொண்டு பாடப்பட்டுள்ள திரு. விடைக்கழி திருவிசைப்பா சேர்க்கப்பட்டுள்ளமை முருக வழிபாடு பெற்றிருந்த வளர்ச்சியையும் உன்னதத்தையும் புலப்படுத்துவதாக உள்ளது "மலைமகள் மதலை" "பொன்மலை வில்லிதன் புதல்வன்" என்று முருகனின் தாயும் தந்தையும் முதன்மையாக வைத்து சிறப்பிக்கபட்டி-ருக்கின்றனர். திருவிசைப்பா 10ஆம் பாடல் சிவபெருமானே முருகன் இருவரும் வேறானவர் அல்லர்" என்ற குறிப்பும் வருகின்றது முருகனது கோழிக் கொடியும், ஊர்தியாகிய யானையும் மயிலும் பல இடங்களில் புகழ்ந்து பேசப்படுகின்றன.

திருமந்திரத்தில் 1026ஆம், 2758 ஆம் பாடல்களில் முருகனும் சிவனும் ஒன்று என்று சிவனே ஆறுமுகனாக தோற்றமளிக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

*எந்தைப் பிரானுக்கு இரு மூன்று வட்டமாய்த்*
*தந்தை தன் முன்னே சண்முகந் தோன்றலால்*
*கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலாள்*
*மைந்தன் இவனென்று மாட்டிக் கொள்ளீரே*

கந்தக் கடவுள் ஆறுமுகத்துடன் விளங்குவான் என்று குறிப்பிடுகின்றார். இறைவன் தன்மையோடு அவன் வெளிப்பாடாய் முருகன் தோற்றுவிக்கப்பட்டான் என்ற குறிப்பும் அவனுடைய தனித் தன்மையும் இப்பாடலால் அறிய முடிகிறது.

இடைக்கால இலக்கியங்களான கல்லாடத்தின் நூன் முகப்பிலே யானைமுகக் கடவுள் வாழ்த்தும் முருகன் கடவுள் வாழத்தும் காணப்படுகின்றன. முருக கடவுள் வாழ்தது 65 வரிகளில் அமைந்துள்ளது முருகன் பிறப்பு சூரனை வதைத்தமை, பிரம்மனை சிறையிலிட்டமை, வள்ளியை மணந்தமை போன்ற செய்திகள் காணப்படுகின்றன.

பன்னிரண்டாம் திருமுறையில் சேக்கிழார் சுவாமிகள் முருகன் சரவணப்பொய்கையில் தோற்றுவிக்கப்பட்டான். என்பதையும் அவர் இறைவனது குமார் எனக் குறிப்புப்படவும் "சரவணத்துத் தனையர்" என்று கூறுகின்றார்.

அருணகிரிநாதர் இயற்றிய திருப்புகழ், மயில்விருத்தம், திருவகுப்பு, கந்தபுராணம் போன்ற அனைத்து நூல்களும் முருகனது திருப்பெருமைகளை எடுத்து இயம்புவனவே.

இவ்வாறாக பன்னிரு திருமுறைகளிலும் ஏனைய இலக்கியங்களிலும் முருகப்பெருமான் பற்றிய செய்திகள் இடம் பெற்றிருப்பதனை காணக்கூடியதாகவுள்ளது இவ்வாறாக முருகனது பெருமைகள் பழந்தமிழ் இலக்கியங்களில் பலவாறாக பேசப்படுகின்றன.

---

## வலம்புரிச் சங்கின் மகிமை

வலம்புரி சங்கு என்றும் வலது கைச் சங்கு என்றும் மற்றோரு பெயரான தக்ஷிணாமூர்த்தி சங்கு என்றும் வழங்கி வரும் சங்கு இந்துக்களுக்கு ஒரு இறைத் தன்மையுடன் கூடியது!

இது ஒரு மிக மிக அசாதாரணமான ரகத்தைச் சேர்ந்தது!! கடலிலிருந்து எடுக்கப்படும் எத்தனையோ லட்சோபலட்ச சாதாரணமான சங்குகளுக்கு இடையில் கிடைக்கும் ஒன்று. அதனுடைய COLUMELLA ஐ மேலும் APEX ஐ கீழேயும் வைத்தால் அதனுடைய குழி அல்லது பள்ளம் இடது பக்கம் இருக்கும். ஆனால் வலம்புரிச் சங்கோ மேற்சொன்ன நிலையில் வைக்கப்படும் பொழுது அதனுடைய குழி அல்லது பள்ளம் வலது பக்கம் இருக்கும்.

இந்த வலம்புரிச் சங்குகள் விலை மதிப்பொண்ணாதவை. பெரிய கோயில்களில் மூலவர்களுக்கு அபிஷேகம் பண்ணும் காலங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன வலம்புரிச் சங்கைப் பார்ப்பதே பெரும் புண்ணியமாகும்.

# திருவாதிரை நோன்பு

இது மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நன்னாளில் மேற்கொள்ளப்படுகின்றது இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. அதனால் சிவ பெருமான் ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறப்படுவான். மார்கழித் திங்கள் திருவாதிரை நாளன்று நடராஜப் பெருமானுக்குச் சிறப்புக்கள் நடைபெறும். அவற்றுள் தில்லையில் நடப்பது மிகச் சிறப்புடையது . ஏராளமான மக்கள் ஆருத்திரா தரிசனம் செய்வதற்காகத் தில்லைக்குச் செல்வர். ஆருத்திரா என்பது ஆதிரை.

சங்கர சங்கிதை என்னும் சமஸ்கிருத நூல் ஏழு காண்டங்களை உடையது. அதன் ஏழாம் காண்டம் உபதேச காண்டம் எனப்படும். அதில் திருவாதிரை விரதத்தின் மகிமை கூறப்பட்டுள்ளது. நடராஜர் தன் நடனத்தை பதஞ்சலிக்கும் வியாக்கிரபாதருக்கும் ஆடிக்காட்டியது. இந்தத் திருவாதிரை நட்சத்திரத்தன்றுதான். நடராஜருடைய ஆட்டம் உலகம் இயங்குவதையே குறிக்கிறது. அணுக்கள் முதல் அண்டங்கள் வரை எல்லாம் ஒழுங்கு முறை தவறாது ஆடுகின்றன. இந்த நடனத்தில் தான் வேதங்கள், ஆகமங்கள், கீதங்கள், கலைகள் முதலான சகலமும் உதயமாகின்றன.

நம்மை எல்லாம் ஆட்டி வைக்கிறவன் தானும் ஆடிக் கொண்டிருக்கிறான். அவன் ஆடுவதால்தான் உலகம் ஆடிக்கொண்டிருக்கிறது. அவனுடைய அற்புதக் கூத்தே உலக சிருஷ்டி. இந்த நடனக் கோலத்தை பல பக்திமான்கள் பலவிதமாகக் கண்டு ஆனந்தித்திருக்கிறார்கள். திருநாவுக்கரசர் கண்ட கோலத்தைக் கீழ்வரும் பாடல் விளக்குகிறது.

*குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்*
*குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்பொல் மேனியில்*
*பால்வெண்ணீறும்*
*இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்*
*காணப்பெற்றால்*
*மனித்தப் பிறிவியும் வேண்டுவதே*
*இந்தமாநிலத்தே!*

நடராஜர் நடனத்தை திருமூலர், காரைக்காலம்மையார், கல்லாடர், கபிலர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய அடியார்கள் பல கோணங்களில் கண்டு பரவசம அடைந்திருக்கின்றனர். திருமூலர் தான் இருந்த இடத்திலிருந்தே இதை அனுபவித்தார். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அன்பர்களே, ஈசன் திருநடனங் காணுங்கள் காணுங்கள் எனக்கூவி அழைக்கின்றர்.

*கூற்றிருக்கும் மடலாழிக் குரிசின் முதலோர்*
*இறைஞ்சக் கொழுந்தேன் பில்கி*
*ஊற்றிருக்கும் தில்லைவனத் தசும்பிருக்கும்*
*பசும் பொன்மன்றத்து ஒருதாள் ஊன்றி*
*வண்டுபாடச் சுடர் மகுடமாப் பிறைத்*
*துண்டமாடப்*
*புலித்தோலுமாடப் பகிரண்டமாடக் குலைந்து*
*அகிலாடக்*
*கருங்கொண்டலோடும் குழற்கோதையோடும்*
*கறைக்*
*கண்டனாடுந் திறன்காண்மினே.*

# அழுதால் உன்னைப் பெறலாமே என அழுது அடியடைந்த அன்பர் ஆளுடைய அடிகள்.

திரு. மா.க. ஈழவேந்தன்

நாம் விரும்பினும் விரும்பாவிடினும் அழுகையோடுதான் இவ்வுலகு தொடங்குகிறது. பிறந்தவுடன் குழந்தை அழவில்லை என்றால் அக்குழந்தை செத்துப்போய்விட்டது அல்லது சாகும் நிலையில் உள்ளது என்பது பொருள். நம் பாலகன் ஞானசம்பந்தர் பால் வேண்டி அழுதார். அவர் வேண்டியது தாயின் முலைப்பால். ஆனால் உமையம்மையாரோ தாயாக மாறி இவருக்கு ஞானப்பாலை வழங்க ஞாலம் அளந்த தமிழை அவர் பாடினார். நம் வள்ளுவப் பெருந்தகையோ தனது திருக்குறளில் ''ஆற்றாது அழுத கண்ணீர் செல்வத்தைத் தேய்க்கும் படை'' என்று கூறியதிலிருந்து ஒரு அரசையே கவிழ்க்கின்ற ஆற்றல் அழுகைக்குண்டு என்பதை நாம் அறியத்தக்கதாக இருக்கிறது. அறிஞர் அண்ணா மறைந்த போது அழுகையால் ஒரு உயிரை மீட்கமுடியும் என்றால் அறிஞர் அண்ணாவிற்கு அது நடந்திருக்க வேண்டும் 'If tears can bring back the life of an individual it should have happend in case of Anna.' என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழில் 1969 பெப்ரவரி 4ம் திகதி வெளிவந்த செய்தி எமக்கு நினைவிற்கு வருகிறது. இங்கும் அழுகையின் ஆற்றல் வலியுறுத்தப்பட்டுள்ளது.

திருவாசகம் முழுவதையும் நாம் பயில்கின்ற போது எம்மை மீறி கண்களில் கண்ணீர் பெருகுவது இயல்பு. எனவே தான் ''திருவாசகத்திற்கு உருகாதோர் ஒரு வாசகத்திற்கும் உருகார்'' என்ற தொன்மொழி எழுந்தது. திருவாசகத்தின் உள்ளடக்கம் 658 பாடல்கள். இப்பாடல்கள் ஒவ்வொன்றையும் உய்த்துணர்ந்து விளக்க எம் உள்ளம் விழைகிறது. ஆனால் அவ்விதம் செய்வதற்கு சூழ்நிலை தடுக்கிறது. செய்தி இதழ்களில் இட நெருக்கடியும் உண்டு என்பதையும் நாம் உணர்கிறோம். எனவே திருவாசகம் உணர்த்தும் அழுகையின் ஆற்றலை முதலில் விளக்குவதற்கு ஓரிரு பாடல்களையே இங்கு எடுத்து இயம்ப விரும்புகிறோம்.

*"யானே பொய் என் நெஞ்சும்*
*பொய் என் அன்பும் பொய்*
*ஆனால் வினையேன் அழுதால்*
*உன்னைப் பெறலாமே"*

என்று தொடர்ந்து செல்லும் இப்பாடல் அழுகையால் ஆண்டவனை அடைய முடியும் என்பதனை ஆளுடைய அடிகள் ஏற்றமுற எடுத்துரைத்துள்ளார். திருவாசகத்தில் திருச்சதகம் என்ற பகுதியில் வருகின்ற பின்வரும் பாடலையும் இங்கு கையாள விரும்புகிறோம்.

*மெய்தானரும்பி விதிர்விதிர்த்*
*துள்விரையார் கழற்கென்*
*கைதாள் தலைவைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பியுள்ளம்*
*பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி*
*சயசய போற்றி யென்றுங்*
*கைதா நெகிழ விடேன் உடையாய்*
*என்னைக் கண்டு கொள்ளே.*

இப்பாடல் கூட உள்ளமுருகி மெய்சிலிர்த்துக் கண்ணீர் விடுகின்ற போது கடவுள் எம்மைக் காப்பாற்றுவார் என்ற உண்மையை உணர்த்தி நிற்கிறது. மதுரை, பாண்டிய மன்னனின் அமைச்சரவையில் தென்னவன் பிரமராயன் என்னும் பெரும் பட்டத்தோடு தலைமை அமைச்சராக விளங்கியவர் நம் மணிவாசகப் பெருந்தகை. ஆனால் பணியுமாம் பெருமை என்பதற்கமைய ஆண்டவனை அடைய படிப்போ பட்டமோ பதவியோ துணைநிற்கப் போவதில்லை என்பதை உணர்ந்த நிலையில் "நானார் என்னுள்ளமார்

ஞானங்களார்'' என்ற மெய்விளக்க தத்துவ ஆராட்சியில் இறங்கித் தன் பதவியைத் துச்சமென மதித்து துறந்தவர் தூய மணிவாசகப் பெருந்தகை. இவர் சாதிவெறிக்கு சாவுமணி அடிக்கும் முறையில் "சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்தாட்கொண்ட இறையோனை'' இறைஞ்சி நின்ற இனிக் காட்சியையும் இவர் வாழ்வில் காண்கிறோம். இவர் பேரறிஞராக விளங்கிய போதும் பெரும் பதவி வகித்த போதும் வெறும் வேட்டுவன் கண்ணப்பனுடைய அன்புக்கு ஈடுகொடுக்க முடியாது என்பதை உணர்ந்த நிலையில் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என்னையன் என்னையும் ஆட்கொண்ட'' இறைவனை இறைஞ்சி நிற்கின்ற காட்சி எம் உள்ளத்தை அப்படியே உருக்குகிறது. என்று தான் ஆண்டவன் மீது செலுத்திய அன்பைவிட படிப்பறியாத வேட்டுவன் கண்ணப்பன் கடவுள் மீது செலுத்திய அன்பு தலையாயது என்பதை மணிவாசகர் மேற்குறித்துள்ள சொற்தொடர் நினைவுபடுத்துகிறது.

நம் மணிவாசகப் பெருந்தகையோ உலகில் எவரினுடைய துணையையும் நாடி நிற்கவில்லை மாறாக இறைவனையே முழுதும் நம்பி நிற்கின்ற காட்சியை அவர் பாடல்களில் காணலாம். பின்வரும் பாடல் இதற்குச் சான்று கூறுகிறது.

*உற்றாரை யான் வேண்டேன்*
*ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்*
*கற்றாரை யான் வேண்டேன்*
*கற்பனவும் இனி அமையும்*
*குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா*
*உன் குரை கழற்கே*
*கற்றாவின் மனம் போலக்*
*கசிந்து உருக வேண்டுவனே.*

இப்பாடலின் ஒவ்வொரு வரியையும் நாம் உற்றுணர வேண்டும். ஆனால் "கற்றாரை யான் வேண்டின் கற்பனவும் இனி அமையும்'' என்று கதறி அழும் காட்சி எம் கண்களைக் கலங்க வைக்கிறது. கடவுளை அடைவதற்கு கற்றோர் எமக்குப் பெருந்துணை நிற்கப்போவதில்லை. தொடர்ந்து படித்துப் பெறுகின்ற பட்டங்கள் கூட ஆண்டவனை அடைய எமக்கு வழிகாட்டப் போவதில்லை. எனவே தான் கற்றாரை யான் வேண்டேன் என்றும், கற்பனவும் இனி அமையும் என்றும் கல்விக்கு ஓர் எல்லை வகுக்கிறார் எம் வாதவூர் அடிகள். வேறு சொற்களில் விளம்பின் நாம் பெறுகின்ற கல்வியினால் மட்டும் நாம் கடவுளைக் காண முடியாது. சில வேளையில் எல்லை மீறிய கல்வி கூட எம்மை ஆணவத்தில் அழுத்தி ஆண்டவனை அடைவதற்குத் தடையாகவும் இருக்கக் கூடும். இதைத்தான் வேறு விதத்தில் "கல்லாதாரே நல்லார்'' என்று தாயுமான அடிகள் ஓரிடத்தில் கூறுகிறார். நம் ஞானசம்பந்தர் அவர்களோ ஏதுக்களாலோ எடுத்த மொழியாலோ இறைவனை மிக்கு சோதிக்க வேண்டாம் என்று இடித்துரைக்கும் அவர் உள்ளத் தூய்மையோடு இறைவனை நாம் ஓதியுணர்கின்ற போது எம் உள்ளத்தில் அவர் குடி புகுகிறார் என்பதனை இனிது எடுத்தியம்புகிறார்.

இதே மணிவாசகர் அவர்கள் மற்றுமோர் இடத்தில்

*"கற்று அறியேன் கலை ஞானம்*
*கசிந்து உருகேன் ஆயினினும்*
*மற்று அறியேன் பிற தெய்வம்*
*வாக்கு இயலால் வார் கழல் வந்து*
*உற்று இறுமாந்து இருந்தேன்*
*எம்பெருமானே அடியேர்க்குப்*
*பொன் தவிசு நாய்க்கு இடுமாறு*
*அன்றே நின் பொன் அருளே''*

என்ற பாடலிலும் கற்பதனாலோ கலைஞானம் பெற்றதனாலோ இறைவனை அடைய முடியாது ஆனால் கசிந்துருகுகின்ற போது இறைவன் காட்சியளிக்கிறான் என்பதை அவர் உணர்த்தும் பாங்கு எம்மை உய்விக்கிறது. அத்தோடு இப்பாடலில் சிறுதெய்வ வழிபாட்டிற்கு இடங்கொடுக்காது முழுமுதற் பொருளாகிய

சிவனிலேயே அவர் சிந்தை மூழ்கி இருந்தது என்பதையும் நாம் உணர்கிறோம்.

## கனவில் அல்ல நனவில் கடவுளைக் கண்டவர் மாணிக்கவாசகர்

மாணிக்கவாசகர் கடவுள் பற்றி வெறும் தத்துவம் பேசவில்லை மாறாக மாதொருபாகனை நேரிற்கண்டு பேரின்பம் துய்த்தவர். இதற்குச் சான்றாக "பேறு பெருந்துறையில் கண்ணார் கழல் காட்டி எனை ஆட்கொண்ட அண்ணாமலையான்" என்றும் "திகழா நின்ற திருமேனி காட்டி என்னைப் பணிகொண்டாய்" என்றும் "காட்டாதனவெல்லாங் காட்டி சிவங்காட்டித் தாள்தாமரை காட்டித் தன் கருணைத்தேன் காட்டி என்னை ஆட்கொண்ட இறைவா" என்றும் அவர் செப்பும் செம்மொழிகள் வெறும் வெற்றுரைகள் அல்ல. எனினும் எம்முள் ஐயம் கொள்ளும் சிலர் உளர் என்று எண்ணிப் போலும் கனவில் கடவுளை யான் காணவில்லை, நனவிலேயே கண்டேன் என்று எடுத்துக் கூறுவது போல் " நனவினும் நாயேற்கு அருளினை போற்றி" என்றும் "நனவே எனைப்பிடித்து ஆட்கொண்டவா" என்றும் அறுதியிட்டு உறுதியோடு உரைக்கும் கருத்துக்கள் உள்ளொளி பெற்ற உயர் கருத்துக்கள் என்று உணர்ந்திடுவோமாக.

## புத்தத்தை வெல்லும்போது புத்துயிர் பெற்றது சைவம்

மணிவாசகர் ஏற்றிப் போற்றும் சைவசித்தாந்த கோட்பாடு கிறித்துவிற்கு முன்னே தென்னகத்தில் நிலைத்து நின்றதெனினும் கி.பி. 5ஆம் நூற்றாண்டு 6ஆம் நூற்றாண்டுகளில் புத்த சமண மதங்களை எதிர்த்தே சைவமும் அத்துடன் வைணவமும் பெரும் வலிமைப் பெற்றன என்ற கருத்தை பின்வருமாறு இந்திய மெய்விளக்குனர் - தத்துவவொளியாகிய இராதாகிருஷ்ணன் ஆங்கிலத்தில் கூறுவதும் இங்கு எம் சிந்தனைக்கு உரியது. "Saiva Siddhanta while it prevailed in south India even before the christian era it received a great access of strength from its opposition to Buddhism and Jainism which it along with Vaishnavaism overcame about the fifth or the sixth century after christ".

## தமிழை மணந்த தவமுனிவன்

எம் மாணிக்கவாசகப் பெருந்தகை முற்றும் துறந்த முனிவர். 'மண், பெண், பொன்' என்ற ஆசைகள் அனைத்தையும் அறவே துறந்தவர். ஆனால் அவரால் தமிழைத் துறக்க முடியவில்லை. அதனாற்றான் "உயர் மதிற் கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்" என்று தமிழின் பெருமையை திருக்கோவையாரில் திறம்பட எடுத்து இயம்புகிறார். அத்துடன் இறைவனை விளித்துப் பாடுகையில் "தண்ணார் தமிழளிக்கம் தண்பாண்டி நாட்டானை" என்று தான் பிறந்த தமிழ் வளர்த்த பாண்டி நாட்டினை தன்னையே மறந்த நிலையில் பெருமித உணர்ச்சியுடனும் பேருவகையுடனும் போற்றிப் புகழ்கிறார். அதுமட்டுமல்ல எந்நாட்டவருக்கும் இறைவனாக சிவன் விளங்கினும் அவன் தென்னாட்டுச் சிவன் என்பதை "தென்நாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று அவர் பாடிய பாடல்கள் அவருக்குத் தான் பேசியமொழியில் இருந்த தணியாத காதலையும் தான் வாழ்ந்த நாட்டில் இருந்த தனிப்பற்றினையும் தகை சான்ற முறையில் எடுத்துக் காட்டுகிறது.

## *சொல்லிய பாட்டின் பொருள் உணர செந்தமிழிற் செப்பிடுக*

'வேதம் ஓதின் விழிநீர் பெருகுவதில்லை எமக்கு. ஆனால் ஆங்கொருகால் திருவாசகம் ஓதின் எம்மையறியாமலே கண்களில் நீர் பெருகுகிறது' காரணம் முன்னையது எமக்குப் புரியாத வட மொழியில் எழுதப்பட்டிருப்பது. பின்னையது எமக்குப் புரியும் உள்ளம் உருக்கும் உயர் தமிழில் எழுதப்பட்டிருப்பது. உள்ளம் தொடும், புரியும் மொழியிலே வழிபடும் போது தான் இறையின் இனிய இயல்பை யாம் உள்ளத்தில் உய்த்துணரத்தக்கதாய் இருக்கிறது. அதனாற்றான் "சொல்லிய பாட்டின் பொருள்

உணர்ந்து சொல்ல வேண்டும் '' என்று மணிவாசகர் வேண்டுகிறார். வேறு சொற்களில் விளம்பின் இன்பத் தமிழால் இறைவனைப்பாடி அன்பைப் பெருக்க வேண்டும் என்பதுவே மணிவரசகர் உள்ளக் கிடக்கை என்பதை யாம் உணரத் தக்கதாய் இருக்கிறது. ஏன் திருவாதவூரரின் தித்திக்கும் திருவாசகத்தில் உள்ளடங்கியுள்ள போற்றித் திருவகவலை விட இறைவனை வழிபட - அருச்சனை செய்ய வேறு சிறப்பு வழிபாட்டு முறை உண்டோ யாம் அறியோம்.

## மணிவாசகர் வழியில் தெ.பொ.மீ

சொல்லிய பாட்டின் பொருளை உணர்த்தி உள்ளம் உருக்கும் தன்மை உயர் தமிழுக்கே உண்டென்ற மணிவாசகர் கருத்திற்கு வழிமொழி கூறுவதுபோல் பன்மொழிப்புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் தன் பன்மொழி அறிவின் துணை கொண்டு தமிழின் தகை சான்ற தன்மையை - அதனின் குழைவைப் பின்வருமாறு கூறுவது எம்மையெல்லாம் உணர்ச்சியின் உச்ச நிலைக்கு அழைத்துச் செல்கிறது 'இலத்தீன் மொழி சட்டத்திற்கும் ஆங்கிலம், செருமன், பிரெஞ்சு முதலியன அறிவியலுக்கும், சோவியத் மொழிகள் ஏகேசுவரவாதத்திற்கும், வடமொழி இலக்கணம் மெய்ப்பொருள் முதலியனவற்றிற்கும், தமிழ் ஆன்மீக கிளர்ச்சிக்கும் மிக வாய்ப்பான மொழிகள். இம்மொழிகளை ஆழக் கற்றாலொழிய இவற்றை உணர முடியாது. இவ்வாறே தமிழ் அருளாளர்களது தமிழ்க் கவிதைகளைப் பயிலுங்கால் நாம் அவர்கள் கண்ட அனுபவங்களை எய்துகின்றோம். இறைவனோடு இரண்டறக் கலந்த அவர்களுடைய இனிய அருட் பேறுகளை உணர்கிறோம். "if the reality of law cannot be appreciated without a study of Latin if science cannot be fathomed without a study of English, French and German., if monotheism cannot be understood without a study of soviet languages, if philosophy and grammar cannot be admired without a study of Sanskrit, the depth of the literature of hymns or soul stirring songs cannot be plumbed except through Tamil. When we read the poems of the Tamil saints, thanks to their poetry we experience perhaps as it were in a dream their mystic communion with god'.

## நில்லா உலகில்
## நீடு புகழை நிலைநாட்ட

இதனாற்றான் "நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோமே" என்று கூறி பற்றற்றான் பற்றினைப் பற்றி உலகப் பற்றுக்கள் அனைத்தையும் துறந்த தூய துறவியான மணிமொழியாளராற் (மணிவாசகர்) கூட தன் உள்ளத்தில் ஊற்றெடுத்த உயிரனைய உன்னத கருத்துக்களுக்கு உருவமும் வடிவமும் கொடுத்த வளம் செறிந்த தமிழையும் தன்னைத் தோற்றுவித்து தன் உலகளந்த உயர் சிந்தனைகளுக்கு நிலைக்களமாய், வற்றாத ஊற்றாய் விளங்கிய தென் பாண்டிய நாட்டையும் தென்னகமாம் தமிழகத்தையும் அவரால் மறக்க நினைத்தாலும் மறக்க முடியவில்லை. தேன் கலந்த வாசகம் தந்த வான் கலந்த மாணிக்கவாசகரின் நிலையே இதுவாய் இருக்கும்போது தமிழ் மரபில் தோன்றி தமிழ்த் தாய்மாரின் நெஞ்சை அள்ளும் கொஞ்சும் தமிழ்த் தாலாட்டில் வளர்ந்த நாம், தமிழ் பேசி தமிழர் சூழ்நிலையில் வாழும் நாம் எவ்விதம் எம் பிறந்த மணிமீது பற்றற்று எம் பேசும் மொழியை விட்டொழித்து இம்மைக்கும் மறுமைக்கும் வழித்துணையாய் - உயிர் ஊற்றாய் விளங்கும் செந்நெறியாம் சிவநெறியைத் துறந்து எம்மை வெறுத்து ஒதுக்கி எம்மை மீளா அடிமைகளாக ஆக்கக் கங்கணம் கட்டும் மாற்றார்க்கு மண்டியிட்டு வாழமுடியும். மணிவாசகர் மாண்பு எம்மை வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கும் மாண்பு என்பதை யாம் உணராமல் இருக்க முடியுமா?

# பாணந்துறை அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

பாணந்துறை மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய காலஞ்சென்ற உயர்திரு. ஸ்பென்சர் இராசரட்ணம் அவர்களின் பெரும் முயற்சியாலும், பல பௌத்த பெரியார்களும், தமிழ் வர்த்தக பெருமக்களும் ஏனையோரும் நல்கிய பொருள் உதவியாலும் 1952ஆம் ஆண்டு மேற்படி ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது.

பூசை வழிபாடுகள் செவ்வனே நடைபெற்று வருகையில் 1958ஆம் ஏற்பட்ட கலவரம் காரணமாக ஆலயம் சேதமடைந்தது. இக்கோவிலின் குருக்கள் கொல்லப்பட்டார். அதன் பின்னர் பிரதேச மக்களின் பெரும் முயற்சியினால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு, மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பூசை, திருவிழாக்கள் என்பன நடைபெற்று வந்துள்ளன. தூக்கு காவடிகள், யானைகள் பவனி வர தேரில் முருகக்கடவுள் வள்ளி, தெய்வானை சமேதராக காலி பிரதான வீதியூடாக பாணந்துறை நகரை வலம் வருவது மிகவும் பக்திபூர்வமான திருவிழாவாக இருந்தது.

அதன் பின்பு 1977ஆம் ஆண்டு நிகழ்ந்த வன்செயலின் போதும் கோவில் சிதைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் தடைப்பட்டன. மேலும் 1983ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரத்தின் போதும் இக்கோவில் மேலும் சேதத்திற்கு உள்ளானது.

இவ்வாறு பாதிக்கப்பட்டு இருந்த இக்கோவில் 1985ஆம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி அமைச்சராக இருந்த திரு. செ. இராசதுரை அவர்களினால் திருத்தியமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடாத்தப்பெற்று, நித்திய பூசைகள் செய்வதற்கு என இந்து பிராமணர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். அப்பகுதி காடையர்கள் இந்து குருமாருக்கு இடையூறு விளைவிக்க அவர்கள் அவ்விடம் விட்டு அகன்றனர். இதன் பின்பு 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த திரு. எட்மன் அவர்கள் கோவிலில் கப்புறாளையாக நியமிக்கப்பட்டு, நாளாந்த பூசைகளை நடாத்தி வந்தார்.

மிகவும் பாழடைந்த நிலையில் காணப்பட்ட ஆலயத்தை தம்மிடம் தந்தால் தாம் அதைத் திருத்தி பூசை வழிபாடுகளை மேற்கொள்வதாக அவ்விடத்தில் வாழும் புத்தகுரு தலைமையில் புத்த சமயத்தைச் சார்ந்த சிலர் 2006 யூன் மாதமளவில் கோரிக்கை விடுத்தார்கள். இந்நிலையில் இந்து சமய, கலாசார திணைக்களம் தேவையான திருத்த வேலைகளை மேற்கொண்டு புதிய இந்து குரு ஒருவரை 15.07.2008ஆம் திகதி முதல் நியமித்து இந்து சமய முறைகளின்படி பூசைகளை நடத்தி வருகின்றது.

கடந்த 02.09.2008ஆம் திகதி சமய விவகார அமைச்சர் கௌரவ. பண்டு பண்டாரநாயக்க, மேல்மாகாண முதலமைச்சர் கௌரவ. ரெஜினோல்ட் குரே, சமய விவகார ஒழுக்க மேம்பாட்டு அமைச்சின் செயலாளர். எச்.எம். ஹேரத், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. சாந்தி நாவுக்கரசன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் விசேட பூசை ஒன்று இக்கோவிலில் நடைபெற்றது. 2009ஆம் ஆண்டு ஆரம்ப பகுதியில் மகா கும்பாபிஷேகத்தினை நிகழ்த்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சேரல்

பெயர் :...............................................................

முகவரி :...............................................................

...............................................................

தினக்குரல் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட். தொ : 2449688